Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 ஆடி 03 வெள்ளிக்கிழமை (19.07.2013) பக்கங்கள் 20 ஓசை – 292





விலகல்? (08)


தமிழின தலைவனின் நிலை? (10)


சுதந்திரம் வேண்டும் (11)


புதிய சேவை (14)


தேசிய மட்டத்தில் முதலிடம் (17)

# ஒட்டுசுட்டானில் மீண்டும் ஓடு உற்பத்தி தொழிற்சாலை

## நூற்றுக்கணக்கானோருக்கு தொழில்வாய்ப்பு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கூழாம்முறிப்பில் அமைந்துள்ள ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலையை மீள இயக்குவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் சுற்றுலா விடுதியில் மேற்படி விடயம் தொடர்பிலான கலந்துரையாடல் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, குறித்த தொழிற்சாலையில் பணியாற்றிய முன்னாள் ஊழியர்களுடன் கலந்துரையாடிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அவர்களது பிரச்சினைகள் மற்றும் தேவைகள் தொடர்பில் அவதானம் செலுத்தி கேட்டறிந்து கொண்டார்.

குறிப்பாக முன்னாள் ஊழியர்களது சம்பளம் மற்றும் நஷ்டஈடு தொடர்பாக துறைசார்ந்தோருடன் ஆராய்ந்து கலந்துரையாடி உரிய பதில் பெற்றுத்தரப்படுமென தெரிவித்த அமைச்சர், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தைக் கட்டியெழுப்புவதற்கும் உங்களதும் நீங்கள்சார்ந்து வாழும் சமூகத்தினதும் வாழ்வாதாரத்தை


(19) ஆம் பக்கம் பார்க்க

## அமைச்சர் சுசில் யாழ்ப்பாணத்தில் இன்று

(கொழும்பு)

வடமாகாண சபைத் தேர்தலின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை தெரிவு செய்வதற்கு பொறுப்பாகவுள்ள அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## கவிஞர் வாலி இயற்கை எய்தினார்



தமிழ் சினிமாவின் இணையற்ற கவிஞர்களில் ஒருவரும், கால ஓட்டத்தால் அடிபட்டுப் போகாத பல தேமதுர தமிழ்ப் பாடல்களைப் படைத்தவருமான கவிஞர் வாலி நேற்று மாலை 5 மணிக்கு மரணமடைந்தார். மரணமடையும் போது அவருக்கு வயது 82.

வாலியின் இயற்பெயர் ரங்கராஜன். ஸ்ரீரங்கத்தில் 1931 ஆம் ஆண்டு பிறந்தவர். ஆரம் பத்தில் அகில இந்திய வானொலியில் நிலையக்கலைஞராக பணியாற்றிய வாலி, பின்னர் சினிமாவில் பாடலாசிரியராக 1958 இல் வாழ்க்கையைத் தொடங்கினார். எம்.ஜி.ஆருக்காக

(19) ஆம் பக்கம் பார்க்க

# கூட்டமைப்பின் வேட்பாளர் தெரிவு இறுதி முடிவு இன்னும் இல்லை

## நேற்றைய கூட்டத்திலும் இழுபறி

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் தெரிவுக்கான தீர்மானத்தினை எடுக்கமுடியாத நிலையில் மீண்டும் இன்று கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் நேற்றுத் தெரிவித்தனர்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட காரியாலயத்தில் நேற்று மாலை 3.30 மணியளவில் கூடிய தேர்தல் நியமனக் குழுவினர்களான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா மற்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவஞானம் சிறிதரன் உட்பட வவுனியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மற்றும் சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா ஆகியோர் இரண்டாம் நாளாக நேற்று மீண்டும் கலந்துரையாடினர்.

சுமார் 3 மணித்தியாலயங்கள் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் தமிழ்த் தேசியக்

(19) ஆம் பக்கம் பார்க்க

# ஒன்பது கிலோ தங்கம் சுருட்டல்; யாழில் பாரிய மோசடி

(யாழ்ப்பாணம்)

சுமார் 1,100 பவுணிற்கு மேற்பட்ட தங்க நகைகளை மோசடி செய்ததாக பாதிக்கப்பட்டவர்கள் யாழ். பொலிஸ் நிலையத்தில் இரு பெண்களுக்கு எதிராக முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.

யாழ். மடத்தடி வீதி மற்றும் குருநகர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இந்த இரு பெண்களும் குறித்த பகுதிகளைச் சேர்ந்தவர்களிடம் வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் அதிகூடிய வட்டி வழங்குவதாக கூறி பல்வேறு பெண்களிடம் தாலிக்கொடி மற்றும் சங்கிலி போன்ற பெறுமதி மிக்க நகைகளை பெற்றுக் கொண்டுள்ளனர்.

கடந்த ஒரு வருடமாக இவ்வாறு நகைகளை பெற்றுக் கொண்ட இரு பெண்களும் நகைகளை மீளத் தருவதாக கூறி ஏமாற்றி வந்துள்ள அதே வேளை இவர்கள் அதி நவீன வசதியுடன் கூடிய வீடு கட்டியுள்ளனர்.

(19) ஆம் பக்கம் பார்க்க

# காணிகளின் வரைபடங்கள் இனி இணையத்தளத்தில் பெறலாம்

(கொழும்பு)

இணையத்தளம் ஊடாக காணிகளின் வரைபடங்களை பரிசீலிக்கும் வசதிகளை ஏற்படுத்துவதற்கு நில அளவையியலாளர் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்கீழ் நில அளவை திணைக்களத்தினால் அளவீடு செய்யப்படுகின்ற காணிகளின் வரைபடங்களை பரிசீலிப்பதுடன் ஸ்கேன் தொழில்நுட்பம் மூலம் அவற்றின் பிரதிகளை பெற்றுக் கொள்வதற்கும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பிரதி அளவையியலாளர் நாயகம்

(19) ஆம் பக்கம் பார்க்க

# முதல்வர் வேட்பாளர் தெரிவை மீள்பரிசீலிக்க வேண்டும்

## தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் கோரிக்கை

வடக்கு மாகாண முதல்வர் வேட்பாளர் தெரிவை உடனடியாக மீள்பரிசீலிக்கும்படி கூட்டமைப்பிடம் வடக்கில் உள்ளதமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் பலர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழரின் எதிர்பார்ப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை தவிடுபொடியாக்கியுள்ளது. வடக்கு முதலமைச்சராக மாவை சேனாதிராஜா வரவேண்டும் என்று தமிழ்ச் சமூகம் எதிர்பார்த்தவேளை அதற்கு மாறாக கட்சியின் தலைமை தன்னிச்சையாக முடிவெடுத்து விக்னேஸ்வரனை முதலமைச்சர் வேட்பாளராக நியமிக்கத் தீர்மானித்துள்ளது. எனவே, விக்னேஸ்வரனை வடக்கின் முதலமைச்சர் வேட்பாளராக நாம் ஏற்கமாட்டோம்.

இவ்வாறு யாழ்.பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பிரமுகர்கள் மற்றும் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கொழும்பில் இருந்து யாழ்.திரும்பிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகமும் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளருமான மாவை சேனாதிராஜாவை நேரில் சந்தித்தே இவர்கள் மேற்கண்டவாறு

(19) ஆம் பக்கம் பார்க்க

# வெதுப்பகங்களில் சுகாதார சீர்கேடு

## சுகாதாரப் பகுதியினர் பாய்ச்சல்

(திருநெல்வேலி)

பொதுமக்களின் சுகாதாரத்துக்கு கேடு விளைவிக்கும் வகையில் வெதுப்பகங்கள் மற்றும் உணவகங்களை வைத்திருந்ததாக உரும்பிராய் பகுதியில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களினால் அடையாளம் காணப்பட்ட எட்டுப்பேர்களுக்கு எதிராக யாழ்.நீதவான் நிதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் எட்டுப்பேர்களுக்கு 52 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து யாழ்.நீதிமன்ற நீதவான் பெ.சிவகுமார் தீர்ப்பளித்தார்.

(19) ஆம் பக்கம் பார்க்க

# மாணவர்களின் கல்வியை மேம்படுத்த அனைத்து உதவிகளும் வழங்கத் தயார்



மாணவர்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதோடு அவர்களின் புறச்சூழல் காரணிகளும் அவர்களின் கல்வியை மேம்படுத்துபவையாக திகழ .வேண்டுமென ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி . அலன்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

அண்மையில் மகிந்தோதய திட்டத்தின் . கீழ் அமையப் பெறவுள்ள விஞ்ஞான ஆய்வு கூடத்திற்குரிய அடிக்கல்லினை மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நாட்டி வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மாணவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு அவர்களின் புறச்சூழல் காரணிகளும் அவர்களின் கல்வியை மேம்படுத்துபவையாக திகழ வேண்டும். பெற்றோர்கள் வீட்டில் தமது பிள்ளைகளுக்கு எந்த வகையிலும் மன அழுத்தம் ஏற்படாத வகையில் செயற்படுவதுடன் அவர்களின் பாடவிதான செயல்முறைகளுக்கு உந்துசக்தியாக திகழ்வதோடு வீட்டிலும் கல்வி பயிலக்கூடிய சூழலை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும்.

அதனுடன் மாணவர்களுக்காக அரசினால் அறிமுகப்படுத்தப்படும் புதிய திட்டங்களை சரியான முறையில் பயன்படுத்தி சிறந்ததோர் எதிர்காலத்தினை உருவாக்க வேண்டும் எனக்கேட்டுக் கொண்டதுடன் மாணவர்களின் கல்வித் தேவைகளுக்காக எவ்விதமான உதவிகளையும் வழங்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வோடு இணைந்து வழங்கத் தயாராகவுள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, யாழ்.இளவாலை புனித கென்றிக் கல்லூரி, பண்டத்தரிப்பு உயர்தர மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகளுக்குரிய அடிக்கல்லினை நாட்டி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் வலிகாமவலயக்கல்விப்பணிப்பாளர் சந்திரராஜா, கோட்டக்கல்விப் பணிப்பாளர், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் மானிப்பாய் பிரதேச இணைப்பாளர் ஜீவா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தொழில் நுட்பத்திறன் விருத்தி பயிற்சிக்கான நேர்முகத்தேர்வு

வடமாகாண ஆளுநர் வழிகாட்டலுக்கமைவாக, தொழிற்துறைத் திணைக்களமும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும் இணைந்து வடமாகாணத்தில் ஆயிரம் இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்பினை வழங்கும் பொருட்டு ஏற்கனவே விண் ணப்பங்கள் கோரியதற்கு அமைவாக யாழ்ப்பாணத்தில் பயிற்சி பெறவிரும்பும் விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகத் தேர்வு பின்வரும் திகதிகளில் நடைபெறுகின்றது.

எனவே விண்ணப்பதாரிகள் விண்ணப்பித்த பயிற்சி நெறிகளுக்கான நேர்முகத் தேர்விற்கு உரிய திகதிகளில் பின்வரும் ஆவணங்களுடன் சமூகம் தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.


தேசிய அடையாள அட்டை, பாடசாலை விடுகைப் பத்திரம் அல்லது கல்வித் தகைமை சான றிதழ் போட்டோப் பிரதியுடன் மூலப்பிரதி. கிராம அலுவலரின் உறுதிப்படுத்தப்பட்ட வதிவிடச்சான்று , வங்கிக் கணக்கு புத்தகங்கள் (குறித்த நபர்களுடையது)

நடைபெறும் இடம் யாழ்.வீரசிங்கம் மண்டபம் தொழிற்பயிற்சி அதிகார சபை அலுவலம் 2 ஆம மாடி, யாழ்ப்பாணம்.

நாளை சனிக்கிழமை 8.30 மணி முதல் 2 மணி வரை வீட்டு மின் இணைப்பு ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணி தொடக்கம் 2 மணி வரை நீர்க்குழாய் பொருத துதல் பயிற்சி நெறி, மரவேலை பயிற்சி நெறி, கட்டடவேலை பயிற்சி (மேசன்)


நேர்முகத் தேர்விற்கு சமூகம் தாராத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# கிளிநொச்சியில் மின்தடை



பிரதான மின்மார்க்கத்தில் திருத்த வேலைகள் இடம்பெறுவதால் கிளிநொச்சி பிரதேசத்தில் இன்று மின்சாரம் தடைப்பட்டிருக்கும்

காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை இந்த மின்சாரத் தடை இருக்குமென கிளிநொச்சி மின்சார சபையினர் அறிவித்துள்ளனர்.



பருத்தித்துறை புலோலி பசுபதீஸ்வரர் சிவன் ஆலயத்தின் வருடாந்த இரதோற்சவம் மற்றும் தீர்த்தோற்சவக் காட்சிகள் (116)

# விளையாட்டு விழா

புன்னாலைக்கட்டுவன் தெற்கு கணேசா முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுவிழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கணேசா சனசமூக நிலையத்தலைவர் ஆ.திருநாவுககரசு தலைமையில் நடைபெறும்.

யாழ்.நிர்வளச் சபை உத்தியோகத்தர் லயன் கே.குபர குருபரன் பிரதம விருந்தினராகவும் யாழ்.சிட்டிசன் டெவலப்பன் வங்கியின் முகாமையாள சுதர்சன் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளனர். (


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2444 திகதி 17-07-2013

ஆங்கில எழுத்து: E

வெற்றி எண்கள் 16 30 37 39

போனஸ் இல: 63

ஜக்பொட் பரிசு ரூ.16,011,275/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 249378 | 20/- | 4,987,560/- |
| 2 இல | 17813 | 100/- | 1,781,300/- |
| 3 இல | 363 | 1,000/- | 363,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 9871 | 40/- | 394,840/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 668 | 1,000/- | 668,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 20 | 10,000/- | 200,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 16,011,275/- | - |
| 1 இல + போனஸ் இல | 11867 | 100/- | 1,186,700/- |
| 2 இல + போனஸ் இல | 557 | 500/- | 278,500/- |
| 3 இல + போனஸ் இல | 07 | 100,000/- | 700,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 480 | 200/- | 96,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 33 | 1,500/- | 49,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 291058 | | 11,705,400/- |

பச்சை நிற டிக்கட்டுகள் 2013 ஜூலை 20 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ. 16,691,075/-

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

C/2946


# சமூக முன்னேற்ற கழகங்களின் சமாசம் யாழில் முப்பெரும் விழா

சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம், புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத்துடன் இணைந்து நடாத்தும் முப்பெரும் விழா எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் முழுநாள் விழாவா்க நடைபெறவுள்ளது.

காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை காலை, மாலை நிகழ்வுடன் மதிய உணவு இடைவேளை ஒரு மணி நேரம் தவிர்ந்த நிகழ்வுகள் இடம் பெறுமென் அறிவிக்கப்பட்டது.

காலை நிகழ்வுக்கு கி. கணேஸனும் மாலை நிகழ்வுக்கு க.சிவஞானமும் தலைமை தாங்குவார்கள்.

பிரதம விருந்தினர் களாக பேராசிரியர் சு.மோகனதாஸ், பேராசிரியர் நா. சண்முகலிங்கன், உடுவை எஸ். தில்லை நடராசா, மேல் நீதிமன்ற நீதிபதி அ.பிரேமசங்கர், பேராசிரியர் கோ. சந்திரசேகரம், பேராசிரயர் சபா. ஜெயராசா, சைவப் புலவர் வ.செல்லத் துரை ஆகியோர் கலந்து கொள்வர்.

சிறப்பு விருந்தினர்களாக எஸ்.வன்னியகுலம், வீ.தனபால சிங்கம், சி.கோணேஸ்வரன, க.கணேசமூர்த்தி என்.வித்தியாகாரன், ச.பாலசுப்பிரமணியம், வி.இராஜேந்திரம், வி.அருளானந்தம், எஸ்.சிவபாதம், சி.பாஸகரா ஆகியோர் கலந்துகொள்வர்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம் பந்த பரமசார்ய சுவாமிகள் ஆசியுரையும், இ.அன்னலிங்கம், தமிழருவி த.சிவகுமாரன், கு.பாலகிருஷ்ணன் ஆகியோரின் வாழ்த்துரைகளும் இடம்பெறும்.

விழாவின் முக்கிய அம்சமாக எழுச்சித் தந்தை ஆர்.எம்.நாகலிங்கத்தின் 65 ஆண்டுகள் சமூக மேம் பாட்டுச் சேவை நலன் பாராட்டும் எழுச்சிப் பாதை நூல் வெளியீடும், சாதனையாளர களுக்கு விருது வழங்கிக கௌரவித்தலும் இடம் பெற உள்ளன.

சமூகஜோதி சமூகப்பற்றாளர் புரட்சி ஜோதி வைதிய ஜோதி ஜோதிடக் கலா ஜோதி, புகைப்படக் கலாஜோதி, இசையணிக் கலாஜோதி, விருதுகளுடன் விழுமியச செல்வர் வித்தியா திலகம் கணனி வித்தக இளவல் விருதுகளை 50 விற்பன்னர்கள் பெறவுள்ளனர்.

5 ஆம் ஆண்டுப் புலமைப் பரிசிலில் சித்தி பெற்ற 10 மாணவர்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா வழங்கிவைக்கப்பட இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (68)

## தவறிவிட்டது

ஊற்றுக்குளம் கிளிநொச்சியை சேர்ந்த சின்னமுனியாண்டி அருணாச்சலம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (551431770V) மக்கள் வங்கி அடைவுச்சீட்டு, முக்கிய ஆவணங்கள் கிளிநொச்சி பாதை பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும்.

தொடர்பு-
இல. 56, பொதுச்சந்தை கிளிநொச்சி (R/201)

## பசு வளர்ப்புத்திட்டம் உதவி வழங்க நடவடிக்கை

(கரணவாய்)

கரவெட்டி கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையினால கன்னிப் பசு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் ஒரு மாதத்திற்குட்பட்ட கன்றுகளை பணிமனையில் பதிவு செய்யுமாறு கால்நடை வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

இச் செயற்றிட்டத்தின் ஒரு அங்கமாக சினைப்படுத்தும் திட்டத்தின் மூலம் சினைப்படுத்தப்பட்ட ஒரு மாதக் கன்றுகளையே பதிவு செய்யுமாறு தெரிவித்துள்ளதுடன், பதிவை மேற்கொள்வோருக்கு உதவித்திட்டத்தின் கீழ் 10 ஆயிரம் ரூபா நிதி உதவி வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (18)

## தேசிய விஞ்ஞான வகுப்பு வேலணையில் ஆரம்பம்

(வேலணை)

கல்விப் பொதுத்தராதர உயர்தர மாணவர்களுக்கிடையிலான தேசிய ரீதியிலான விஞ்ஞான தொழில்நுட்பத்துறை வகுப்பிற்கான ஆரம்ப நிகழ்வு கடந்த திங்கட்கிழமை வேலணை மத்திய கல்லூரியில் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. விஞ்ஞான தொழில்நுட்பத்துறை பொறுப்பாசிரியர் நவாக்ஷன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவக வலய கல்விப்பணிப்பாளர் தி.ஜோன் குயின்ரஸ் கலந்துகொண்டு ஆரமபித்து வைத்தார். (05)

# சமூக சேவைகளில் ஈடுபடுபவர்களை மதிக்க கற்றுக்கொள்ளவேண்டும்

### யாழ். பல்கலைக்கழக விவசாயபீட பீடாதிபதி



(திருநெல்வேலி)

மக்களுக்கான சேவைகளை செய்பவர்கள் போற்றுதற்குரியவர்கள். காய்க்கின்ற மரம் கல்லெறிக்குள்ளாவதைப்போல சேவையில் ஈடுபடுபவர்கள் மீது குற்றம் குறை காண்பவர்களும் உள்ளனர்.

இவர்களை எவரும் ஒரு பொருட்டாகக்கருதுவதில்லை என யாழ். பல்கலைக்கழக விவசாயபீடப் பீடாதிபதி பேராசிரியர் கு.மிகுந்தன் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தெல்லிப்பளை துர்க்கா மகளிர் இல்லப் புதிய கட்டடத் திறப்பு விழாவும், 31 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் அன்னைபூரணி மண்டபத்தில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி அறுதிருமுருகன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

தொடர்ந்து உரை நிகழ்த்திய பேராசிரியர், யாழ்ப்பாணத்தில் புற்றுநோயால் பாதிக்கப்படுபவர்கள் அதிகளவில் காணப்படுகின்றனர்.

விவசாயத்துக்குப் பயன்படுத்தப்படும் கிருமிநாசினிகள் இதற்கு முக்கிய காரணிகளாகும். எமது பிரதேசம் சுத்தமானது. வளமான இப் பூமியில் வளம் நிறைந்த வாழ்க்கையை எம்மால் வாழமுடியும்.

பல்கலைக்கழகங்களுக்குப் பொறுப்புக்களும் கடப்பாடுகளும் அதிகம். கிளிநொச்சியில் விரைவில் விவசாயபீடம் அமைககப்படவுள்ளது. பொறியியல்பீடமும் உருவாக்கப்படவுள்ளது. மாணவர்களுக்கான கல்வி வழிகாட்டலை வழங்க வேண்டியது எமது கடமையாகும்.

சைவத்துக்கும், தமிழுக்கும் அரும்பணியாற்றிய சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி வாழ்ந்த இப் புண்ணிய பூமிக்கு என்றும் ஒரு தனித்துவம் உண்டு.

இங்கு தங்கி வாழும் துர்க்கா இல்லப்பிள்ளைகள் உயர்ந்த ஒழுக்கநெறிகளோடு இந்து சமய கலாசாரங்களை முன்னெடுத்து வாழ்பவர்கள். அவர்களால் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் கண்காட்சியும் பாராட்டப்பட வேண்டியது எனக் கூறினார். (137)

## பிச்சையெடுத்த பெண் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் பிச்சை எடுத்துக்கொண்டிருந்த பெண் ஒருவர் யாழ். பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் யாழ். பஸ் நிலையப்பகுதியில் கைக்குழந்தையுடன் குறித்த பெண் பிச்சை எடுத்துக்கொண்டிருந்தபோதே கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ் பிரதேசசெயலக உத்தியோகத்தரின் முறைப்பாட்டை அடுத்தே இந்தப் பெண் கைது செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. (பா)

## மீண்டும் வழிபாடுகள்


(யாழ்ப்பாணம்)

கடந்தகால வன்செயல் களின்போது அழிவடைந்து காணப்பட்ட மாதகல் சம்பு நாதேஸ்வரர் ஆலயத்தில் நேற்று முன்தினம் மீண்டும் பூசை வழிபாடுகள் ஆரம்பமாகின.

கடந்தகால அசாதாரண நிலைமை காரணமாக மக்கள் இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக மீளக் குடியேற அனுமதிக்கப்படாத நிலையில் இந்த வரலாற்று புகழ்மிக்க ஆலயம் அழிவடைந்து காணப்பட்டது.

இந்நிலையில் நேற்று முன்தினம் குறிப்பிட்ட ஆலயத்தில் சிவ தொண்டர் அமைப்பினால் பூசை வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் இப் பூசை வழிபாடுகளில் பலர் கலந்துகொண்டனர்.

## இயங்காத சந்தைக் கட்டடம்



(கொடிகாமம்)

சாவகச்சேரி பிரதேச சபைக்கு உட்பட்ட எழுதுமட்டுவாள் சந்தையானது இயங்காமல் உள்ளது.

பல இலட்சம் ரூபா செலவு செய்யப்பட்டு புனரமைப்பு செய்யப்பட்ட சந்தையானது சிறு பற்றைகள் சூழ்ந்து காணப்படுகின்றது.

யுத்தம் முடிவுற்று மக்கள் குடியேறிவரும் எழுது மட்டுவாள், முகமாலை, கிளாலி போன்ற பகுதி மக்களுக்கு எழுதுமட்டுவாள் சந்தை யானது மிகவும் முக்கியம் வாய்ந்ததாகும். எழுது மட்டுவாள் சந்தை யானது ஏ -9 வீதியில் எழுது மட்டுவாள் சந்தியில் நாகர்கோவில் வீதியில் அமைந்துள்ளது.

மிகவும் முக்கியமான இடத்தில் உள்ள இச்சந்தை யானது இயங்காமல் இருப்பதனால் இப்பகுதி மக்கள் பெரிதும் சிரமப்படுவதாகவும், பொருட்களைக்கொள்வனவு செய்வதற்கு 8 கிலோமீற்றர் அப்பாலுள்ள கொடிகாமம் சந்தைக்கு செல்லவேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து எழுது மட்டுவாள் சந்தையினை இயக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (130)

## நினைவுதினக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் மில்க்வைற் கனகராசாவின் 15 ஆவது நினைவுதினக்கூட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி முற்பகல் 9.30 மணிக்கு அகில இலங்கை காந்தியசேவா சங்கத் தலைவர் தி.இராசநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள சங்கத்தின் யாழ். மாவட்டக்கிளைச் செயலகத்தில் நடைபெறும் இந்நிகழ்வில் வரவேற்புரையை காந்தீயம் ஆசிரியர் எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி நிகழ்த்தவுள்ளார்.

நினைவுரைகளை இணுவில் அண்ணாகோப்பி நிறுவன அதிபர் பொ.நடராசா, சங்கத்தின் சிரேஷ்ட தலைவரும் மூத்த காந்தியவாதியுமான சோ.க.தம்பிப்பிள்ளை, சங்கத்தின் யாழ். மாவட்டக்கிளைத்தலைவர் கா.கார்த்திகேசு, சைவப்புலவர் கு.சுமுகலிங்கம் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

# 41 ஆவது இலக்கிய சந்திப்பு நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இலக்கிய சந்திப்புக்குழுவின் ஏற்பாட்டில் 41 ஆவது இலக்கிய சந்திப்பு முதன்முறையாக யாழ்ப்பாணத்தில் நாளையும், நாளைமறுதினமும் இல. 17 அக்றேறியன் லேன், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள யூரோவில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நாளை சனிக்கிழமை, 8.30-8.45 அறிமுகம் 8.45-9.00 என் எழுத்து - ஐயாத்துரை சாந்தன், 9.00-10.30: பாரம்பரிய கலைகளும், பண்பாடும் தலைமை: எம். எஸ். தேவகௌரி.

முஸ்லிம்களின் பாரம்பரிய கலைகள் : சில கூறுகள் - எம் எஸ். எம். அனஸ், பெண்களும் ஆனமீக ரீதியிலான் கலாசாரமும் -சோமேசசுந்தரி கிருஷ்ண குமார், அசன்பே சரித்திரத்தின் வரலாற்று விடுபடலும் முஸ்லிம் தேசிய இலக்கிய மரபின் தனித்துவமும் - எம். நவாஸ் சௌபி, மட்டக்களப்புப் பாரம்பரிய கலாசாரப் பண்புகள் - எஸ். தெய்வநாயகம், முஸ்லிம் பண்பாட்டுருவாக்கங்களும் அண்மைக்கால நெருக்கடிகளும் -ஏ.பி.எம்.இத்ரீஸ்.

10.45-12.00: கலந்துரையாடல் - பாரம்பரிய கலைகளும், பண்பாடும் 12.00-12.45: “பள்ளிக்கூடம்” அறிமுகம் : கந்தசாமி சுரேஷ்குமார் - மகேந்திரன் திருவரங்கன்.

2.00-2.15 : குவர்னிகா- 41 ஆவது இலக்கியச்சந்திப்பு மலர் வெளியீடு, 2.15-2.30 : குறும்படக்காட்சி :“மண்சோறு”, 2.30- 2.45: நான் ஏன் எழுதுகிறேன் - விஜயலட்சுமி சேகர், 2.45 - 4.15: சாதியம்.

தலைமை: ரெங்கன் தேவராஜன் யாழ்ப்பாணமும் சாதியமும் - தெணியான், மட்டக்களப்புச் சாதி அமைப்பும் அதன் இன்றைய நிலையும் - குமாரசாமி சண்முகம், தலித் பெண்கள் மீதான ஒடுக்குமுறை - அகல்யா பிரான்சிஸ் கிளைன், கல்வியும் சாதிய ஒடுக்குமுறையும் - ஏ.சீ.ஜோர்ஜ், சாதி ஒடுக்குமுறைக்கு எதிரான ஜனநாயக ரீதியான செயற்பாடுகள் - சீனியர் குணநாயகம் (குணசிங்கம்).

4.30-5.30: கலந்துரையாடல் - சாதியம், 5.45- 6.15: கவிதா நிகழ்வு: வேலணையூர் தாஸ், 6.15: குறும்படங்கள் திரையிடல்.

ஞாயிற்றுக்கிழமை

8.30-8.45 : கேட்டதற்காய் சொல்லுகிறேன் கைதட்டல் எதறகு - சோலைக்கிளி, 8.45- 10-30: இலக்கியம், தலைமை : சோ. பத்மநாதன், வெள்ளிவிரல்: சில கதையாடல்கள் - ரமீஸ் அப்துல்லா, அண்மைக்காலக்கவிதைகள் -சு.குணேஸ்வரன், பெண்கள் சொல்லும் சேதிகள் கால் நூற்றாண்டுக் கவிதைகளை முனவைத்து சித்ரலேகாமௌனகுரு, சிங்களப்புனைகதைகளில் தமிழ்க்கதாபாத்திரங்கள் - ஒரு சுருக்கமான ஆய்வு - லியனகே அமரகீர்த்தி.

மலையகக்கவிதைச் செல்நெறியும் மலையகத்தேசியமும் - மல்லியப்புசந்தி திலகர், எழுத்தியலின் அரசியலும் மொழிபெயர்ப்பாளரின் பணியும் - சிவமோகன் சுமதி, புகலிட இலக்கியம் - சில வரலாற்றுக் குறிப்புக்கள் - ஸ்ராலின்.

10.45-11.30: கலந்துரையாடல் - இலக்கியம், 11.30-12.45: சமூகசெயற்பாட்டாளர்களின் அனுபவப் பகிர்வுகள், தலைமை: துஷியந்தினி கனகசபாபதிப் பிள்ளை, ஆசிரியத்துவம், கலை ஊடாக மலையகத்தில் சமூக மேம்பாட்டினை ஏற்படுத்தல் - எம.கருணாகரன்.

கற்றுக்கொணட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளில் பெண்கள் - கேஷாயினி எட்மண்ட், போருக்குப்பிற்பட்ட காலத்தில் பெணகளின் நிலை - ரஜனி சந்திரசேகரம், காணிப் பிரச்சினைகள் தொடர்பான செயற்பாடுகள் பற்றிய அனுமானங்கள் - மிராக் ரஹீம், 12.45-1.30: : கலந்துரையாடல்.

2.30-2.45 : நான் ஏன் எழுதுகிறேன் - அஷ்றபா நூர்தீன், 2.45-2.50 : அடுத்த இலக்கியச் சந்திப்பு குறித்த தீர்மானம், 2.50 - 4.45 - தேசிய இனங்கள் - பிரச்சினைகள் தலைமை : சிவா சுப்பிரமணியம்.

விசாரணையில் தேசியம்: தமிழ்த் தேசியத்தின கடந்த கால, நிகழ்கால போக்குகளை முன்னிறுத்தி ஒரு அவதானம் - ஆ. யதந்திரா, தேசியவாத நிகழ்ச்சி நிரல்களும் நிலமும்: கிழக்கு மாகாணத்தின் அக்கரைப்பற்றுப் பிரதேசத்தினை மையமாகக் கொண்ட ஓர் ஆய்வு - பேராசிரியர். எஸ். எச். ஹஸ்புல்லாஹ், மலையகத் தேசியம் பற்றிய ஒரு பதிகை : லெனின் மதிவானம், தேசிய விடுதலைப் போராட்ட இயக்கங்களில் பெண்களின் நிலைமைகள் - ஞானசக்தி நடராசா, தேசியவாத அரசியல் சூழமைவில் முஸ்லிம் பரிமாணம் - சிராஜ் மஷ்ஹூர்.

தேசிய இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தில் குழுக்களின் பங்களிப்பு - கலாநிதி சுல்பிகா இஸ்மாயில், சிங்களத்தேசியவாதமும் தமிழ்த்தேசிய அரசியற்கோரிக்கைகளும் - நிர்மால் ரஞ்சித் தேவசிறி, 4.45 -5.00: நன்றியுரை - கருணாகரன்.

5.00-6.30 : கலந் துரையாடல் - தேசிய இனங்கள் - பிரச்சினைகள், 6.30: : அகதிகள் (நாடகம்) நிறைவு.

கவலை நம் சவப்பெட்டிக்கு ஓர் ஆணி சேர்க்கிறது. கலகல வெனும் சிரிப்பு ஓர் ஆணியை கழற்றுகிறது. -பீட்டர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## இலக்கியச் சிந்திப்பு!

இலக்கியத்தின் பயன் என்ன? வாழ்க்கையையும், சகமனிதர்களையும் புரிந்துகொள்வதில் உதவுகிறது என்று நாம் பொதுவாக நம்புகிறோம். ஆனால் இலக்கியத்தின் பேரால் நடக்கும் கூட்டங்கள் எல்லாமே யாரோ சிலருக்கு ஆற்றாமையையும் ஆவேசத்தையும் தோற்றுவித்துவிடுவதாக அமைவதையே காலகாலமாகப் பார்த்து வருகிறோம்.

தாக்குதல்களையும் வசை பாராட்டும் எழுத்துக்களையும் காண நேரும்போது, இலக்கியம் நம்மை ஒன்றும் பண்படுத்திவிடவில்லை; வன்மக்குழியிலிருந்து மீளச்செய்யவில்லை என்றறிந்த ஆயாசமே ஏற்படுகிறது. இலக்கியமாயிருந்தாலும் சரி இல்ல விசேசங்களாயிருந்தாலும் சரி, ஒன்றுகூடுவதற்கும் கலந்து பேசுவதற்கும் ஏற்பாடுகள் செய்யும்போது, விடுபடுதல்கள் நேருவதும் தவிர்க்க முடியாததே. பொதுநிகழ்வு என்றால் ஒவ்வொரு காலகட்டத்திலும் வெவ்வேறு வகையான விடுபடல்கள் நடப்பதும் வழமையே.

சிலர் காலம் முழுவதுமே யாராலும் காணாமல் விடப்பட்டுப் போய்விடுகிறவர்களும் இருக்கிறார்கள் – 'புயலிலே ஒரு தோணி' ப.சிங்காரம் போல. ஆனால் ஒவ்வொரு கூட்டம் கூட்டப்படுகிறபோதும், இப்போதுதான் முதன்முறையாக விடுபடல்கள் நடந்திருப்பதாக தார்மீக ஆவேசம் கொள்ளுவதும் ஒரு 'அறியாத' பாவனைதான்.

அவரவர் அரசியல் நிலைப்பாட்டிலிருந்துகொண்டு, புறக்கணிப்பைப் புதிதாய்க் கண்டுசொல்வதும், முன்னைய புறக்கணிப்புகளையெல்லாம் மறதியில் விடுவதும், தனது நிலைப்பாட்டுக்கு எதிரில் இருப்பவர்களை மறைமுகமாகவேனும் துரோகிகளாய்ச் சித்தரித்துக் காட்டிவிட முனைவதெல்லாம் நம் தமிழ் சமூகத்தின் அரசியல் சாபமாய்த் தொடர்வது. தமிழ்சமூகத்தில் தீவிரமான ஒரேயொரு பாதைக்கு அப்பால் இன்னொரு துரோகமல்லா அரசியல் பாதை இருக்க முடியாதென்பது வேரோடிய பாசிச நினைப்பல்லாமல் வேறென்ன?

கோபப்படாமல் சிந்தித்து நம்மை, நம் சமூகத்தை ஜனநாயகப்படுத்திக்கொள்ள வேண்டிய தேவையை உணர வேண்டும். இலக்கியம் வழியாயேனும் நம்மை மீட்டெடுக்க முடியுமா என்று முயலுதல் வேண்டும். "நமது அனுபவத்தை விசாலப்படுத்துவதன் மூலமும், ஒழுங்கு செய்தலின் மூலமும், நமது ஆளுமையை உருவாக்க அல்லது மீள் ஒழுங்கு அமைக்க இலக்கியம் உதவுகின்றது" என்கிறார் டேவிட் கிறெய்க்.

உலகத்தோடும் ஏனைய மனிதர்களோடும் பல வகைகளிலும் உறவு கொண்டிருக்கிறோம். இலக்கியம் என்பது, உலகத்தோடு... வாழ்க்கையோடு பழகுவது, கற்றுக் கொள்வது, நம்மைப் புதுப்பித்துக் கொள்வது எனப் பலவாறாக சூழலோடு வாழ்க்கையோடு நம்மைப் பொருந்தச் செய்கிறது.

கலை, இலக்கியம் முதலியவற்றின் தோற்றத்தை ஆராய்ந்தவர்கள், அவை புராதன மனிதனது வாழ்க்கையாகிய பௌதிக அடிப்படையிலிருந்து எழுந்ததென்பர். பாவனை (mimicry) செய்ததிலிருந்து கூத்துப் பிறந்தது; வேலை செய்யும் உடலசைவுகளுக்கேற்ப தாளமும் ஒத்திசையும் அமைந்ததென்பர்; வேட்டுவ வாழ்க்கையிலே நிகழ்ந்தவற்றை மீண்டும் செய்து பார்க்கும்போது நாடகம் பிறந்ததென்பர். அவ்வாறு செய்யும் பாவனை முயற்சிகள் மனித உள்ளத்திற்கு சாந்தி கொடுத்தன என்று காண்கிறோம்.

தனது கருத்தை வெளியிட வேண்டும் என்று தோன்றும் விருப்பம், பிற மனிதரிடத்தும் செயல்களிடத்தும் நாம் கொண்டுள்ள ஆர்வம், நாம் கண்டு கேட்டு வாழும் இவ்வுலகிலும் கற்பனையால் மட்டும் உண்டாக்கி மகிழும் கற்பனை உலகிலும் உள்ள ஆர்வம், எதற்கும் வடிவு கொடுக்கத் தோன்றும் நம்முடைய எண்ணம்... இவைதான் இலக்கியம் தோன்ற மூலகாரணம் என மேனாட்டறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள்.

எப்படியும், இந்த வாழ்க்கையை நாம் வாழத்தகுந்தபடியாக ஆக்கிக்கொள்ள இலக்கியம் உதவுகிறது என்பதில் சந்தேகமில்லை. அதை பயன்படுத்திக்கொள்ள வேண்டும். - ஆசிரியர்

# உறுப்பினர்களின் செயற்பாடுகளால் உள்ளூராட்சி சபைகளுக்கு அபகீர்த்தி

## —அமைச்சர் சிறிசேன—

(கொழும்பு)

அரசாங்கத்தின் பிரதேச சபைத் தலைவர்கள், உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் ஒழுக்கமற்ற செயற்பாடுகளால் நாட்டின் உள்ளூராட்சி சபைகள் அபகீர்த்திக்கு உள்ளாவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர், அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தமது அரசாங்கத்தின் பிரதேச அரசியல்வாதிகளின் ஊழல், மோசடி, பாலியல் குற்றச்சாட்டு என்பவற்றால் அரசாங்கத்தினதும், கட்சியினதும், ஜனாதிபதியினதும் கௌரவம் பாதிக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் கட்சி செயலாளர் என்ற அடிப்படையில் கூட்டங்களிலோ ஊடக சந்திப்புக்களிலோ கலந்துகொள்ள முடியாதுள்ளதாகவும் அங்கு கேட்கப்படும் கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாதுள்ளதாகவும் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார்.

பொலநறுவை - தமன்கடுவ பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள், உறுப்பினர்களின் ஒழுக்கமற்ற நடவடிக்கைகளை தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது எனவும் எதிர்காலத்தில் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# புதைபொருள் குற்றச்செயல்; அதிகரிக்கப்பட்டது அபராதம்

(கொழும்பு)

புதைபொருள் ஆராய்ச்சிப் பொருட்களை சேதப்படுத்துவது, அவற்றைக் கொள்ளையடிப்பது போன்ற குற்றச் செயல்களுக்கான அபுராதத்தொகை அதிக்ரிக்கப்படும். தேசிய உரிமைகள் தொடர்பான அமைச்சு இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அமைச்சர் ஜகத் பாலசூரிய தெரிவித்தார்.

புதைபொருள் ஆராய்ச்சி தொடர்பான மீளாய்வுக் கூட்டம் தென்மாகாண ஆளுநர் அலுவலகத்தில் கடந்த செவ்வாய் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் உரையாற்றும் போதே அமைச்சர இத்தகவலைத் தெரிவித்தார்.

புதைபொருள் ஆராய்ச்சி தொடர்பான குற்றச்செயல்களுக்கு தற்சமயம் ஆகக்குறைந்த பட்ச அபராதமாக 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா விதிக்கப்படுகிறது. இந்த அபராதத் தொகை 5 இலட்சம் ரூபா முதல் 50 இலட்சம் ரூபா வரை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆலோசனை பற்றி நீதி அமைச்சுக்கும் அமைச்சரவைக்கும் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவையின் அனுமதி கிடைத்ததும் மேற்படி அபராதத்தொகை அதிகரிக்கப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். தென்மாகாண ஆளுநர் குமாரி பாலசூரிய, அமைச்சின் செயலாளர் நந்தாவிக்கிரம, புதைபொருள் பணிப்பாளர் நாயகம் செனரத்திசாநாயக்க ஆகியோரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

# சுயாதீன ஆணைக்குழுக்களை அரசாங்கம் நிறுவவேண்டும்

## கோரிக்கை விடுக்கும் ஐ.தே.க.

(கொழும்பு)

சுயாதீன ஆணைக்குழுக்கள் நிறுவப்படாவிட்டால் பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வில் பங்கேற்கவேண்டாமென உறுப்பு நாடுகளிடம் கோரிக்கை விடுக்க நேரிடும் என ஐக்கிய தேசியக் கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தல்களுக்கு முன்னதாக சுயாதீன ஆணைக்குழுக்கள் நிறுவப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர கோரியுள்ளார்.

சுயாதீன ஆணைக்குழுக்கள் நிறுவப்படாவிட்டால், பொதுநலவாய அமர்வுகளை புறக்கணிக்குமாறு உலக நாடுகளிடம் கோர நேரிடும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அரசாங்கம் மனிதஉரிமை மீறல்களில் ஈடுபடுவதாகவும், குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்படுவதில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். 17ஆவது திருத்தச் சட்டம் இரத்து செய்யப்பட்டதன் மூலம் சுயாதீன ஆணைக்குழுக்களை நிறுவ முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச சமூகத்திற்கு அளித்த வாக்குறுதிகளை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். சுயாதீன ஆணைக்குழுக்களை நிறுவுவதன் மூலமே நியாயமானதும், சுதந்திரமானதுமான தேர்தலை நடாத்தமுடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# இந்தியாவிடம் ஜாக்கிரதை எச்சரிக்கிறார் சம்பிக்க


(கொழும்பு)

பூட்டானில் ஆட்சியில் இருந்த அரசு, இந்தியாவின் அழுத்தம் காரணமாக மாற்றப்பட்டது எனவும் இதனால் இந்தியாவிடம் இலங்கை அரசு கவனமாக இருக்க வேண்டும் என்றும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இந்தியாவின் எரிபொருள், சமையல் எரிவாயு நிறுவனம் பிராந்தியத்தில் வர்த்தகத்தில் ஈடுபடுவதுடன் மேலதிகமாக அரசியலிலும் ஈடுபட்டு வருகிறது.


பொருளாதாரம், எரிசக்தியை பயன்படுத்திய இந்தியா, ஏனைய நாடுகளின் கழுத்தை நெரித்து வருகிறது. பிராந்தியத்தில் இருக்கும் நாடுகள் சீனா அல்லது வேறு நாடுகளுடன் அரசியல், சுயாதீன வெளிநாட்டு கொள்கைகளை ஏற்படுத்திக் கொள்ள இந்தியா இடமளிப்பதில்லை. இதற்கு எதிராக பிராந்தியத்தில் ஒத்துழைப்புகளை ஏற்படுத்தி கொள்வது அவசியம். இந்தியாவுடன் பொருளாதார ஒத்துழைப்புகளை ஏற்படுத்திக் கொள்ளும் முன்னர், அது பற்றி, அதிகாரிகள் இரண்டு முறை சிந்திக்க வேண்டும்.

பங்களாதேஷ், நேபாளம், பூட்டான் நாடுளில் இந்தியா சகல துறைகளிலும் தனது அரசியல் அழுத்தங்களை கொடுப்பதை இலங்கை பாடமாக கற்றுக் கொள்ள வேண்டும் என சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.




# வேற்று கிரகவாசிகள்-3

ஜெயச்சந்திரன்



> ஒரு நீண்ட அண்டவெளி பயணத்தில் மனிதனுக்கு ஏற்படும் பல பிரச்சினைகளைத் தீர்க்க கடும் ஆராய்ச்சியில் இறங்கியுள்ளனர் அறிவியலாளர்கள். உதாரணத்திற்கு ஒன்றை எடுத்துகொள்வோம். முக்கியமானது மனிதனின் ஆயுட்காலம். அதை மரபணு மாற்றம் மூலமாக நீட்டிக்க வழி வகைகளை ஆராய்ந்து, அந்த ஆய்வின் விடையை சில பிராணிகளில் செலுத்தி அதன் வாழும் காலத்தை அதிகரித்து ஆரம்ப வெற்றியும் பெற்றுள்ளனர் என்பது மிகவும் முக்கியமான செய்தியாகும்.

ஒரு நம்ப முடியாத உண்மை என்னவென்றால், இந்த பூமியில் இதுவரை உயிர்கள் தோன்றி மனிதன் எனும் ஓர் அற்புத பிறப்பு பரிணாமம் அடைந்தது மிக மிக ஆச்சரியமும் அதிசயமுமாகும் என்று அறிவியலாளர்கள் கூறுகின்றனர். ஏனென்றால் இந்த பிரபஞ்சம் நம்மில் பல பேர் நினைப்பதுபோல அமைதியானது அல்ல.

பிரபஞ்சத்தில் பல அழிவுகள் அவ்வப்போது நடந்து கொண்டிருக்கின்றன. நம் பூமியும் இதற்கு விதிவிலக்கில்லை. பூமிக்கு பல பாதுகாப்புகள் இருந்தாலும் பற்பல ஆபத்துகளும் காத்துக் கொண்டிருக்கின்றன என்பதுவும் மறுக்க முடியாத உண்மை. இந்த பூமி இதற்கு முன் பல முறை பெரும் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது. ஆறு கோடி ஆண்டுகளுக்கு முன், அண்டவெளியில் இருந்து சுமார் மணிக்கு 30,0000 கிலோ மீற்றர் வேகத்தில் வந்த ஒரு விண்வெளிப் பாறையினால் (ASTEROID) பூமி தாக்கப்பட்டது என்றும் அந்த தாக்குதலினால்தான் "டைனோசர்" (dynosaur) என்ற, அப்போது பூமியை ஆண்டுவந்த மிருகங்களை பூமி இழந்தது என்று விஞ்ஞானிகள் கூறினர். அப்போதைய அரசியல்வாதிகள் அதை நம்பவில்லை.

அண்டவியல் வளர்ச்சி அடைந்த பின் நம் கண்ணாலேயே அந்த மாதிரி தாக்குதலைப் பார்க்க நமக்கு ஒரு சந்தர்ப்பம் 1994 இல் கிடைக்கப் போவதாக கூறினர் விஞ்ஞானிகள். அதிர்ந்து போன அரசியல் வட்டாரம் அதைப் பார்க்கத் தயாரானது. நல்லவேளை தாக்குதல் வியாழன் மேல்தான். நம் மேல் வரும் பல தாக்குதல்கள் வியாழனின் ஈர்ப்புவிசையினால் வியாழனைத் தாக்கியுள்ளன. வியாழன் இல்லாவிட்டால், பூமிக்கு அழிவு எப்போதோ நேர்ந்திருக்கும்.

விஞ்ஞானிகள் சொன்ன நாளில், அந்தத் தாக்குதல் எல்லோரும் பார்க்க வியாழனின் மேல் நடந்தது. வியாழன் பூமியை விட பல மடங்கு பெரிது. தாக்குதல் நடந்தபின் பூமி அளவு பெரிய நெருப்பு வியாழனில் எரிவதை, மனித வரலாற்றில் முதன் முறையாக விஞ்ஞானிகளும் அரசியல்வாதிகளும் தொலைநோக்கியின் மூலமாக "லைவ்" ஆக கண்டனர். அறிவியலாளர்கள் கூறியது போல நடந்ததைக் கண்டபின் தான் அரசியல்வாதிகளுக்கு அறிவியல் உண்மைகளைத்தான் கூறுகிறது என்று புரிந்தது. அதன்பின்னர் அண்டவியல் ஆராய்ச்சிகளுக்கு உதவி கொடுக்கப்பட்டது.

அழகான பெண்ணை வர்ணிக்க நிலவை உதாரணத்திற்கு சொல்வார்கள். ஆனால் நிலவை நேரில் பார்த்தாலோ அல்லது அதன் "க்ளோஸ் அப்" புகைப்படத்தையோ பார்த்தார்களேயானால்,அதன் பிறகு பெண்ணை வர்ணிப்பதற்குப் பதிலாக, வசை பாடுவதற்குத் தான் நிலவை பயன்படுத்துவர். ஏனென்றால் நிலவில் அவ்வளவு குழிகள். அம்மைத் தழும்பு முகம் போல இருக்கும். எல்லாம் வாங்கிய தாக்குதலின் அடையாளங்கள்.

பூமிக்கும் இந்த தாக்குதல் நிகழ்ந்திருக்கிறது. ஆனால் மழை, பூகம்பம், எரிமலை, கண்ட அசைவுகள், கடலரிப்பு போன்றவற்றால் அவை பெரும்பாலும் மறைந்து போய்விட்டன. சைபீரியாவிலும், அமெரிக்காவின் அரிசோனா மாநிலத்திலும் மற்றும் பூமியின் சில பகுதிகளிலும் இந்தத் தழும்புகளைக் காணலாம்.

பிரபஞ்சம் வயது அடைந்து கொண்டே இருக்கின்றது. நமது சூரிய குடும்பமும் விதிவிலக்கல்ல. நமது செவ்வாய் கோள் ஒரு காலத்தில் பூமியைப் போலவே காந்தப் புலன் உள்ள கோளாகவும், தண்ணீர், வளிமண்டலம் உள்ள கோளாகவும் இருந்தது. அங்கே ஆரம்பகட்ட உயிரினங்கள் இருந்ததற்கான வாய்ப்புகள் உள்ளன என்று பல அறிவியலாளர்கள் நம்புகின்றனர். மேலும் செவ்வாயிலிருந்து உயிர் பூமிக்கு வந்திருக்க வாய்ப்புண்டு என்றும் கூறுகின்றனர். ஆனால் தற்போது அதற்கு காந்தப் புலன் இல்லை. நீர் வற்றிவிட்டது. துருவப் பிரதேசங்களிலும், நிலத்திற்கு அடியில் சில இடங்களிலும் தான் நீர் இருப்பதாகத் தெரிகிறது. வளிமண்டலம் அடர்த்தி குறைந்ததாக மாறிவிட்டது.

இந்தப் பரிணாம மாற்றம் அடையக் காரணம், செவ்வாய் பூமியை விட சிறியதாய் இருப்பதால் செவ்வாயின் உள்ளே உள்ள உருகிய இரும்பு காலப்போக்கில் குளிர்ந்து கெட்டியாகி விட்டது. பூமியின் உள்ளே கெட்டியான இரும்பும், அதைச் சுற்றி உருகிய இரும்பும் சுழல்வதால் காந்தப் புலன் உருவாகிறது. செவ்வாயில் அந்த உருகிய இரும்பு குளிர்ந்து கெட்டியாகி விட்டதால் காந்தப் புலன் இல்லாமல் போய்விட்டது. இந்த காந்தப் புலன் இல்லாவிட்டால், சூரிய காந்தப் புயல்களினால் பூமி தாக்கப்பட்டு உயிர்கள் இல்லாத ஒரு வறண்ட பிரதேசமாக மாறிவிடும். அதுதான் செவ்வாயில் நடந்தது. ஒரு காலத்தில் உயிர் வளர்ச்சிக்கு சாதகமாக இருந்த செவ்வாயின் வளிமண்டலம், நம்மில் பலரும் வணங்கும் சூரியனின் நாசகரமான கதிர் வீச்சுகளினாலேயே தகர்க்கப்பட்டது. அதனால் நீர் வற்றி, வறண்ட குளிர்ந்த பிரதேசமாக மாறிவிட்டது.

பூமியில் இந்த காந்தப்புலன் வடக்கிலிருந்து தெற்காக வந்து கொண்டிருக்கின்றது. அப்படி தொடர்ந்து எப்பொழுதுமே நடந்து கொண்டிருக்காது. சில காலத்திற்குப் பிறகு அது தடம் மாறி தெற்கிலிருந்து வடக்காக செல்லஆரம்பிக்கும். அதிர்ச்சியான செய்தி என்னவென்றால் அந்த மாற்றம் பூமியில் ஆரம்பித்துவிட்டது என்று சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த மாற்றத்தால் பூமியில் உள்ளஉயிரினங்கள் எல்லாம் அழிந்து போகும் வாய்ப்புண்டு. இது போன்ற பல அழிவுகள் எப்போது வேண்டுமானாலும் வரலாம் என்பதனால்தான், மனிதனை வேறு ஒரு கோளில் குடியமர்த்துவதற்கு அறிவியலாளர்கள் முயற்சிகள் ஆரம்பித்துள்ளனர்.

நமக்கெல்லாம் ஆதாரமாயிருக்கும் சூரியனுக்கும் வயதாகிக் கொண்டிருக்கிறது. அது தன் பாதி வயதை எட்டிவிட்டது.

இந்த பிரபஞ்சத்தில் உயிர் தோன்றும் போதே அழிந்து போகும் கோள்கள், உயிர் தோன்றிய சில காலத்திலேயே அழிந்து போகும் கோள்கள், உயிர் தோன்றி மனிதனைப்போன்ற பரிணாம வளர்ச்சி அடைவதற்குள் அழிந்து போகும் பல கோள்கள் உள்ளன. ஆகவே பிரபஞ்சத்தில் பலப் பல நிலைகளில் உயிர்கள் பரிணாம வளர்ச்சியடைந்த கோள்களை காண வாய்ப்புண்டு.

மேலை நாடுகளில் நடந்த விஞ்ஞான வளர்ச்சியில் பாராட்டப்படவேண்டிய பல முன்னேற்றங்கள். நிலவுக்கு மனிதன் சென்றுவிட்டான். ஆனால் பிரபஞ்ச தொலைவுகளை கணக்கில் எடுக்கும் போது மிக மிக அருகில் உள்ள நிலவு வரைக்கும்தான் மனிதன் சென்றுள்ளான் என்பதுதான் உண்மை. இன்னும் சில வருடங்களுக்குப் பிறகு சூரியனின் மற்ற கோள்களுக்கும்செல்ல முடியலாம். ஆனால் பல நட்சத்திரக் கூட்டங்களைக் கடந்து, வேறு எங்கோ உள்ள ஒரு கோளுக்குச் செல்ல இப்போதைய விஞ்ஞானத்தில் வழியில்லை. ஏனென்றால் நட்சத்திரங்களைக் கடந்துசெல்வது என்பது மிக மிகக் கடினம்.

நமக்கு மிக அருகில் இருக்கும் நட்சத்திரம் சுமார் நான்கு ஒளியாண்டுகள் தொலைவில் இருக்கின்றது. ஒளியாண்டு என்பது சுமார் ஒன்பதரை லட்சம் கோடி கிலோ மீற்றர்களாகும். அதாவது அருகிலுள்ள நட்சத்திரமே சுமார் நாற்பது லட்சம் கோடி கிலோ மீற்றர்கள் தொலைவில் உள்ளது. சில புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட கோள்கள் ஆயிரம் ஒளியாண்டுகள் தொலைவில் உள்ளன.

மீண்டும் நினைவில் கொள்ளவேண்டியது வினாடிக்கு மூன்று லட்சம் கிலோ மீற்றர்கள் செல்லக் கூடிய வாகனத்தில் பயணித்தால் அந்த நட்சத்திரத்தை சென்றடைய நான்கு ஆண்டுகள் ஆகும். வேண்டிய வேகம் வினாடிக்கு மூன்று லட்சம் கிலோ மீற்றர். நாம் நம் விஞ்ஞான வளர்ச்சியில் அடைந்துள்ள வேகம் மிகக் குறைவு. விண்மீன்களை போய்ச்சேர, இப்போது நம்மிடமுள்ள வாகனத்தில் சென்றால் பல நூறு ஆண்டுகள் பிடிக்கும்.

பல நூறு ஆண்டுகள் விண்வெளியில் பயணம் செய்வது மிக மிகக் கடினம். அத்தனை காலத்தில் அண்டவெளியின் கதிர்வீச்சுமனிதனைக் கொல்ல நிறைய வாய்ப்புகள் உள்ளன. வெகு காலம் பூமியை விட்டு பயணிக்கும்போது நிச்சயமாக மனிதன் மனதளவில்பாதிக்கப்படுவான். அவன் உடலுறுப்புக்கள் பல பாதிக்கப்படும். எல்லாவற்றிற்கும் மேலாக, மனிதனின் ஆயுள் காலம் அதற்கு இடம் கொடுக்காது.

ஒரு நீண்ட அண்டவெளி பயணத்தில் மனிதனுக்கு ஏற்படும் பல பிரச்சினைகளைத் தீர்க்க கடும் ஆராய்ச்சியில் இறங்கியுள்ளனர் அறிவியலாளர்கள். உதாரணத்திற்கு ஒன்றே ஒன்றை எடுத்துகொள்வோம். முக்கியமானது மனிதனின் ஆயுட்காலம். அதை மரபணு மாற்றம் மூலமாக நீட்டிக்க வழி வகைகளை ஆராய்ந்து, அந்த ஆய்வின் விடையை சில பிராணிகளில் செலுத்தி அதன் வாழும் காலத்தை அதிகரித்து ஆரம்ப வெற்றியும் பெற்றுள்ளனர் என்பது மிகவும் முக்கியமான செய்தியாகும்.

துருவக்கரடிகள் வருடத்தில் பல மாதங்கள் கடும் குளிர் காரணமாக, உண்ணாமல் உறங்கிக்கொண்டே இருக்கும். மாதக்கணக்கான இந்த தொடர் உறக்கத்தை ஆங்கிலத்தில் ஹைபெர்நேசன் (HYBERNATION) என்று கூறுவார்கள்). அந்த மிருகத்தில் இதற்குக் காரணமான மரபணுக்களை கண்டுபிடித்து அதை மனிதனின் உடலில் செலுத்தி, பயண நேரத்தை தூங்கிக் கழிக்க வழி செய்யும் உத்தியை விஞ்ஞானிகள் பயன்படுத்த முயற்சி செய்கின்றனர்.

ஆண், பெண் இணையாகத்தான் அனுப்ப முடியும். குழந்தை பிறப்பு, வளர்ப்பு உள்பட நீண்ட பயணத்தின் போது விண்வெளி வீரர்கள் சந்திக்கும் இதுபோன்ற பிரச்சினைகள் ஏராளம். அவை ஒவ்வொன்றையும் தீர்க்க விஞ்ஞான உலகம் கடினமான, ஆச்சரியப்பட வைக்கும் ஆராய்ச்சிகளை செய்து கொண்டிருக்கின்றது. இந்த வகையான ஆராய்ச்சிகளில் வெற்றி கிடைக்குமா என்பதெல்லாம் பொறுத்திருந்து பார்க்க வேண்டியதுதான்.

# ஐந்து நிர்வாக மாவட்டங்களாக

# வடமாகாண சபைத்தேர்தல்

## தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு



வடமாகாணசபைத் தேர்தலை, தேர்தல் சட்டங்களுக்கு உட்பட்ட வகையில் நடத்துவது தொடர்பில் வடமாகாணத்திலுள்ள 5 மாவட்ட அரசாங்க அதிபர்களுடன் தேர்தல்கள் ஆணையாளர் விசேட சந்திப்பொன்றின்ன மேற்கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கு தேர்தல்கள் ஆணையாளர் இது தொடர்பில் விளக்கமளித்துள்ளார். முதற்தடவையாக வடமாகாணசபைக்கு தேர்தல் நடத்தப்படவுள்ள நிலையில், 5 நிர்வாக மாவட்டங்கள் என்ற அடிப்படையில் இத்தேர்தல நடாத்தப்படவுள்ளது. அதற்கமைய வடமாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 5 மாவட்டங்களின் அரசாங்க அதிபர்களும், தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகளாக செயற்படவுள்ளனர். இது தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளரினால் அவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது. இதுவரை காலம் நடைபெற்ற பொதுத்தேர்தல் மற்றும் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்கள், வடக்கில் யாழ்ப்பாணம் மற்றும் வன்னி ஆகிய இரண்டு தேரதல் மாவட்டங்கள் என்ற அடிப்படையிலேயே நடாத்தப்பட்டன. யாழ். தேர்தல் மாவட்டத்தில், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் வன்னி தேர்தல் மாவட்டத்தில் முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களும் உள்ளடக்கப்பட்டிருந்தன. எனினும் வடமாகாணசபை தனியானதொரு மாகாணசபையாக பிரிக்கப்பட்டதன் பின்னர், இம்முறை முதற்தடவையாக நடைபெறவுள்ள தேர்தல் 5 நிர்வாக மாவட்டங்களும், தனித்தனியான தேர்தல் மாவட்டங்களாக கருதியே நடாத்தப்படவுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய குறித்த அரசாங்க அதிபர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

# எதிர்க்கட்சிகள் பலவீனமானவையா? முற்றாக மறுக்கிறார் ரணில்

(கொழும்பு)

எதிர்க்கட்சிகள் பலவீனமானவை என்ற கருத்தை ஏற்றுக்கொள்ளமுடியாது என எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிரான குற்றவியல் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்ட போது எதிர்க்கட்சிகள் வலுவாக அதற்கு எதிராக குரல் எழுப்பியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பொதுவான ஓர் நோக்கத்திற்காக எதிர்க்கட்சிகளுடன் இணைந்து செயற்பட ஐக்கிய தேசியக் கட்சி விரும்புவதாகத் தெரிவித்துள்ளார், இதேவேளை, பொதுவான எதிர்க்கட்சிக்கு தலைமை தாங்கக்கூடிய ஆற்றல் குறித்து சிலர் கேள்வி எழுப்பியுள்ளனர். எனினும், இந்தக் கேளவிகளுக்கு ரணில் விக்ரமசிங்க எவ்வித பதிலையும் அளிக்கவில்லை.



# மாகாண சபை முறைமையை முற்றாக ஒழிக்கவேண்டும்

## பௌத்த சம்மேளனம் அறிவிப்பு

மாகாணசபை முறைமை முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்று மல்வத்து மற்றும் அஸ்கிரிய மாநாயக்க தேரர்கள் அடங்கிய அகில இலங்கை பௌத்த சம்மேளனம் அறிவித்துள்ளது.

மாகாண சபைகளுக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் வழங்கப்படக்கூடாது. அவ்வாறு வழங்கப்பட்டால் இந்த நாடு துண்டு துண்டாகிவிடும். இந்தப் பிரச்சினையில், இந்தியாவுக்கோ அல்லது வேறு நாட்டுக்கோ பயப்படவேண்டிய அவசியமில்லை. 1987 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தை இரத்துச்செய்யவேண்டும் என்று உடுகம ஸ்ரீ புத்தரகித அஸ்கிரிய தேரர் தெரிவித்துள்ளார்.

மாகாணசபை பிரச்சிணைக்கு முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனவே காரணம். இந்த நடவடிக் கைக்கு அப்போதிருந்த மாநாய க்க தேரர்கள் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். ஆனால், அரசியல் பலத்தை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக இந்தியாவுடன் இணைந்து ஒப்பந்தமொன்றை ஏற்படுத்தி மாகாண சபை முறைமையை ஏற்படுத்தினர்.

இருப்பினும், அதற்கு பலரும் அப்போது எதிர்ப்புத் தெரிவித்தனர். தவறு எமது மக்களது. இன்று அப்பிரச்சினை பெரிதாகிவிட்டது. வடக்கு கிழக்குக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களைக் கொடுத்தால் மத்திய அரசாங்கத்துக்கு உள்ள அதிகாரம் என்ன? இந்த நாடு ஒன்பது துண்டுகளாக சிதறிவிடும்.

இந்த அனைத்துப்பிரச்சினைகளுக்கும் காரணம் கட்சித்தலைவர்களே. அவர்கள் அனைவரும் அவரவரது அரசியல் பலத்தை நிலைநாட்டிக்கொள்வதற்காக இவ்வாறான பிரச்சினைகளுக்கு இடமளித்து விட்டார்கள். நான் எந்தவொரு கட்சியையும் சார்ந்தவன் இல்லை. எனக்கு எந்தவொரு அரசியல் நோக்கமும் இல்லை. மாகாணசபை முறைமை ஒழிக்கப்பட்டு ஐக்கியப்பட்ட நாடொன்று உருவாக்கப்படல் வேண்டும் என்றும் புத்தரகித தேரர் குறிப்பிட்டார்.


நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை, விருப்பு வாக்கு முறைமை மற்றும் மாகாணசபை முறைமை ஆகியன முழுமையாக நீக்கப்படல் வேண்டும். அதற்காக, அனைவரும் ஒன்றிணைய வேணடும் என்று திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல மல்வத்து தேரர் தெரிவித்துள்ளார்.



மாகாணசபை முறைமையில் நாட்டுக்கு பிரச்சினை ஏற்படுத்தக்கூடிய ஏற்பாடுகள் இருப்பின், 13 ஆவது திருத்தத்திலிருந்து அவற்றை நீக்கிவிட வேண்டும். இந்த நாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகம். அவர்களால் மக்களுக்கு எந்தவொரு பயனும் இல்லை. அவரவர் நலனுக்காகவே செயற்படுகின்றனர். அதனால், மாகாணசபை முறைமையை ஒழிப்பது தான் நல்லது என்பது என்னுடைய தனிப்பட்ட கருத்து என்று சுமங்கலதேரர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# மின் பட்டியலை செலுத்தினால் உணவிற்கு மக்களிடம் பணமில்லை

## இன்றைய நிலை இது என்கிறார் பொன்சேகா



(கொழும்பு)

பொதுமக்கள் மின்சாரப்பட்டியலைக்கட்டியதன் பின்னர் உணவுக்காக பணம் மீதமாவதில்லை என ஜனநாயகக்கட்சியின் தலைவர் சரத்பொன் சேகா குறிப்பிட்டுள்ளார்.

மாவனல்லையில் இடம்பெற்ற பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றும்போதே அவர் அவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

என்றும் கைக்குக்கைமாற்றி 60 ஆண்டுகள் இந்த நாட்டை அரசியலாளர்கள் ஆட்சிசெய்தார்கள். என்றாலும் அவர்கள் பொதுமக்களின் உள்ளக்குமுறலைத் தெரிந்துகொள்ளவில்லை.

இந்நாட்டுக்குத் தற்போது தேவையாகவுள்ளது மூன்றாவது பெரும் சக்தியாகும். மூன்றாவது சக்திதான் எனது ஜனநாயகக் கட்சி. இந்நாட்டில் ஜனநாயகத்தைக் கட்டிக்காப்பதற்காக நாம் முன்னெடுக்கவுள்ள பயணத்திற்கு உங்கள் உதவியைத்தாருங்கள் என நான் மிகவும் பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

நாட்டின் தலைவர்கள் இன்பம் அனுபவிக்கிறார்கள். தேனும் பாலும் அவர்களுக்கு வழிந்து வருகின்றது. பொதுமக்களுக்குப் பொய் வாக்குறுதிகள் அளிக்கிறார்கள். பொதுமக்கள் மின்சாரக் கட்டணத்தைக் கட்டினால் அவர்களுக்கு சாப்பாட்டுக்கு வழியில்லை. பிள்ளைகளுக்குப் புத்தகங்கள் வாங்கிக்கொடுத்தால் சாப்பிடமுடியாது. மீனவர்கள் கடலுக்குப்போய் மூழ்கி மடிகிறார்கள். அரசாங்கம் இவற்றை செப்புக்காசின் அளவாவது நினைத்துப்பார்ப்பதில்லை. அவ்வாறான கலாசாரம் இங்கு இல்லை. கலாச்சாரம் மாறிக்கிடக்கிறது. ஆசிரியர்கள் முழங்காலில் நிற்கவைக்கப்படுகிறார்கள். பிரதேசசபை உறுப்பினர்களின் பிள்ளைகள் அதிபர்களுக்கு கை நீட்டுகிறார்கள். பௌத்த மதகுருமார்களை மத பீடத்தின் உள்ளேயே கொன்றொழிக்கிறார்கள். பௌத்த பிக்குமார் தீக்குளிக்கிறார்கள். எல்லா இடங்களிலும் சிறுவர் மற்றும் பெண்கள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்படுகிறார்கள். நீதி நியாயம் என்பது இங்கில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# ஒக்டோபருக்கு ஒத்திவைப்பு

# 13 இற்கு எதிரான உரிமைமீறல் மனு

(கொழும்பு)

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை ஒக்டோபர் 1 ஆம் திகதிக்கு உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் ஒத்திவைத்தது.

இந்த மனுவை விசாரணைக்கு ஏற்க வேண்டுமென்பதற்கான ஆதாரங்களை அன்றையதினம் சமர்ப்பிக்கவேண்டும் என்றும் உயர்நீதிமன்றம் இதன்போது தீர்மானித்தது.

பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் தலைமையிலான நீதியரசர்களான கே.ஸ்ரீபவன் மற்றும் ஈவா வனசுந்தர ஆகியோர் முன்னிலையில் இந்த மனு ஆராயப்பட்டது.

மனுவில், சட்டமா அதிபர், சபாநாயகர் சமல் ராஜபக்ஷ மற்றும் உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மனுதாரரான நீர்கொழும்பைச் சேர்ந்த எம்.எஸ். பத்மபிரிய சிறிவர்த்தன, 13 ஆவது திருத்தம் தனது உரிமைகளை மீறுவதனால் அது வெறுமையானதாகும் அதுமட்டுமன்றி வலிதானதாகும் என்று நீதிமன்றம் வெளிப்படுத்த வேண்டுமெனவும் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

உயர் நீதிமன்றம் தீர்மானித்ததன் பிரகாரம் இந்த திருத்தம் சர்வஜனவாக்கெடுப்பு மூலம் மக்களால் அங்கீகரிக்கப்படவில்லை. எனவே, இந்த திருத்தத்தில் மக்களின் உரிமை மீறப்படும் ஒரு அம்சம் உள்ளது என்றும் மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உள்நாட்டிலிருந்தும் வெளியிலிருந்தும் கொடுக்கப்பட்ட அழுத்தம் காரணமாகவே இந்த திருத்தம் மேற்கொள்ளப்பட்டது என அவர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

உள்நாட்டில் பயங்கரவாதிகளின் பயமுறுத்தலாலும் அயல்நாடும் வல்லரசுமாகிய இந்தியாவிடமிருந்து வந்த யுத்த பயமுறுத்தலாலும் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் ஒரு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது என்றும் மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த திருத்தமானது அரசியலமைப்புக்கு அமைந்ததா? என தீர்மானிப்பதற்காக அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன 13 ஆவது திருத்த சட்டமூலத்தை உயர்நீதிமன்றத்திற்கு பாரப்படுத்தினார்.

13 ஆவது திருத்தமானது சர்வஜனவாக்கெடுப்பு மூலம் மக்களால் அங்கீகரிக்கப்பட வேண்டுமென உயர்நீதிமன்றம் அதன்போது தீர்மானித்திருந்தது என்றும் மனுதாரர் தெரிவித்துள்ளார்.

ஆயினும், இவ்வாறான சர்வஜனவாக்கெடுப்பு நடைபெறவில்லை என மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உயர்நீதிமன்றத்தின் தீர்மானம் தொடர்ந்து மீறப்படுவதால் உயர்நீதிமன்றுக்கு தலையிடுவதற்கான நியாயாதிக்கம் உள்ளது என மனுதாரர் வலியுறுத்தினார்.

எனவே, நீதிமன்றத்தின் அடிப்படை உரிமைகள் நியாயாதிக்கத்துக்கு அப்பால் தனது உரிமை மனு உள்ளதாயினும் உயர்நீதிமன்றுக்கு இந்த மனுவை விசாரிப்பதற்கு உள்ளார்ந்த அதிகாரம் உள்ளது என்றும் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுலாக்குமிடத்து 13 ஆவது திருத்தம் தனது உரிமைகளையும் பொதுமக்களின் உரிமைகளையும் தொடர்ந்து மீறுவதாகுமென அவர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

# மக்களின் வாழ்நிலை முன்னேற்றத்தில் அதிகளவு அக்கறை செலுத்துகிறோம்



(கிளிநொச்சி)

மீள்குடியேற்றத்தின் ஆரம்பம் தொடக்கம் நாம் மக்களுடனேயே வாழ்ந்து வருகின்றோம்.

மீள்குடியேற்றத்தில் மக்கள எதிர்கொள்ள நேர்ந்த இடர்களுக்கு தீர்வினைப் பெற்றுக் கொடுத்தமை தொடக்கம் அது தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வரும் பாரிய அபிவிருத்தி மற்றும் மக்களின் வாழ்நிலை முன்னேற்றம் போன்ற சகல செயற்றிட்டங்களையும் மக்கள் மத்தியில் நடைமுறைப்படுத்துவதில் நாம் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றோம் என ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக்குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை கண்டாவளை குமாரசாமிபுரத்தில் மக்களது தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் நடைபெற்ற ஆய்வுக் கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தேவைகள் மிக அதிகமாகக் காணப்படும் எமது மக்களின் வாழ்விடங்களுக்குச் சென்று அவர்களின் தேவைகளை இனங்கண்டு நிவர்த்தி செய்வதிலும் மக்கள் எதிர் கொள்கின்ற பிரச்சினைகளுக்கு தீர்வினை பெற்றுக் கொடுப்பதிலும் நாம் அதிகசிரத்தையுடன் செயற்பட்டு வருகின்றோம்.

இவ்வாறான எமது தொடர் செயற்பாட்டினூடாக மக்களின் வாழ்வியலில் முன்னேற்றங்களும் பிரதேசத்தினதும் அபிவிருத்தியும் துரிதமாக ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. இந்த நிலையில், மீள்குடியேற்றம் நடைபெற்ற காலம் தொடக்கம் இன்றுவரை எதுவுமே நடைபெறவில்லை என எவரும் விவாதிக்க முடியாது. ஏனெனில் மக்களின் வாழ் நிலைகளில் மாற்றங்களும் முன்னேற்றங்களும் ஏற்படுத்தப்படுகின்றன.இருப்பினும் இழப்புகளை அதிகமாக எதிர்கொண்ட எம் மக்களிடையே தேவைகள் நிறைந்து காணப்படுவதால் அவற்றைப் படிப்படியாக நிவர்த்தி செய்யவேண்டிய அவசிய நிலைப்பாடுள்ளது.

அதற்கான பல செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் தொடர் முயற்சிகளிலும் நாம் ஈடுபட்டு வருகின்றோம்.எனவே மக்கள் பலம் முழுமையாக எமக்குக் கிடைக்கின்ற சந்தர்ப்பத்தில் மக்களின் தேவைகள் அனைத்தையும் துரிதமாக நிறைவேற்றக்கூடிய சாதகமான தளம் உருப்பெறும். அதனூடாக தொடர்ந்தும் நாம் பன் மடங்கு உத்வேகத்துடன் பணிகளை முன்னெடுக்க முடியும் எனத்தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் கண்டாவளைப் பிரதேசசெயலர் முருகநேன், ஈ.பி.டி.பி கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன் .வடக்கின்வசந்தம் மின்விநியோகத்திட்டத்தின் பொறியியலாளர் மற்றும் அப்பகுதி கிராமசேவையாளர் குடியேற்ற உத்தியோகத்தர்கள். அப்பகுதி கிராமஅபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் மன்னவராஜன் ஆகியோரும் பிரதேச செயலகத்தின் துறைசார்ந்த உத்தியோகத்தர்களும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் பொது மக்களும் கலந்து கொண்டனர்.

## அல்வாய் பிரதான வீதி புனரமைப்பு எப்போது?

(வரணி)

வடமராட்சி மாலுசந்தியில் இருந்து வடக்குப்பக்கமாகச் செல்லும் அல்வாய், நாவலடி, வியாபாரிமூலையூடாக கடற்கரைக்குச்செல்லும் அல்வாய் பிரதான வீதி மிகவும் மோசமான நிலையில் காணப்படுவதால் இவ்வீதியால் செல்லும் பாடசாலை மாணவர்கள் தொடக்கம் சகலரும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தற்போது இவ்வீதியில் அமைந்துள்ள ஆலயம் ஒன்றில் உற்சவம் நடைபெற்றுவரும் நிலையில் பெருமளவு மக்கள் சென்று வருவதுடன் வாகனப் போக்குவரத்தும் கூடுதலாக உள்ளது.

இதைவிட நாவலடியில் உள்ள பழமைவாய்ந்த,பாலம் முற்றாக சேதமடைந்ததால் வாகனப் போக்குவரத்து தடைப்பட்ட நிலையில் ஆலய உற்சவத்தை முன்னிட்டு பொதுமக்கள் இப் பாலத்திற்கு மண் இட்டு நிரப்பியுள்ளதால் வாகனங்கள் தற்போது சென்று வருகின்றன.

எனினும் உற்சவம் முடிவடைந்ததும் மீண்டும் மண் அகற்ற வேண்டிய நிலை உள்ளது. இப்பாலத்தால் பெருமளவு நீர் பாய்ந்தோடுவதால் இடைமறிப்பு செய்ய முடியாத நிலையில் உற்சவம் முடிவுற்றதும் மீண்டும் வாகனப்பயணங்கள் அதேகதிதான். எனவே இவ் வீதியை புனரமைக்க உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (150)

## ஐந்து மாடி மருத்துவ விடுதியின் "லிப்ற்" ஒன்று பழுதடைந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனாவைத்தியசாலையின் ஐந்துமாடிகளைக்கொண்ட புதிய மருத்துவ விடுதிக் கட்டடத்தொகுதிக்கான லிப்ற் ஒன்று பழுதடைந்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் ஏற்பட்ட இடி மின்னல் தாக்கம் காரணமாகவே இந்த லிப்ற் பழுதடைந்திருப்பதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.இதன் காரணமாக ஐந்து மாடிகளைக் கொண்ட சித்தமருத்துவ விடுதிக்கட்டடத் தொகுதிக்கு நோயாளர்களை ஏற்றியிறக்க ஒரு லிப்றறையே பயன்படுத்த வேண்டியிருப்பதாக வைத்திய சாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

எனவே இந்த ஒரு லிப்ற் ஐந்து மாடிகளுக்கும் சென்று திரும்ப எடுக்கும் நேரத்தில் லிப்றை பயன்படுத்துவதற்கு நோயாளரும் அதிகநேரம் காத்திருக்க வேண்டியுள்ளது. அத்துடன் மேலதிகமான நோயாளர்கள், பார்வையாளர்கள் மாடிப்படிகள் மூலமாகவே இந்த மாடியில் அமைந்துள்ள விடுதிக்குச் சென்றுவருவதனை அவதானிக்க முடிகிறது. (பா)

## உதவிக்கொடுப்பனவு

(கரணவாய்)

யாழ்.மாவட்டத்தில் மூத்த பிரஜைகளுக்கான ஆயிரம் ரூபா மாதாந்த உதவிக் கொடுப்பனவில் அடுத்து வரும் 5 மாதங்களுக்கான கொடுப்பனவுத்திகதி விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் உள்ள மூத்த பிரஜைகள் இக்கொடுப்பனவை உரிய காலப்பகுதிக்குள் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை ஒவ்வொரு மாதத்திலும் 5ஆம்திகதி முதல்12ஆம் திகதி வரை பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (1ஃ)

## நடமாடும் சேவை

(வரணி)

வரணி மகாவித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்ற நடமாடும்சேவையில் பெருமளவான மக்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

இதில் இப்பிரதேசத்தில் வாழும் 18வயதிற்கு மேற்பட்ட இதுவரை அடையாள அட்டை பெற்றுக்கொள்ளாத பிறப்புச்சான்றிதழ் திருமணப் பதிவு இல்லாதோருக்கு பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் இந்நடமாடும் சேவையில் இதற்குரிய புகைப்படங்களும் எடுக்கப்பட்டு உடனுக்குடன் பயனாளிகளிடம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (150)

# தரம் 5 மாணவர்களுக்கு இலவச கருத்தரங்கு

(கிளிநொச்சி)

தேசியமொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் சமூகஒருமைப்பாட்டு வாரத்தை முன்னிட்டு பளை மத்தியகல்லூரியில் இவ் வருடம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத்தோற்றும் மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு கடந்த புதன்கிழமை நடத்தப்பட்டது.

இதில் பளைப்பிரதேசத்தைச் சேர்ந்த 171 மாணவர்களும், ஆசிரியர், பெற்றோருமாக 220 பேர் கலந்து கொண்டனர்.நிகழ்வின் தலைமையுரையை பளை பிரதேச செயலர் ச.சத்தியசீலன் ஆற்றினார். பளை கோட்டக் கல்விப்பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.இந் நிகழ்வின் நோக்கம் பற்றி அமைச்சின் மாவட்ட இணைப்பு திகாரி நடராசா உமாநாத் மாணவர்களுக்கு எடுத்துக் கூறினார். அமைச்சின் காலம் கருதிய இவ் வேலைத்திட்டத்தை பெற்றோர், மாணவர்கள், ஆசிரியர்கள் வரவேற்றுள்ளனர். (90)

## ஆன்மீக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப்பண்பாட்டுப் பேரவையால் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் ஆன்மீக நிகழ்வுகள் இடம் பெற்றுவருகின்றன.

இதன்படி இன்று வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் தேவி பாகவதம் (தொடர்) என்றும் விடயம் பற்றி சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

## முரசின் இன்றைய பலன்



(19.07.2013 -வெள்ளிக்கிழமை)

விஜய வருஷம் ஆடி மாதம் 03 ஆம் திகதி.அனுஷநட்சத்திரம் பி.ப. 02.09 வரை ,சித்தயோகம். ஏகாதசி திதி,மரணயோகம் மு.ப 10.18வரை. இராகுகாலம 10.31 - 12.01 வரை. சுபநேரம 06.01- 07.31 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** அறிவுக்கு முன்னுரிமையினால் வெற்றி, தாழ்வு மனப்பாங்கு தலைதூக்கல், பணப்பற்றாக்குறை நீங்கும், அரசுத் தொழிலில் கெடுபிடிவேலைப்பளு குறைவடைதல்.

**ரிஷபம்** பாகுபாடு காட்டியதனால் வேதனை, உணர்ச்சி வசப்பட்டமையால் காரியக்கேடு,குடியுரிமை பெறல், பிரிந்தவர் பற் றிய தகவல் கிடைத்தல், ஏளனத்தை உதாசீனம் செய் வதினால் நன்மை, வெளியூரிலிருந்து பணம் வருதல்.

**மிதுனம்** தைரியமான முடிவெடுத்தல், ஊழியரால் மதிப்பு, அதிரடியான திட்டங்கள் திட்டுதல், அரசுதனியார் துறையில் வேலை வாய்ப்பு.

**கடகம்** இரத்ததானம், சுபகாரிய ஜெயம்,தாயாரின் தேகசுக பாதிப்பு, மேலதிகாரியின் பாராட்டு,பயணம் பற்றிய தயக்க நிலை,பேச்சினால் கலவரப்படல், ஆன்மீக ஈடுபாடு, அநாவசியத்தலையீடு.

**சிம்மம்** தொலைபேசி மிரட்டலால் முறையீடு, நம்பிக்கை, விடாமுயற்சியினால் காரிய சித்தி , அரச உழியரால் அவமதிப்பு,பயணம் .

**கன்னி** கௌரவ பதவிக்கு சிபார்சு,தொழிலால் அலைச்சல், சடங்குகளில் கலந்து கொள்ளல், வெளியூர் உறவினர் வருகை,எதிர்பார்த்தது காணல் நீராகியது.

**துலாம்** கைவிட்ட பயணம் தொடரவாய்ப்பு,பிதாவின் உதவி, நீண்டநாள் பகைவரை சந்தித்ததால் அச்சம்,புதிய மனை அமைக்கும் ஆலோசனை,சுவீப் அதிர்ஷ்டம்.

**விருச்சிகம்** பாதுகாப்பின்மையினால் களவு, விஷக்கடி, ஆயுதத்தால் காயம்,வியாபாரத்தை கைவிடும் யோசனை, திருமண த்திற்காக தரகர்களை சந்திப்பு.


**தனுசு** கடனால் மனமுறிவு, மூத்த சகோதர உதவி,விதண்டா வாதத்தினால் பகைமை, வெளியூர் பயணத்திற்கான ஆயத்தம் ,மனைவியின் நோய் பற்றிய கவலை.

**மகரம்** நண்பனும் பகைவனாதல்,நம்பியிருந்தது காலை வாரிவிடல், கடனைப்பெற வேண்டும்,விபத்தினால் அருந்தப்பு, திருடர் கைவரிசை, பழுதான பொருளினால் கவலை, சீட்டினால் பணம்.

**கும்பம்** கைவிட்டவை சாதகமாதல்,நண்பர் உதவி,பதவி முன்னேற்றம், நிதானத்தால் சாதனை,காதல் மலர்தல், குழந்தைப்பிரசவம், பூப்படைதல்.

**மீனம்** பங்குப்பிரச்சினை,சகோதரர் மத்தியில் பிணக்கு, பயணமுயற்சி, தாரசுகக்கேடு, ஆவணப் பிரச்சினையால வேலைவாய்ப்பு பாதிப்பு, வாகனயோகம், சுவீப்பில் சிறு தொகை.

# காயத்தால் விலகல்



(கிங்ஸ்டன்)

உலக தடகள சம்பியன்ஷிப் போட்டிகளில் இருந்து, காயம் காரணமாக ஜமேக்காவின் யோகன் பிளேக் விலகினார்.

ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் 14ஆவது உலக தடகள சம்பியன்ஷிப் (ஓகஸ்ட் 10-18) போட்டி நடைபெறவுள்ளது. இதில் உலகின் மின்னல் மனிதன் ஜமேக்காவின் உசைன் போல்ட் உள்ளிட்ட முன்னணி வீர, வீராங்கனைகள் பங்கேற்கவுள்ளனர்.

இதிலிருந்து மற்றொரு ஜமேக்க வீரர் யோகன் பிளேக் (வயது-23) காயம் காரணமாக விலகியுள்ளார். கடந்த 2012 லண்டன் ஒலிம்பிக்கில் 100 மீற்றர், மற்றும் 200 மீற்றர், ஓட்டத்தில் இவர் வெள்ளிப்பதக்கம் வென்றிருந்தார்.

கடந்த ஏப்ரல் மாதம் கிங்ஸ்டனில் நடந்த உள்ளூர் போட்டியின் போது பிளேக்கிற்கு தொடையின் பின்பகுதியில் காயம் ஏற்பட்டது. இதனால், ஜமேக்காவில் நடந்த சீனியர் சம்பியன்ஷிப் போட்டியில் இவரால் பங்கேற்க முடியவில்லை.

இருப்பினும், கடந்த 2011, உலக சம்பியன்ஷிப்பில் தங்கம் வென்றதன் அடிப்படையில், மொஸ்கோ போட்டிக்கு தேர்வானார். ஆனால், காயம் முழுமையாக குணமடையாத காரணத்தினால், உலக சம்பியன்ஷிப் தொடரில் இருந்து, பிளேக்விலகினார்.

# அதிரடிச் சோதனை

(ரோம்)

ஊக்கமருந்து சோதனையில் சிக்கிய ஜமேக்கா தடகள வீரர்கள் அசதபா பவல், ஷெரோன் சிம்சன் இருவரும் தங்கியிருந்த விடுதி அறையில், இத்தாலியப் பொலிஸார் அதிரடி சோதனை நடத்தினர். பிரபல தடகள வீரர்களான டைசன் கே (அமெரிக்கா), அசாபா பவல் (ஜமேக்கா) ஆகியோரிடம் சமீபத்தில் நடத்தப்பட்ட ஊக்கமருந்து பரிசோதனையில், அவர்கள் இருவரும் தடை செய்யப்பட்ட ஆக்சிலோபிரைன் என்ற ஊக்கமருந்தை உட்கொண்டது தெரியவந்தது. இதையடுத்து ரஷ்யாவின் மொஸ்கோ நகரில் நடைபெற உள்ள சர்வதேச தடகளப் போட்டியில் இந்த வீரர்கள் பங்கேற்கத் தடை விதிக்கப்பட்டது.

இந்த நிலையில், ஜமேக்கா வீரர்கள் அசாபா பவல், ஷெரோன் சிம்சன் இருவரும் ரோம் நகரில் தங்கியிருந்த விடுதி அறையில் இத்தாலி பொலிஸார் நேற்று முன்தினம் அதிரடி சோதனை நடத்தினர். இதில் தசைகளுக்கு வலுச்சேர்க்கும் ஊட்டச்சத்து உணவுப் பொருட்கள் மற்றும் மருந்துகள் கைப்பற்றப்பட்டதாகவும், அவற்றில் தடை செய்யப்பட்ட ஊக்கமருந்து கலந்துள்ளதா என்பதை அறிய பரிசோதனை நடத்தப்பட்டு வருவதாகவும் பொலிஸ் உயரதிகாரி அன்டோனியோ பிசாபியா தெரிவித்துள்ளார்.

ஊக்கமருந்து சோதனையில் நட்சத்திர வீரர்கள் பலர் அடுத்தடுத்து சிக்கி வருவது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விலகினார் மரியா ஷரபோவா

(ஸ்டான்போர்ட்)

அமெரிக்காவில் நடக்க உள்ள ஸ்டான்போர்ட் கிளாசிக் மகளிர் ரென்னிஸ் போட்டியில் இருந்து, நட்சத்திர வீராங்கனை மரியா ஷரபோவா (ரஷ்யா) காயம் காரணமாக விலகுவதாக அறிவித்துள்ளார். முன்னணி வீராங்கனைகள் பங்கேற்கும் இந்த தொடர், ஜூலை 22ஆம் திகதி ஆரம்பமாகி 28ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. சமீபத்தில் நடந்த விம்பிள்டன் கிராண்ட் ஸ்லாம் ரென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் சம்பியன் பட்டம் வென்ற பிரான்ஸ் வீராங்கனை மரியோன் பர்டோலி, 4ஆவது தர வீராங்கனை அக்னீஸ்கா ரத்வன்ஸ்கா (போலந்து), அவுஸ்ரேலியாவின் சமந்தா ஸ்டோசர் உட்பட மொத்தம் 28 பேர் பங்கேற்கின்றனர்.

இந்த தொடரில் பட்டம் வெல்வார் என எதிர்பார்க்கப்பட்ட ஷரபோவா, இடுப்புப் பகுதியில் ஏற்பட்டுள்ள காயம் காரணமாக விலகுவதாக நேற்று முன்தினம் அறிவித்தார். விம்பிள்டனில் தொடக்கத்திலேயே அதிர்ச்சித் தோல்வியடைந்து வெளியேறியதை அடுத்து, பயிற்சியாளர் தோமஸ் ஹாக்ஸ்டெட் உடனான ஒப்பந்தத்தை இரத்துச் செய்த ஷரபோவா, தனது புதிய பயிற்சியாளராக முன்னாள் நட்சத்திர வீரர் ஜிம்மி கானார்சை ஒப்பந்தம் செய்துள்ளார்.



# மீண்டும் மார்டினா

ஓய்வு பெற்ற முன்னாள் முதல்நிலை ரென்னிஸ் வீராங்கனை சுவிட்சர்லாந்தின் மார்டினா ஹிங்கிஸ் மீண்டும் போட்டியில் பங்கேற்கிறார்.

சுவிட்சர்லாந்து வீராங்கனை மார்டினா ஹிங்கிஸ் (வயது–32). ஒற்றையரில் 5, இரட்டையரில் 9 கிராண்ட் ஸ்லாம் பட்டங்கள் வென்றுள்ளார். முன்னாள் முதல்நிலை வீராங்கனையான இவர், 2007இல் ஊக்கமருந்து சோதனையில் சிக்கினார். இதனால், ரென்னிஸ் அரங்கில் இருந்து விடை பெற்றார். சில தினங்களுக்கு முன் ஹொல் ஓப் பேம் விருதையும் வென்றார்.

இந்நிலையில், மீண்டும் ரென்னிஸிற்கு திரும்பியுள்ள இவர், இரட்டையர் போட்டிகளில் பங்கேற்க முடிவு செய்துள்ளார். ஜூலை 29ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள கலிபோர்னியா ஓப்பன் ரென்னிஸ் தொடரில், சுலோவாகியாவின் டேனியலா ஹண்டுசோவாவுடன் இணைகிறார்.

இது குறித்து மார்டினா ஹிங்கிஸ் கூறுகையில், போட்டியில் விளையாடும் எனது வேகம் இன்னும் அப்படியே தான் உள்ளது. கலிபோர்னியா ஓப்பனில் விளையாட ஆர்வமாக உள்ளேன். இத்தொடரின் (1997) ஒற்றையர், இரட்டையர் பிரிவில் சம்பியன் பட்டம் வென்றுள்ளமை நம்பிக்கை தருகிறது என்றார்.

# காலிறுதியில் பிரான்ஸ்


(நோர்கோபிங்)

பெண்கள் யூரோ கிண்ணக் கால்பந்து தொடரின் காலிறுதிக்கு பிரான்ஸ் அணி தகுதி பெற்றது.

சுவீடனில் 11ஆவது யூரோ கோப்பை கால்பந்து (பெண்கள்) தொடர் நடைபெற்று வருகின்றது. இதில் ஜேர்மனி, இத்தாலி உள்ளிட்ட 12 அணிகள், மூன்று பிரிவுகளாக லீக் சுற்றில் பங்கேற்கின்றன. சி பிரிவு லீக் போட்டியில் ஸ்பெயின், பிரான்ஸ் அணிகள் மோதின.

பிரான்ஸ் அணிக்கு, போட்டியின் 5ஆவது நிமிடத்தில் ரினார்ட் ஒரு கோல் அடித்தார். இதற்கு ஸ்பெயின் அணியால், பதிலடி கொடுக்க முடியவில்லை. முடிவில், பிரான்ஸ் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து இரண்டு லீக் போட்டியிலும் வென்ற பிரான்ஸ், 6 புள்ளிகளுடன் முதல் அணியாக காலிறுதிக்கு தகுதி பெற்றது.



# முதலிடத்தில் மட்ரிட்

(மட்ரிட்)

அதிக மதிப்புமிக்க ஐரோப்பிய கால்பந்து கிளப் அணிகளின் பட்டியலில், ஸ்பெயினின் ரியல் மட்ரிட் அணி முதலிடம் பிடித்தது.

ஐரோப்பிய நாடுகளின் கூட்டமைப்பில் உள்ள கிளப் அணிகளின் மதிப்பின் அடிப்படையில், இந்த ஆண்டுக்கான முதல் 50 அணிகளின் பட்டியலை, போர்ப்ஸ் பத்திரிகை நேற்று முன்தினம் வெளியிட்டது.

இதில், ஸ்பெயினின் கால்பந்து கிளப் அணியான ரியல் மட்ரிட் முதலிடம் பிடித்தது. இதன் மொத்த மதிப்பு ரூ.1956 கோடி. கடந்த ஆண்டு மதிப்பை விட இது ரூ.776 கோடி அதிகம்.

கடந்த ஆண்டு முதலிடத்தில் இருந்த, இங்கிலாந்து கிளப் அணி மான்செஸ்டர் யுனைடெட் (ரூ.1881 கோடி), இம்முறை இரண்டாவது இடத்திற்கு தள்ளப்பட்டது. லா லிகா தொடரில் கோப்பை வென்ற பார்சிலோனா அணி (ரூ.1542 கோடி), ஐந்தாவது இடத்தில் இருந்து மூன்றாவது இடத்திற்கு முன்னேறியது.

இப்பட்டியலில் முதல் பத்து இடங்களைப் பிடித்த அணிகள்:

ரியல் மட்ரிட் (கால்பந்து), மான்செஸ்டர் யுனைடெட் (கால்பந்து), பார்சிலோனா (கால்பந்து), நியூயோர்க் யான்கீஸ் (பேஸ்போல்), டாலஸ் கவ்பாய்ஸ் (அமெரிக்க கால்பந்து), நியூ இங்கிலாந்து பேட்ரியாட்ஸ் (அமெரிக்க கால்பந்து), லொஸ் ஏஞ்சல்ஸ் டாக்ஜர்ஸ் (பேஸ்போல்), வோஷிங்டன் ரெட்ஸ்கின்ஸ் (அமெரிக்க கால்பந்து), நியூயோர்க் ஜெயின்ட்ஸ் (அமெரிக்க, கால்பந்து), ஆர்சனல் (கால்பந்து)

## நாளை முதல் நாள் ஆட்டம்

(கொழும்பு)

தென்னாபிரிக்க, இலங்கை அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக்கொண்ட ஒரு நாள் தொடரின் முதல் ஆட்டம் நாளைய தினம் 2.30 மணிக்கு கொழும்பு பிரேமதாச விளையாட்டு அரங்கில் பகலிரவு ஆட்டமாக இடம்பெறவுள்ளது.

முதலிரு போட்டிக்கான இலங்கை அணியின் கப்டனாக சண்டிமால் கடமையாற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நியூசிலாந்து வீரர் ஓய்வு

நியூசிலாந்து அணியின் மத்யூ சின்கிளையர் அனைத்து வித கிரிக்கெட்டில் இருந்தும் ஓய்வு பெற்றார். அறிமுக டெஸ்ட் போட்டியில் இரட்டைச்சதம் அடித்து அசத்தியவர் சின்கிளையர். இவருக்கு இரு குழந்தைகள் உள்ளனர். அவுஸ்ரேலியாவில் பிறந்து, நியூசிலாந்து அணியில் விளையாடிய இவர், 33 டெஸ்ட், 54 ஒருநாள் போட்டியில் பங்கேற்றார். கடைசியாக 2010இல் அவுஸ்ரேலிய அணிக்கு எதிரான டெஸ்டில் பங்கேற்றார். பின் முதல் தர போட்டிகளில் மட்டும் பங்கேற்று வந்தார். ஆறு மாதம் மட்டும் கிடைத்து வந்த இந்த வருமானம், குடும்பத்துக்கு போதவில்லை. இதனால், குடும்பத்தினருக்கு உதவும் வகையில், ஓய்வு அறிவித்த சின்கிளையர், வேலையற்றவர்களுக்கான சலுகைகளைக் கேட்டு விண்ணப்பித்துள்ளார்.

# ஏமாற்றமடையும் ஆர்தர்

(மெல்பேர்ன்)

அவுஸ்ரேலியாவின் முன்னாள் பயிற்சியாளர் மிக்கி ஆர்தர், கிரிக்கெட் அவுஸ்ரேலியாவை எதிர்த்து நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தார். தற்போது, இது ஊடகங்களில் வெளியானதால், ஏமாற்றம் அடைந்துள்ளார்.


அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் பயிற்சியாளர் மிக்கி ஆர்தர், அணியின் தொடர் தோல்வி, வோர்னர் சர்ச்சை காரணமாக, ஒப்பந்தம் முடியும் முன்பே, பதவியிலிருந்து நீக்கப்பட்டார். இதனால், கோபமடைந்த மிக்கி ஆர்தர், கிரிக்கெட் அவுஸ்ரேலியாவிடம் (சி.ஏ.,) ரூ. 22 கோடி நஷ்ட ஈடு கேட்டு, மெல்பேர்ன் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தார்.

இதில்,வட்சனுக்கும், கப்டன் கிளார்க் இருவருக்கும் இடையே நீண்ட நாட்களாக ஒத்துப்போகவில்லை. வட்சன் அவுஸ்ரேலிய அணியின் புற்றுநோய் என, மைக்கல் கிளார்க் தெரிவித்தார். தவிர, நான் தென்னாபிரிக்காவைச் சேர்ந்தவன் என்பதால், இனவெறி பாரபட்சம் பார்த்தனர். இந்திய தொடரின் போது, வட்சனை நீக்கியதுக்கு, சி.ஏ., ஆதரவு தரவில்லை, எனத்தெரிவித்திருந்தார்.

இந்தச் செய்திகள் ஊடகங்களில் வெளியானது. இது மிக்கி ஆர்தரை ஏமாற்றம் அடையச்செய்துள்ளது. இதுகுறித்து ஆர்தர் கூறுகையில், நீதிமன்றில் நான் சமர்ப்பித்த வழக்கு தொடர்பான இரகசிய ஆவணங்கள், ஒரு சிலரால் ஊடகங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. இது, துரதிஷ்டவசமானது. இதனால், மிகவும் ஏமாற்றமாக உள்ளது என்றார்.

# மேலானவர் லாரா

(லண்டன்)



இந்திய அணியின் சச்சினை விட, ஒரு படி மேலானவர் லாரா. இவர் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு அதிக போட்டிகளில் வெற்றியைத் தேடித் தந்துள்ளார் என, அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் கப்டன் பொண்டிங் தெரிவித்தார்.

இந்திய அணியின் சச்சின் இதுவரை, 198 டெஸ்ட் (51 சதம்), 463 ஒருநாள் போட்டிகளில் (49 சதம்) பங்கேற்று, சதத்தில் சதம் அடித்துள்ளார். இதேபோல, மேற்கிந்தியத்தீவுகள் அணியின் ஓய்வு பெற்ற வீரர் பிரையன் லாரா 131 டெஸ்ட் (34, சதம்), 299 ஒருநாள் (19 சதம்) போட்டிகளில் பங்கேற்றார்.

இது குறித்து பொண்டிங் மேலும் குறிப்பிடுகையில்,

என்னைப்பொறுத்தவரை சச்சின்,லாரா இருவரும் சிறந்த வீரர்கள். இருப்பினும், சச்சினை விட ஒரு படி மேலானவர் லாரா. ஏனெனில்,இவர் அதிக போட்டிகளில் அணியை வெற்றி பெறவைத்துள்ளார். லாரா அடுத்த நாள் களமிறங்குகிறார் என்றால், முதல் நாள் இரவில் எனக்குத் தூக்கமே வராது. சச்சினை கட்டுப்படுத்த வேண்டும் எனில், அதற்கான வழிகளை எளிதாக கண்டறிந்து விடலாம். லாரா அப்படியல்ல. அரைமணி நேரம் களத்தில் நிலைத்து நின்று விட்டால், அப்புறம் போட்டியை தன்வசம் கொண்டு வந்து விடுவார். என்னைப் பொறுத்தவரை லாரா சதம் அடிக்க வேண்டும் என்பது குறித்து நினைக்கமாட்டார். போட்டிகளில் வென்று, தொடரை கைப்பற்றுவதில் கவனமாக இருப்பார். தற்போதைய ஆஷஸ் தொடரில், முதல் டெஸ்டில் அவுஸ்ரேலியா தோற்றது. இருப்பினும், அவுஸ்ரேலிய அணி இப்போதைய நிலையில், சரியான பாதையில் தான் செல்கிறது. ஆஷஸ் தொடரை எப்படியும், 2-1 என, வெல்லும். இதற்கு கடினமான முயற்சி தேவை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.





உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் தடகள விழா அண்மையில் வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. இதில் வீர,வீராங்கனைகளின் தடகள திறன்கள் வெளிப்படும் வகையில் பல போட்டிகள் நடாத்தப்பட்டது. வித்தியாலய அதிபர் தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வில் வெற்றியீட்டியோருக்குப் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.



# கிண்ணம் வென்றது அரியாலை ஐக்கியம்

(மானிப்பாய்)

ஆறுகால்மடம் லோட்டஸ் விளையாட்டுக்கழகம் நடாத்திய மென்பந்து கிரிக்கெட் தொடரில் அரியாலை ஐக்கியம் அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

ஆறுகால்மடம் லோட்டஸ் விளையாட்டுக்கழகம் சொப்ற் லொஜிக் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட மென்பந்தாட்ட அணிகளுக்கிடையில் ஐந்து ஓவர் களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஒன்றை நடாத்தியது.

82 மென்பந்து கிரிக்கெட் அணிகள் பங்குபற்றிய இச்சுற்றுப் போட்டியின் அரையிறுதி மற்றும் இறுதி ஆட்டங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 2 மணிக்கு நடைபெற்றது.

முன்னதாக நடைபெற்ற அரையிறுதி ஆட்டங்களில் லெவின்ஸ்டார்ஸ் அணியினை 4 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகமும், ஏபி அணியினை 16 ஓட்டங்களால் மல்லாகம் ஸ்ரீ முருகன் அணியும் வென்று இறுதிப்போட்டிக்குள் நுழைந்தன.

தொடர்ந்து நடைபெற்ற இறுதிப் போட்டியில் அரியாலை ஐக்கியம் அணியும், மல்லாகம் ஸ்ரீமுருகன் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அரியாலை ஐக்கியம் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய மல்லாகம் ஸ்ரீமுருகன் அணி 6.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 33 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 34 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய அரியாலை ஐக்கியம் அணி 7.3 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதன் மூலம் அரியாலை ஐக்கியம் லோட்டர்ஸ் விளையாட்டுக்கழகத்தின் வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

இச்சுற்றுப்போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரராக மல்லாகம் ஸ்ரீமுருகன் அணியின் எஸ்.புனிதராஜா, சிறந்த பந்து வீச்சாளராக ஏபி அணியின் ரஜராஜ், இறுதிப் போட்டியின் நாயகனாக அரியாலை ஐக்கிய அணியின் ஏ.எஸ்.றொசான் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

# மட்டுவில் மோகனதாஸ், அச்சுவேலி ஸ்ரார் காலிறுதிக்கு முன்னேற்றம்

(மட்டுவில்)

மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தினால் நடாத்தப்பட்டு வரும் ஆண்டு நிறைவு கரப்பந்தாட்டத்தொடரின் காலிறுதிப் போட்டிக்கு மட்டுவில் மோகனதாஸ், அச்சுவேலி ஸ்ரார் அணிகள் தகுதிபெற்றுள்ளன.

மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தின் 48ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் இரண்டு பிரிவுகளில் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நடாத்தப்பட்டு வருகின்றது.

மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வரும் இப்போட்டித் தொடரில் பி பிரிவுக்கான முதல் போட்டியில் மட்டுவில் மோகனதாஸ் அணியும்,கைதடி குமரன் அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய மட்டுவில் மோகனதாஸ் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் மட்டுவில் மோகனதாஸ் அணியும், நீர்வேலி ஐக்கியம் அணியும் மோதின. இதில் மட்டுவில் மோகனதாஸ் அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

ஏ பிரிவுக்கான போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும், அச்சுவேலி ஸ்ரார் அணியும் மோதின. இதில் அச்சுவேலி ஸ்ரார் அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது. (இ)

# இறுதியில் சென். மேரிஸ்

(அரியாலை)

அரியாலை சனசமூக நிலையம் 64 ஆவது ஆண்டு நிறைவினையொட்டி நடாத்திவரும் கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டிக்கு சென். மேரிஸ் அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

அரியாலை சனசமூக நிலையத்தின் 64ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்.மாவட்ட கால்பந்தாட்ட அணிகளுக்கிடையிலான மாபெரும் கால்பந்தாட்டப் போட்டி நடாத்தப்பட்டு வருகின்றது.

அணிக்கு 7 பேர் கொண்ட இப்போட்டித் தொடரின் அரையிறுதி ஆட்டம் கடந்த வாரம் அரியாலை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் அனுபவம் மிக்க ஊரெழு றோயல் அணியும், இளம் வீரர்களைக் கொண்ட நாவாந்துறை சென்.மேரிஸ் அணியும் மோதின.

முற்பாதி ஆட்டத்தில் சென்.மேரிஸ் அணி 1:0 கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

ஆட்டத்தின் இறுதி நேரத்தில் சென்.மேரிஸ் அணி மேலும் ஒரு கோல் போட்டது. இறுதியில் சென்.மேரிஸ் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது.

# அரையிறுதியில் மானிப்பாய் பரிஷ்

(சுன்னாகம்)

யாழ். மாவட்ட கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான பிரிவு மூன்றின் ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடரின் அரையிறுதி ஆட்டத்திற்கு மானிப்பாய் பரிஷ் அணி தகுதிபெற்றுள்ளது.

இலங்கை கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட கிரிக்கெட் அணிகளின் பிரிவு - மூன்றிற்கான ஒரு நாள் கிரிக்கெட் போட்டி தற்போது நடைபெற்று வருகின்றது.

ஸ்கந்தவரோதயக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் கிறாஸ்கோப்பர் அணியினை எதிர்த்து மானிப்பாய் பரிஷ் அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய மானிப்பாய் பரிஷ் அணி 38 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 195 ஓட்டங்ககளைப் பெற்றது. இதில் வினோத் 51, ஹரிகரன் 48 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் ஜனந்தன் நான்கு, அஜித் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 196 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கிறாஸ்கோப்பர் அணி 35.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 127 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் கஜன் மட்டும் 40 ஓட்டங்களைப் பெற்றார். ஏனைய அனைவரும் சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். பந்து வீச்சில் வினோத் மூன்று, ஹரிகரன், கிசோ, துவாரகன் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

# அலன்ராஜ், மதுஷன் சிறப்பான செயற்பாடு வென்றது யாழ். மத்திய கல்லூரி

(யாழ்ப்பாணம்)

அலன்ராஜ், மதுஷன் ஆகியோரின் சிறப்பான செயற்பாட்டின் மூலம் யாழ். மத்திய கல்லூரி அணி 139 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான முதல் சுற்று ஆட்டமொன்று கடந்த வாரம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய யாழ். மத்திய கல்லூரி அணி அலன்ராஜின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் ஸ்திரமான நிலையை அடைந்தது. இறுதியில் யாழ். மத்திய கல்லூரி அணி 48.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 253 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அலன்ராஜ் 97 பந்துகளை எதிர்கொண்டு 54, ஜெய் ஆஸ் 33, கோமதகன் 28, தர்சன் 25 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் தனுஜன் நான்கு, பயஸ் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 254 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி மதுஷனின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறியது. இறுதியில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி 24.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 114 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது. இதில் தனுஜன் 28, விதுஷன் 15, கோகுல்ராஜ் 10 ஓட்டங்களைப்பெற்றனர். பந்து வீச்சில் மதுஷன் நான்கு, நிரோஜன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். (எஸ்.பி.)

# பூகோள அரசியலில் எதுவும் சாதாரணமப்பா...

- எம்.எஸ்.எம்.ஐயூப் கட்டுரையிலிருந்து.

இந்திய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் கடந்தவார ஆரம்பத்தில் இலங்கைக்கு விஜயம் செய்தார். அவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்த போது பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்குவதில் உள்ள நடைமுறை பிரச்சினைகளை ஜனாதிபதி அவருக்கு எடுத்துக் கூறியதாக கூறப்படுகிறது. அதேவேளை நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் இணையுமாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பை தூண்டுமாறும் ஜனாதிபதி கேட்டுக் கொண்டதாக கூறப்படுகிறது.

ஆனால் இலங்கை அரசாங்கம் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்திற்கு அப்பால் செல்லும் வகையில் அரசியல் தீர்வொன்றை காண்பதாக இந்தியாவுக்கும் சர்வதேச சமுகத்திற்கும் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என மேனன் வலியுறுத்தியதாகவே இந்திய ஊடகங்கள் தெரிவித்தன. அதன் பின்னர் மேனன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர்களை சந்தித்தார். 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை ஒருதலைப்பட்சமாக மாற்றி அமைக்க இந்தியா இடமளிக்கப்போவதில்லை என மேனன் இச்சந்திப்பின் போது கூறியிருக்கிறார்.

அதாவது ஜனாதிபதிக்கு நேரடியாக கூற வேண்டியதை மேனன் அரசாங்கத்தின் அங்கமாக இருக்கும் மு.கா.விடம் கூறியிருக்கிறார். இதற்கிடையே வடமாகாண சபைத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டு இம்மாதம் 25ஆம் திகதி முதல் ஓகஸ்ட் முதலாம் திகதி வரை வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படும் என தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார்.

அதாவது வீரவன்ச வற்புறுத்தியது போல் பொலிஸ், காணி அதிகாரங்கள் பறிக்கப்பட்ட நிலையில் வட மாகாண சபைத் தேர்தல் நடைபெறப்போவதில்லை. அதுமட்டுமல்ல, ஏற்கனவே நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இரண்டு அதிகாரங்களை பறிப்பதற்கான திருத்தமும் நிறைவேற்றப்படுமா என்பது இப்போது சந்தேகமாகவே இருக்கிறது. ஏனெனில் மாகாணசபை தேர்தல் ஒன்று பிரகடனப்படுத்தப்பட்டு இருக்கும் நிலையில் மாகாண சபைகளின் அதிகாரங்கள் தொடர்பான திருத்தங்களை நிறைவேற்ற முடியுமா என்ற வாதமும் இங்கே எழுகிறது.

பொதுவாக பார்த்தால் எதிலுமே மாற்றம் இல்லாமல் வட மாகாண சபைக்கான தேர்தல் நடைபெறப் போகிறது. அத்தேர்லுக்குப் பின்னரும் மாகாண சபைகளின் அதிகாரங்கள் தற்போதைய நிலையிலேயே இருக்கும் என்றே ஊகிக்க முடியும்.



இந்தியாவிற்கு இந்த விடயங்களில் தலையிட முடியாது என்றும் இது இலங்கையின் இறைமை தொடர்பான விடயம் என்றும் சிலர் வாதிடுகிறார்கள். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் இந்தியாவுக்கான பங்கினை இந்தியா நிறைவேற்றாத நிலையில் இந்தியாவுக்கு இவ்வாறு நெருக்குதலை பிரயோகிக்க உரிமை இல்லை என ஹெல உருமய கூறுகிறது. பாதுகாப்புச் செயலாளரும் அண்மையில் இக்கருத்தை வெளியிட்டு இருந்தார்.

அந்த வாதத்தை ஏற்பதாக இருந்தால் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை பரவலாக்குவதில் உள்ள கஷ்டங்களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, சிவசங்கர் மேனனுக்கு எடுத்துக் கூறத் தேவையில்லை. தெரிவுக் குழுவில் இணையுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தூண்டுமாறு மேனனை கேட்டுக் கொள்ளத் தேவையில்லை. 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தைப் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்த அமைச்சர் பசில் ராஜபக்ஷ இந்தியாவுக்குச் செல்லவும் தேவையில்லை.

இந்தியாவுக்கு இதில் தலையிட முடியாது என்பதை நாம் ஏற்றுக்கொண்டாலும் தமது அரசியல், பொருளாதார நலன்களின் காரணமாக இந்தியா தலையிட நினைத்தால் தலையிடும். அதற்குத் தான் அரசியலில் நிபுணர்கள் பூகோள அரசியல் (geo-politics) என்கிறார்கள். இந்த பூகோள அரசியல் என்று வரும் போது நீதி, நியாயம், இறைமை ஆகிய அனைத்தும் அர்த்தமற்றுப் போகின்றன. 1980களில் இந்தியா தாமாகவே வற்புறுத்தி இலங்கையோடு செய்து கொண்ட ஒப்பந்தமொன்றின் கீழ் இலங்கைக்கு படைகளையே அனுப்பியமை குறிப்பிடத்தக்கது.

# உலகத் தமிழினத் தலைவனின் நிலையை என்னவென்று வர்ணிப்பது?

- செங்குட்டுவன் -

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.கருணாநிதி சென்னையில் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில், தமிழகத்தில் அகதிகளாகத் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்கள் அவுஸ்திரேலியா சென்று சுதந்திரமாகவும் வசதிகளுடனும் வாழ விரும்பினால், அவர்களை இந்திய மத்திய அரசும் தமிழக அரசும் தடுக்கக்கூடாது என்றும், இதை சட்டப்பிரச்சினையாகப் பார்க்காமல் ஒரு மனிதாபிமானப் பிரச்சினையாகப் பார்க்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

அண்மையில் தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கை அகதிகள் 17 பேர் சட்ட விரோதமாக அவுஸ்திரேலியா செல்ல முற்படுகையில், தமிழகப் பொலிசாரால் கைது செய்யப்பட்ட சம்பவத்தையொட்டி கருணாநிதி விடுத்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறியிருக்கிறார்.

90 வயதுடைய ஒரு மூத்த தலைவர், திராவிட முன்னேற்றக் கழகத்தை பல்லாண்டுகளாக வழி நடாத்தும் ஒருவர், தமிழகத்தின் முதலமைச்சராகப் பல தடவைகள் பதவி வகித்த ஒருவர் - இத்தனை "சிறப்புகளும்" உள்ள கருணாநிதி இலங்கைத் தமிழ் அகதிகளின் விமோசனத்துக்குக் கண்டு பிடித்துள்ள புதிய வழிமுறையைப் பார்க்கும் போது, உலகத் தமிழினம் பெருமைப்படுவதா அல்லது வெட்கித் தலைகுனிவதா எனத் தெரியவில்லை.

அவர் இலங்கைத் தமிழ் அகதிகளுக்காக வடிக்கும் இந்த நீலிக்கண்ணீருக்கிடையே ஒரு விடயம் அம்பலத்துக்கு வந்துள்ளதை முதலில் அனைவரும் அவதானிப்பது அவசியம். அதாவது தமிழகம் இலங்கைத் தமிழர்களின் "தாய்வீடு" என்றும், அங்கு அவர்களுக்குப் பூரண பாதுகாப்பும், வாழ்க்கை வசதிகளும் கிடைக்கும் என்றும், தமிழகத்தை மாறி மாறி ஆட்சி செய்து வரும் இரண்டு திராவிடக் கழகங்களும் கடந்த காலங்களில் சொல்லி வந்தாலும், அங்கும் இலங்கைத் தமிழன் மூன்றாந்தரப் பிரசையாகவே (இலங்கையில் பரவாயில்லை, அவர்கள் இரண்டாந்தரப் பிரசைகளாகவே நடத்தப்படுகிறார்கள்) நடத்தப்படுகிறார்கள் என்பதைத் தனது அறிக்கையின் மூலம் கருணாநிதி ஒத்துக் கொண்டிருக்கிறார்.



கைது செய்யப்பட்ட இலங்கை அகதிகளும், தாங்கள் 23 ஆண்டுகளாக தமிழகத்தில் வாழ்ந்தும் எந்தச் சுகத்தையும் காணாததாலேதான் அவுஸ்திரேலியா செல்ல முயன்றதாகப் பொலிசாரின் விசாரணையில் கூறியிருக்கின்றனர்.


இலங்கையிலிருந்து அவுஸ்திரேலியா சென்றவர்கள், இதுவரை காலமும் இலங்கை அரசின் இன ஒடுக்குமுறை காரணமாகவே அங்கிருந்து வெளியேறுவதாகவே சொல்லி வந்தனர். அப்படியானால் தமிழகத்திலும் இலங்கைத் தமிழர்கள் மீது ஒடுக்குமுறை இருப்பதாலா அங்கிருந்தும் இலங்கைத் தமிழ் அகதிகள் வெளியேறுகின்றனர் என்பதை, கருணாநிதியும் ஜெயலலிதாவும் விளக்க வேண்டும்.

இது ஒருபுறமிருக்க, கருணாநிதி விடுத்துள்ள அறிக்கையைப் பார்த்தால், வயது மூப்பின் காரணமாக அவர் புத்தி பேதலித்துப் போயுள்ளாரா என்றும் எண்ணத் தோன்றுகிறது. அதாவது அவரது அறிக்கையின்படி, இலங்கைத் தமிழர்களை அவுஸ்திரேலிய அரசாங்கம் "வா..வா" என இரு கைநீட்டி அழைப்பது போலவும், இந்திய மத்திய அரசும் தமிழக அரசும்தான் அதைத் தடுப்பது போலவும் கூறியிருக்கிறார்.

அவுஸ்திரேலியா சட்ட விரோதக் குடியேற்றக்காரர்களை ஒருபோதும் ஏற்காது என்பதும், அங்கு சட்ட விரோதமாகச் சென்ற பல இலங்கைத் தமிழர்கள் மட்டுமின்றிச் சிங்களவர்களும் நூற்றுக் கணக்கில் திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறார்கள் என்பதும் கருணாநிதிக்கு தெரியாமல் இருக்க முடியாது. அப்படியிருக்க இந்தச் சட்ட விரோத சிந்தனை அவருக்கு எப்படி உதயமாயிற்று?

ஒன்றில் அவருக்கு புத்தி பேதலித்துப்போய் என்ன பேசுகிறோம் என்ற நிலை தெரியாமல் போயிருக்க வேண்டும். அல்லது பணம் பண்ணுவதிலேயே குறியாக இருக்கும் கருணாநிதி, அவுஸ்ரேலியாவுக்கு சட்ட விரோதமாக ஆட்களைக் கடத்திச் செல்லும் முகவர்களுடன் தொடர்பு வைத்திருக்க வேண்டும் என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

## உழைப்பு...




அமெரிக்காவில் சுதந்திரப் போர் நடந்து கொண்டிருந்தபோது, சில வீரர்கள் ஒரு பெரும் தூணை சிரமப்பட்டு நகர்த்திக் கொண்டிருந்தனர்.

அக்குழுவின் தலைவன் குதிரை மீது அமர்ந்து, அவர்களை அதட்டி வேலை வாங்கிக் கொண்டிருந்தான்.

அப்போது அவ்வழியே குதிரையில் வந்த மற்றொரு வீரன், அந்தக் குழுத் தலைவனைப் பார்த்து, "நீயும் இறங்கி இவர்களுக்கு உதவக்கூடாதா?" என்று கேட்டான்.

"நான் இந்தக் குழுவின் தலைவன், இவர்களுடன் சேர்ந்து வேலை செய்வதா?" என்று உறுமினான்.

வந்த வீரன், தனது குதிரையிலிருந்து இறங்கி, அந்த வீரர்களோடு சேர்ந்து தூணை நகர்த்தி வைத்துவிட்டுத் தனது குதிரையில் ஏறிக் கிளம்பினான்.

"நீ யார்?" என்று அந்தக் குழுத் தலைவன் கேட்டான்.


"என் பெயர் ஜோர்ஜ் வோஷிங்டன்" என்று கூறிவிட்டு விரைந்தான்.

அவர்தான் அமெரிக்காவின் முதல் ஜனாதிபதி.

சினிமாவில் ஒழுக்கம் தவறாதவன் இந்த டி.ஆரு.... எப்படி "தம்" புடிச்சு பாடுறீங்க என்று கேட்கிறாங்க... நான் எப்போதுமே "தம்" அடிக்காதவன்... சுயமாரியாதையை விட்டுவிட்டு வா... சொர்க்கமே தருகிறேன் என்றால்... சுங்குவார் சத்திரத்தில் சுக்கு காபி விற்றாலும் விற்பேனே தவிர சுயமரியாதையை விட்டுவிட்டு வர மாட்டேன்... என்னை நிறைய பேர் கிண்டல் செய்கிறார்கள்... எவ்வளவு மருந்து போட்டு பார்த்தாலும், என்னென்ன பவுடர் தடவி பார்த்தாலும், கேசவர்த்தினி கூட தடவிப் பார்த்தாலும் இறைவன் உன் மீது வைக்க வேண்டும் நேசம். அதனால்தான் என் தலையில் இவ்வளவு கேசம். இல்லையேல் அது போய் விடும் மோசம். என்ன தடவினாலும் ஆகிவிடும் நாசம். குத்து டான்ஸ் ஆடுகிறனே தவிர ஆன்மிகத்தையே பாடிக் கொண்டிருக்கிறேன். பாட முடிவதால் வருகிறது தாளம். தாளம் என்பது என் ரத்த நாளம். தோளில் தட்டுகிறேன் அதுவே தோல் வாத்தியம். துணிச்சல் உள்ளவனுக்கு மட்டுமே இது சாத்தியம். அன்றும் சரி... இன்றும் சரி... கலைத் தாகத்தோடு இருக்கிறேன். அதனால்தான் ஆடுகிறேன் குத்துப்பாட்டு. "ஒரு தலை காதல்" படத்தில் மொத்த பாட்டு எட்டு. அதில் நாலு குத்துப் பாட்டு. இல்லை அதில் வெத்துப்பாட்டு."

- டி. ராஜேந்தர்

# சொன்னார்கள்...



சினிமாவில் இருப்பது போன்று எல்லா இடங்களிலும் பெண்களுக்கு சுதந்திரம் தரப்பட வேண்டும். நானெல்லாம் சினிமாவில் இருக்கிறேன் என்றால் எனது பெற்றோர்தான் காரணம். அவர்கள் என் மீது நம்பிக்கை வைத்திருக்கின்றனர். என்னை தைரியமாக வளர்த்திருப்பதால் என்னால் எந்த விசயத்தையும் எதிர்கொள்ள முடிகிறது. ஆனால், இன்றைக்கும் பல வீடுகளில் பெண்களுக்கு சுதந்திரம் கொடுப்பதில்லை. ஏன் மேடைகளில் பெண் சுதந்திரம் பற்றி வாய் கிழிய பேசுபவர்களேகூட அவர்கள் வீட்டுப் பெண்களை கூண்டுக்கிளிகளாகத்தான் வளர்க்கிறார்கள். ஆண்களிடம் சகஜமாக பேசக்கூடாது. பழகக்கூடாது என்று ஒவ்வொரு வீட்டிலும் கட்டளை போடுகிறார்கள். இதனால்தான் பெண்கள் தனிமைப்படுத்தப்பட்டு ஆண்களை கண்டாலே பயப்படும் நிலை ஏற்படுகிறது. அவர்கள் ஆண்களிடமும் சகஜமாக பழகும்போதுதான் அவர்களது ப்ளஸ் மைனஸ் நன்றாக தெரியும். ஒரு பிரச்சினை என்றால் அதை சமாளிக்கவும் முடியும். அதனால் இந்த பெற்றோர்கள் நிறைய மாற வேண்டும்.

- இலியானா

"பாரதிகண்ணம்மா", "பொற்காலம்" தொடங்கி "சிங்கம் 2" வரைக்கும் 27 படங்களுக்கு ஒளிப்பதிவாளராக பணியாற்றிவிட்டேன். சினிமா ஆசை பிடித்து சென்னைக்கு வந்தேன். ஏமாற்றம், துரோகம், கண்ணீர் என எல்லாம் சுமந்த காலங்கள் உண்டு. விடா முயற்சி மட்டுமேதான் என்னை இந்த இடத்துக்கு கொண்டு வந்து சேர்த்திருக்கிறது.

கதைதான் ஒரு படத்தின் அளவுகோல். நான் எதிர்பார்க்கிற சில விஷயங்கள் சரியாக இருந்தால் வேறு யோசனை இல்லாமல் ஒரு படத்துக்குள் போய் விடுவேன். அதனால்தான் ரசனையாக படம் எடுக்கிற சேரன், வேகமான திரைக்கதைகளை கொண்ட ஹரி, நியாயமான கதை சொல்லும் கே.எஸ்.ரவிக்குமார் உள்ளிட்ட பலதரப்பட்ட படைப்பாளிகளிடம் பயணிக்க முடிகிறது.

எல்லோருக்கும் போலவே எனக்கும் சறுக்கல் இருக்கிறது. ஆனால் எழுந்திருக்க முடியாத அளவுக்கு இல்லை. சேரனோடு 4 படங்கள். கே.எஸ். ரவிக்குமார் இயக்கத்தில் "தெனாலி", "வரலாறு" என 2 படங்கள். ஹரி ஞாபகம் வந்தாலே, கூடவே என் ஞாபகமும் பலருக்கும் வந்து விடும். இன்னும் சில படங்கள்... ஆனால் இவற்றைத் தாண்டி ரசனையாக ஒரு படத்தில் வேலை பார்க்க ஆசை இருக்கிறது. "உதிரிப்பூக்கள்", "சந்தியாராகம்", "மெட்டி", "16 வயதினிலே", "நாயகன்", "புவனா ஒரு கேள்விக்குறி", "மகாநதி", "பிதாமகன்" என கவனம் ஈர்த்த படங்களைப் போல் ஏதாவது ஒரு படத்திலாவது வேலை பார்க்க வேண்டும். பணத்தை மட்டுமே குறிவைக்கிற சினிமாக்கள் சில நேரங்களில் கவலை தருகிறது.

- ஒளிப்பதிவாளர் ப்ரியன்


தீராத காதலாகவும், கருணையாகவும் சினிமா என்னை துரத்திக் கொண்டே இருக்கிறது. சுயநலமாக செயல்படாமல் போனது கூட என் வளர்ச்சிக்கு தடையாக இருந்திருக்கலாம். என்னை ஒரு வட்டத்துக் குள்ளேயே வைத்து இலாபம் தேட நினைத்தவர்கள் நிறைய பேர் இருந்தார்கள். எனக்குப் பிரியமான ஒரு கனவை நானே கண்டுபிடிக்கத் தவறி நின்ற தருணங்கள் நிறையவே இருக்கின்றன. அண்மைக் காலமாக சினிமா விழாக்களுக்கு போவதைக் கூட தவிர்த்து விட்டேன். அப்படியே போனாலும் டைரக்டர் வாசு சாரின் மகன் என்கிற அடையாளம்தான் கூடவே வருகிறது. இதை தாண்டிய அடையாளம், ஒரு வெற்றி இதுவெல்லாம் கூட இருந்தால் அதன் மதிப்பு எப்படியிருக்கும் என்கிற ஆசை இப்போது துளிர்க்கிறது.

என்னை நானே வடிவமைக்க ஆசைப்பட்டேன். ஒவ்வொரு படத்தின் போதும் நம்ம ரூட் எதுவென சரியாக கண்டுபிடிக்க முடியவில்லை. கேட்கும் போது, நன்றாக இருக்கிற கதை, படமாக வந்து பார்க்கும் போது முகம் சுளிக்க வைக்கும். இது ஒரு முறை இல்லை. அடுத்தடுத்தும் இந்த நிலை தொடர்ந்ததால், நானே அமைதியாகி விட்டேன்.

போதும்... போதும்... என்கிற அளவுக்கு பாடம் படித்து விட்டேன். என்னை தவறான பாதைக்கு அழைத்துப் போய்விட்டார்கள். அங்கேயிருந்து மீண்டு வருவதற்கான ஒரு பாதையை இப்போது நான் நடிக்கும் "படம் பேசும்" என்ற இந்த படம் தொடங்கி வைத்திருக்கிறது. என் மீது எனக்கே நம்பிக்கை வந்திருக்கிறது.

- நடிகர் சக்தி

# ஹெரோடொட்டஸின் சாதனை!






பயணம் செய்வதற்கு எந்த வசதிகளும் இல்லாத அந்தக் காலத்தில் - பாதைகள் ஒழுங்காக அமையாத புராதன காலத்தில் பல்லாயிரக்கணக்கான மைல்கள் பயணம் செய்த "வரலாற்று சாஸ்திரத்தின் தந்தை" என்றழைக்கப்பட்ட ஹெரோடெட்டஸின் சாதனை பிரமிப்பு ஊட்டக்கூடியது. அவர்:

- ஏதென்ஸுக்கு தெற்கே எகிப்து நாட்டின் நைல் நதிக்கரை வரை பயணம் செய்தார்.
- ஆசியாவில் பாபிலோனியாவைத் தாண்டி பாரசீகம் வரை வந்தார்.
- கருங்கடலில் பயணம் செய்து டான்யூப் நதியின் சங்கமத்தை தரிசித்தார்.
- கிரிமியா தீபகற்பத்தில் உலவினார்.
- ஜோர்ஜியா என்று இப்போது அழைக்கப்படும் பிரதேசத்துக்கு சென்றிருக்கிறார்.
- டயர் நதியில் பயணம் செய்து சிரியா நாட்டுக் கடற்கரைக்குச் சென்றிருக்கிறார்.
- லிவியா நாட்டு மண்ணிலும் அவர் பாதங்கள் பதிந்தன.
- கிரேக்கத்தைச் சுற்றியுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க அத்தனை இடங்களுக்கும் சென்று வந்திருக்கிறார்.
- வரலாற்றுச் சம்பவங்களைச் சேகரிக்க இவ்வளவு விரிவாகப் பயணம் செய்த முதல் மனிதர் ஹெரோடொட்டஸ்தான்!

# வாழ்த்துக்கள் தோழர் ரஃபேல் கொரியா!

– அ.மார்க்ஸ் –



விக்கி லீக்ஸ் மூலம் மேலை ஏகாதிபத்தியங்களை அதிர்ச்சிக்குள்ளாக்கிய ஜூலியன் அசாஞ்சேவுக்கு லண்டனில் உள்ள ஈக்வடார் நாட்டுத் தூதரகத்தில் தஞ்சமளிக்கப்பட்டிருப்பதால் ஏகப்பட்ட கடுப்பில் இருக்கும் ஒபாமா நிர்வாகம் இப்போது எட்வர்ட் ஸ்னோடெனுக்கும் ஈக்வடார் தஞ்சமளித்துவிடலாகாது என எச்சரித்துள்ளது.

அப்படிச் செய்தால் அமெரிக்கத் தூதுவரைத் திரும்ப அழைத்து தூதரக உறவை முறித்துவிடுவதாகவும், ஈக்வடாருடன் தான் செய்து கொண்டுள்ள வர்த்தக முன்னுரிமை ஒப்பந்தங்களை ரத்து செய்து விடுவதாகவும் அமெரிக்கா எச்சரித்துள்ளது.

ஈக்வடாரின் மொத்த ஏற்றுமதியில் 40 சதவீதம் அமெரிக்காவிற்குச் செல்லுகிறது. ஆண்டுதோறும் 9 மில்லியன் டொலர் மதிப்புள்ள பொருள்கள் அமெரிக்காவிற்கு ஏற்றுமதி ஆகின்றன. இந்த வர்த்தக முன்னுரிமை ஒப்பந்தம் வரும் ஜூலை 31ல் முடிவடைகிறது.

மீண்டும் அது புதுப்பிக்கப்படுவது குறித்து கிஞ்சித்தும் கவலைப் படாமல் சென்ற ஜூன் 27 அன்று அந்த ஒப்பந்தத்தைத் தானே முன்வந்து ரத்து செய்யப்போவதாக அறிவித்து அமெரிக்காவுக்கு ஈக்வடார் பதிலடி கொடுத்துள்ளது. அது மாத்திரமல்ல, அமெரிக்க அரசு மேற்கொள்ளும் சட்ட விரோத மரண தண்டனைகள் மற்றும் சித்திரவதைகளுக்கு எதிரான மனித உரிமைப் பயிற்சிகளுக்காக 23 மில்லியன் டொலர் நன்கொடை அளிப்பதாகவும் ஈக்வடார் அறிவித்துக் கடுப்பேத்தியுள்ளது.

"யாருடைய பயமுறுத்தல்களையும் அழுத்தங்களையும் எங்களால் சகித்துக் கொள்ள இயலாது. வணிக நலன்களுக்காக எந்நாளும் கொள்கைகளை விட்டுக் கொடுக்கவும் முடியாது" எனவும் ஈக்வடார் அறிவித்துள்ளது.

ஸ்னோடென் தனது நாட்டிற்கு வந்தால் அடைக்கலம் அளிக்கப்படும் எனவும் அறிவித்துள்ளார் ஈக்வடார் நாட்டுக் குடியரசுத் தலைவர் ர:.பேல் கொரியா.

"இந்த லத்தீன் அமெரிக்காக்காரங்க கடுப்பேத்திறாங்க மை லார்ட்" என ஒபாமா கத்திக்கொண்டிருப்பதாகக் கேள்வி.

# யா/கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் கற்றலுக்கு உதவும் கல்விச்சுற்றுலா

## மீளும் நினைவுகளுடனான அனுபவ பகிர்வு

(கடந்த வார தொடர்....)

எமது மூதாதையர்களின் ஒரு தொகுதியினரை பார்க்கப் போகின்றோம் என்ற சந்தோசத்துடன் தொடர்கின்றது. மகியங்கனையில் இருந்து காட்டுப்பிரதேசத்தை நோக்கி பயணம் தொடர்ந்தது.

**ஆதிவாசிகளும் அவர்களுடன் நாங்களும்...**

காட்டுப் பிரதேசத்தினூடாக அவர்களது பகுதிக்கு வாகனம் திரும்பிய போதே ஒரு சிறுவன் ஓடி வந்து எமது வாகனத்தில் ஏறி சிங்கள மொழியல்லாத பாசையில் எம்மை வரவேற்று பாடல் ஒன்றை வாகனத்தினுள்ளே பாடினான். தொடர்ந்து உரிய இடத்தை அடைந்ததும் பயணக் குழுவினர் மிகவும் மகிழ்ச்சியாக வேகமாக பேருந்தை விட்டு இறங்கி ஆதிவாசிகளை காண



திருகோணமலை இராவணன் வெட்டு

முற்பட்டனர். தோளில் கோடாரியுடன் தாயும் சடையும் வளர்த்த நிலையில் எம்மை அழைத்து வரவேற்றுக் கொண்ட அவர்கள் (இரு கைகளையும் நீட்டி மறு புறமாக கைலாகு கொடுத்து) முதலில் ஆதிவாசிகளின் தலைவரான திஸ்ஸ காமி வாழும் வீட்டிற்கும் பின் அவர் மரணித்த நினைவிடத்திற்கும் அழைத் துச் சென்றனர்.


திரு. தி. அபராஜிதன்
ஆசிரியர்
யா/கச்சாய் அ.த.க.பாடசாலை

அதற்கிடையே யானைத்தந்தமோதிரங்களையும், தேன் போத்தல்களையும் எம்மவருக்கு விற்கத்தவறவில்லை. எம்மில் பலர் அவர்களிடம் ஏமாந்து போன விடயங்களும் நடந்தேறின. (தேன், மோதிர கொள்வனவில்) அடர்ந்த காட்டினூடாக ஆங்காங்கே சாணகத் தால் மெழுகிய புற்கள், கோரைகள், மரத்தடிகள் போன்றவற்றினால் களி மண்ணில் கட்டிய வீடுகள் ஒற்றையடி பாதை வழியே அமைந்திருந்தன. இதில் முக்கிய சுவாரசியம் என்னவென்றால் ஒருசில சிறிய பெண்களைத் தவிர ஏனைய பெண்கள் எவரையும் காண முடியவில்லை.

அவர்களை பற்றி விசாரித்த போது அவர்கள் வெளியே வரமாட்டார்கள் என பதில் கிடைத்தது. ஆதிவாசிகள் தொல்பொருள் கூடம் ஒன்று (மியுசியம்) அமைத்துள்ளனர். அதன் பின்னர் பலர் ஒன்றுகூடி தமது கலை வடிவமான பாடலும் அதனோடு கூடிய ஆடல் ஒன்றையும் வழங்கினர். தொடர்ந்து தற்போது ஆதிவாசிகளின் பரம்பரை வழியாக அவ்இனத்தின் தலைவரை சந்திக்க அவரது வீட்டிற்கு சென்றோம். அவருக்கு சிங்கள மொழியில் பாண்டித்தியம் இருக்கவில்லை. வேறொரு சிங்கள மொழிதெரிந்த ஒருவருடாக அவரிடம் கலந்துரையாடல் மேற் கொண்டோம். தங்களுக்கு வீடு கட்டித் தர ஜனாதிபதி முன்வந்தபோதும் தாம் அதனை நிராகரித்ததாகவும் தமக்கு இப்படியான (களிமண் வீடு) வீட்டில் இருக்கத்தான் விரும்புவதாகவும் கூறினர். எனினும் அருகிலுள்ள தம்பானை கிராமத்தில் உள்ள பாடசாலைக்கு சென்று



திருக்கோணச்சரம்



திருகோணமலை அஸ்ரப் துறைமுகம்

புலமைப்பரிசில் பரீட்சையில் 120 புள்ளி பெற்ற ஒரு மாணவியும் க.பொ.த உ(சா/த) கல்விகற்ற ஒரு மாணவியும் கண்டு கதைக்க முடிந்தது. எனினும் ஊவா ஆதிவாசிகளின் ஆரம்பம் பற்றியும் அவற்றின் விரிவடைதல் பற்றியும் நாம் தெரிந்த விடயங்கள் மாணவர்களினதும் வாசகர்களினதும் நன்மை கருதி சற்று விரிவாக பார்ப்போம்.

இவ் இனத்தின் ஆரம்பம் இந்நாட்டுக்கு வருகை தந்த விஜயன் எனும் குமாரன் அரக்க (யக்ஸ) குலத்தை சேர்ந்த குவேனி எனும் பெண்ணை விவாகம் செய்து கொண்டதன் பலனாக தோன்றியதாக கூறப்பட்ட போதும் தொல்பொருள சம்பந்தப்பட்ட தகவல்களின்படி இலட்சக்கணக்கான வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த பலாங்கொடை மனித பாரம்பரியத்தோடு தொடர்புடையதாக கூறப்படுகின்றது. இவர்களில் பெரும்பாலானோர் வேடர்களில் இருந்து அனுராதபுரம், பொலனறுவை, கிழக்கு மாகாணத்தின் வாகரை, மட்டக்கள்ப்பு ஆகிய கடலோர பிரதேசங்களில் வசித்தனர். தற்போது தம்பாளை. சோனிகலை, திபுலாகலை, ரதுகலை, பெல்டூலபெத்த, வாகரை, மட்டக்களப்பு, பிரதேசங்களில் இவர்களது குடியிருப்புக்கள் காணப்படுகின்றது. நாம் சென்ற பிரதேசத்தில் சுமார் 340 குடும்பங்கள் வசிப்பதாக கூறப்படுகின்றது. இவர்களுடைய மொழியானது ஓர் மட்டுப்படுத்தப்பட்ட வசனக் கோவைக்கு உள்ளடங்கியுள்ளது.அதாவது வேட மொழியாக உள்ளது. உதாரணமாக தாய்க்கு அம்மி லாத்தோ எனவும் தகப்பனுக்கு அப்பிலாத்தோ எனவும் தண்ணீருக்கு தியராச்சா எனவும் பறவைக்கு வப்பி எனவும் மற்றவர்களை அழைக்கும் போது முதற்பெயருடன் அத்தே எனும் கௌரவத்தை அளிக்கும் சொல்லை உபயோகிப்பதையும் காணமுடிகின்றது.



மிட்சுபி சிமெந்து தொழிற்சாலை

மேலும் அரக்க குலத்தை சேர்ந்த இவர்கள் தமது பரம்பரையைச் சேர்ந்தோர் இறந்தபின்னர் பேய்களாகவே பிறப்பதாக நம்புகின்றனர். இதில் கொல்லைப் பேய்கள், எல்லைப்பேய்கள், கற்களை சார்ந்த பேய்கள் பிரதானமானதாக கருதுகின்றனர். இவர்கள் தமது இன்ப, துன்பங்களை வனத்தோடும் மலைக்குன்றுகள், சோலைகள், கற்கள், விருட்சகம் என்பவர்களே பகிர்ந்து கொள்வதாக கூறப்படுகின்றது.

அத்துடன் முன்பு பூரண வேட்டையில் ஈடுபட்ட ஒரு மனித இனமாக இருந்த போதும் தற்போது இயற்கை சூழலுக்கு அடிபணிந்துள்ளதைக் காண முடிகின்றது. தற்போது இவர்களது பிரதேசத்தை சூழ வன பரிபாலன ஊழியர்கள் கடமை புரிவதாக கூறப்படுகின்றது. அத்துடன் ஊன முற்ற கர்ப்பமுற்ற, அல்லது தண்ணீர் அருந்தும் புல்தின்னும் மிருகங்களையோ அல்லது குட்டிகளையோ ஒரு போதும் வேட்டையாடுவதில்லை. அத்துடன் வேடுவர் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட மிகச் போசனை சுவையான உணவாக தேன் கருதப்படுகின்றது. இறைச்சி வேறு கனி வகைகளும் தேனில் பதனிட்டு வைக்கப் படுகின்றது. தற்போது அவர்களுக்கே உரிய பலவித கைவேலைப் பாடுகளும் பாரம்பரிய தொழிலான தேன் சேர்த்தல் உள்ளூர் மூலிகைகளாக கருதப்படும் இயற்கை பொருள்கள் சேர்ப்பதிலும் அவைகளை சந்தைப்படுத்துவதிலும் வாணிபத் துறைக்கு அண்மிக்கும் ஓர் சாயல் தென் படுகின்றது.

இவை எல்லாவற்றையும் மேம்படுத்தவும் ஆதிவாசிகளின் வாழ்க்கை சீக் கிரமாக மாற்றமடைந்து சமூக நிலைப் பாட்டிலும் தமது பாரம்பரிய ஜீவனோ பாயத்திலும் மாற்றங்களுக்கு முகம் கொடுத்து தற்காலம் வரை வந்துள்ளது இதற்கு காரணமாக தம்பானை கிராமத்தில் ஆதிவாசி மரபு நிலையும் உரு வாக்கப்பட்டு செயற்பட்டுவருகின்றது. மேற்குறித்த செயற்பாடுகளை அவ தானித்த பின்னர் அவர்களுக்கு நன்றி கூறி எமது பயணம் மட்டக்களப்பிற்கு சென்று மட்/கோட்டை முனை மெதடிஸ் தேவாலயத்தில் இரவுத் தங்கலுடன் நிறைவுக்கு வருகின்றது.



மயிலம்பாவளி காமாட்சி ஆலயம்

**மாற்றம் காண மாணிக்க கங்கையின் நீராடலும் ஏற்றம் காண ஏழுமலையாளனின் தரிசிப்பும்**

இலங்கை மணித்திருநாட்டின் மத்திய மாகாணத்தில் நுவரேலியா மாநகரில் இருந்து பதுளை நோக்கி செல்லும் வீதியில் இவ் ஆலயம் அமைந்துள்ளது. இவ் ஆலயம் உலகில் ஒரே ஒரு இடமாகிய இலங்கை தீவில் மாத்திரமே காணப்படுகின்றது. இவ் ஆலய சூழல் அசோக வனம் என அழைக்கப்படுகின்றது. இவ்விடத்தில்தான் அரக்கிகள் புடைசூழ சீதை சிறைவைக்கப்பட்டிருந்தார். இரு மலைகளுக்கிடையில் சிறை வைக்கப்பட்டிருந்ததாகவும் கூறப்படுகின்றது. இராமாயணத்தில் கூறப்படுவது போல இராமனின் துணைவியாகிய சீதை இலங்காபுரி வேந்தனாகிய இராவணனால் புஸ்பக விமானம் மூலம் கடத்தி அசோகவனத்தில் ஒருவருடம் சிறைவைக் கப்பட்டிருந்தாள் என்பது இதிகாசமாகும். இவ்விடத்திலேயே இவ் ஆலயம் அமைந் துள்ளதால் சீத்தா எலிய என்ற பெயர் பெறுகின்றது. மேலும் இவ் ஆலயத்தின் அருகில் ஓடும் அருவி சீதை குளித்த சீதையாறு எனவும் பெயர்பெறுகின்றது.

5100 ஆண்டுகள் பழைமை வாய்ந்த இவ் விடம் 100km பரப்பளவைக் கொண்ட அசோகவனம் இவற்றை பார்வையிட இந்துக்கள் படையெடுப்பது வழமையானதொன்றாகும். அதிலும் குறிப்பாக இந்தியாவிலிருந்து வருகின்ற பக்தர்கள் கொழும்பை வந்தவுடன் நேரடியாக இவ் ஆலயத்திற்கு வருகை தந்து வணங்கி சுந்தரகாண்டம் படித்து செல்வது அன்றாட நிகழ்வாகின்றது. மேலும் இதன் சிறப்பு சீதையை மீட்க வந்த தரித்த ஆஞ்சநேயர் கால்பதித்த 7 பாத தடயங்கள் காணப்படுகின்றன. மேலும் இவ் ஆஞ்சநேய வழிபாட்டில் செந்தூரம் எனும் நாமம் பூசப்படுகின்றது சிறப்பம் சமாகும். இவ்நாமம் அருகில் நிற்கும் செந் தூர மரத்தின் பூவிலிருந்து பெறப்படு கின்றதாம். அந்தளவிற்கு சிறப்பு பெற்ற மேற்படி ஆலயம் இந்தியா, இலங்கை நாட்டு பக்தர்களின் முயற்சியில் 1998 ஆம் ஆண்டு பாலஸ்தானம் செய்யப் பட்டு 2000 ஆம் ஆண்டில் கும்பாபிஷேக பெருவிழா நடைபெற்று அன்றிலிருந்து மூலமூர்த்திகள் பளிங்கு கற்களினாலான சிலைகளாக வடநாட்டு பாணியில் காட்சி தருகின்றன. மேலும் சிறப்பான அம்சமாகக் கருதப்படும் இராமாயண வரலாற்றில் ஸ்ரீஇராமர் சீதையை தேடி வந்து இராவணனை அழித்து சீதையை மீட்டு அயோததிக்கு கொண்டு செல்ல இராமனுக்கு வலது கைபோல செயற் பட்டவர் ஸ்ரீஆஞ்சநேயர் ஆவார். இங்கு ஆஞ்சநேயருக்கு தனிக்கோயில் அமைக கப்பட்டது சிறப்பானதாகின்றது.

புத்த பெருமானின் போதனைகளின் இல்லிடம் இலங்கையின் அரசுரிமையை நிலைநாட்டும் பொருட்டு காலதிகாலமாக சிங்கள மன்னர்களால் பேணி பாதுகாத்து வந்த புத்தபெருமானது புனித பல் இங்கேயே பாதுகாக்கப் பட்டு வருகின்றது. பௌத்த மதத்தின் புனித பூமியாகவும் அரசுரிமையின் பதவியேற்பு மையமாகவும் விளங்கும் இவ்விடத்தினுள் பிரவேசிக்கும் போதே பக்தியுணர்வு மேலிடுகின்றது. கட்டட, ஓவிய, சிற்பக்கலைப் படைப்புக்கள் மேலும் மெருகூட்டுகின்றன. அன்பு, அறம், மனிதநேயம், காருண்யம், கொல் லாமை என்ற பஞ்சசீலக் கொளகைகளை புத்தபெருமான் வலியுறுத்தியிருந்தார். அவை தொடர்பான ஞானஉபதேசம் செய்யும் இடமாகவே பார்க்கப் படுகின்றது. அவ்விடங்களை பார்வை யிட்டு அவ் ஆல்யச்சூழலில் பிரத்தியேகமாக நிலை நிறுத்தப்பட்டிருந்த இறந்த யானை ஒன்றின் விடயங்களையும் பார்வையிட்டு அவ் ஆலய சூழலில் காணப் படும் தமிழர் தம் வழிபாட்டு தெய்வமாகிய பத்திரகாளி அம்மன் வழிபாட்டு இடத்தினையும் பார்வையிட்டு, அன்றைய பயண நிகழ்வு நிறைவுக்கு வர கண்டியில் அமைந்துள்ள சாரணர் பயிற்சி நிலையத்தை நோக்கி இரவுத்தங்கலுக் காக செல்கின்றோம்.



கண்டி பேராதனைப்பூங்கா

மாத்தளை முத்துமாரி அம்மன் ஆலயத்தை வந்தடைகின்றோம்.

**பஞ்சரதம் பவனி வரும் மாநகரம்**

ஆலய திருப்பணிகள் நடைபெறுவதால் மூலமூர்த்தி பாலஸ்தானம் செய்து வைக்கப்பட்டிருந்தது. எனினும் ஐந்து தேர்கள் மாத்தளை நகரினூடாக நடைபெறும் சிறப்பு மிக்க ஆலயத்தை பார்வையிட்ட மகிழ்வுடன் அர்ச்சனையும் வழிபாடுகளையும் நிறைவு செய்து மாத்தளையிலிருந்து 7Km தூரத்தில் உள்ள உக்குவெல மின்சார உற்பத்தி நிலையத்தை ஏற்கனவே பெறப்பட்ட அனுமதியின் பிரகாரம் பார்வையிட நுழைகின்றோம். மிகவும் ஆபத்தான பிரதேசம் என்பதற்கான குறியீடுகள் விளக்கமாக வெளிப்படுத்தப்பட்டிருந் தது. எனினும் மிகவும் முக்கியமான அறிவுத் தேடலுக்கும் நீர் மின்சார உற் பத்தியை நேரில் கண்டறிவதற்குமான வலுச்சேர்ககக் கூடிய இடமாக உள்ளே சென்று வந்த பின்னரே உணர்ந்து கொண்டோம். எம்மினத்தை சார்ந்த ஒருவர் இரு அணிகளாக மாணவர் களை பிரித்து விரிவான நீண்ட விளக் கத்தை செய்முறையுடன் காண்பித்தார்.

16.06.2013 முன்னிரவு 11 மணிக்கு பாடசாலையைவந்தடைந்தது.

(முற்றும்...)

# அரசினால் வழங்கப்படும் உதவிகள் சீராக மக்களை சென்றடையவேண்டும்

## சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர்



(சாவகச்சேரி)

அரசினால் வழங்கப்படும் உதவிகள் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள மக்களை முற்று முழுதாக சென்றடைவது இல்லை. இதனை நிவர்த்திக்க அரச அதிகாரிகள் மக்களுக்கு வழிவகைகளை விளக்க வேண்டும்.

சில அதிகாரிகள் தமது கடமைகளை மனப்பூர்வத்துடன் மக்களுக்கு ஆற்றுவதில்லை. அவர்களது மனப்பாங்கு மாறவேண்டும் என சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் கு.சர்வானந்தன் தெரிவித்தார்.

கெற்பேலி கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் அரசினால் வழங்கப்படும். 5000 ரூபா நிதியினை பெறத்தெரிவுசெய்யப்பட்டஅப்பகுதி குடும்பத்தலைவர்களுடனான கலத்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் கிராமந்தோறும் இப்படியான கலந்துரையாடல் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளதாகத்தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்:


போரினால் பாதிக்கப்பட்டு வறுமையில் வாடும் குடும்பங்களிற்கு வேண்டிய உதவிகளை அரசிடமிருந்து பெற்று வழங்கும் தனது நடவடிக்கை மூலம் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள 50 குடும்பங்களிற்கு இவ் உதவி செய்யப்படவுள்ளது. அத்துடன் தகுதி இருந்தும் வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்ளாது இருக்கும் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள குடும்ப இளைஞர் யுவதிகளுக்கான வேலைவாய்ப்புக்களும் ஏற்படுத்திக்கொடுக்கப்படும் என்றார். (11)

# தமிழ்த்தின தேசிய மட்டப்போட்டி வெற்றியாளர்கள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

2013 ஆம் ஆண்டுக்கான, தேசிய அளவிலான தமிழ் மொழித்தின போட்டிகள் கொழும்பு றோயல் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது. வட மாகாணம் சார்பாக 40 தனி நிகழ்வுகளும் மற்றும் 10 குழு நிகழ்வுகளும் அடங்கலாக 50 பிரிவுகளில் போட்டியிட்டு 24 முதல் இடங்களையும் எட்டு இரண்டாம் இடங்களையும் நான்கு மூன்றாம் இடங்களையும் வடமாகாணம் பெற்றதோடு முதல் இடங்களில் ஒன்பதினை குழு நிகழ்வில் வடமாகாணம் பெற்றுள்ளது.

இந்நிகழ்வில் பங்குகொண்டவர்களுக்கான கௌரவிப்புநிகழ்வு வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சகல வெற்றியாளர் களையும் பாராட்டி ஊக்கமும் அளித்தார். இதில் ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த மாணவர்கள் கலந்து கொண்டனர்.



இந்நிகழ்வில் ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், மாகாணக்கல்விப்பணிப்பாளர் வி.செல்வராஜா, வலயக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

வெள்ளி நற்சிந்தனை...



# தானம் செய்யும் வழி

தர்மபுத்திரன் இராஜசூய யாகம் செய்தார். கிருஷ்ணனின் மேற்பார்வையில் மிகவும் கோலாகலமாக நடந்தது. கிருஷ்ணன் எல்லோருக்கும் ஆளுக்கு ஒரு வேலை கொடுத்தான். அதன்படி பீமனுக்கு உணவு கூடத்தில் அடியார்களை உபசரிக்க வேண்டியவேலை.

பீமன் அடியார்களுக்கு தானே முன் நின்று பரிமாறினான். உணவு வகைகளை அவர்களுக்கு அள்ளி அள்ளிப்போட்டான். அதனால் முதலில் ருசித்துச் சாப்பிட்டவர்கள் பின்பு சாப்பிடத் திண்டாடினார்கள். ஆனால் பீமனோ உணவு வகைகளை அள்ளிக்கொட்டி, சாப்பிடும்படி அவர்களை வற்புறுத்தினான். உட்கொள்ளமுடியாமல் திண்டாடியவர்களை பலவாறாகத் திட்டினான்: கதையைக் காட்டிப் பயமுறுத்தவும் செய்தான். அதனால் அடியார்கள் சாப்பிட வருவதை நிறுத்தினார்கள்.

ஒருநாள் கண்ணன் பீமனிடம் அடியார்கள் பற்றி விசாரித்தான். கிருஷ்ணா! என்ன காரணமோ தெரியவில்லை. இப்பொழுது இருபது முப்பது பேர்களே சாப்பிட வருகிறார்கள் என்றான் பீமன் "பீமா நான் சாப்பிட்டுச்சாலையைக் கவனித்துக் கொள்கிறேன். நீ கந்தமாதன மலைக்குச் சென்று, கந்தமாதன முனிவரைக்கண்டு வணங்கி விட்டு வா" என்று கண்ணன் கூறினார்.

கண்ணன் அடியவர்களை விசாரித்து நடந்ததை அறிந்து கொண்டான். கிருஷ்ணன் அவர்களைச் சமாதானப்படுத்தி சாப்பிட வைத்தான்.

பீமன் கந்தமாதன மலையை அடைந்தான். அங்கே பொன்மேனியோடு விளங்கிய சந்தமாதன முனிவர் ஜெபம் செய்து கொண்டிருந்தார். பீமன அவரை வணங்கினான். "பீமா! இப்படிச் சற்று அருகில் வா" என்றார் முனிவர், ஆனால் அவர் வாயிலிருந்து வந்த ஒரு துர்வாடை பீமனை நெருக்க விடாமல் தடுத்தது. அதனைக் கண்டு முனிவர், பீமா! உன்தயக்கத்திற்கு காரணம் புரிகிறது. முற்பிறவியில் நான் அளவில்லாத தான தர்மங்களைச்செயதேன். அதன்பயனாகத் தான் எனக்கு இந்த ஜன்மத்தில் இந்த அழகான பொன்னிறமேனி அமைநதுள்ளது. ஆனால் வந்த யாசகர்களை கடுமையாகத்திட்டியும் தூசித்தும் தானம் செய்ததனால் என் வாயில் துர்நாற்றம் வீசுகிறது என்று சொன்னார். பீமனுக்கு வயிற்றில் புளியைக் கரைத்தது. எனக்கு என்ன தண்டனை கிடைக்குமோ! என்று கலங்கினான். பீமன் ஊர் திரும்பிக் கண்ணன் காலில் விழுந்தான் "எனக்கு புத்தி வந்தது. என்னை மன்னித்து விடு" என்று கதறினான்.

"அன்னதானமோ, வேறு எந்தத் தானமோ செய்வது பெரிதல்ல இனிமையாகப்பேசி, தானம் கொடுக்க வேண்டும்." புகழ் பெற வேண்டும் என்பதற்காக தர்மம் செய்யாதீர்கள்.

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

# பதிவிறக்கப் பெட்டகம்

பாவம் அந்த காலத்தில் ஜெய்சங்கர் வத வத என்று நடித்து எதுவும் சாதிக்கவில்லை. சினிமாப் படம் போர் அடிக்கும் என்பதே ஜனங்களுக்கு ஜெய்சங்கர் படம் பார்த்துத் தான் தெரிய வந்தது. அது மாதிரி தான் சிவகுமாரும். ரொம்ப தாமதமாக கதாநாயகன் ஆனவர். ஆனபின்பு சுதாரிக்கவே இல்லை. Monotonous acting! படங்களும் தரமில்லாதவை. ஒரு இரு நூறு படம் நடித்திருப்பார். டான்ஸ் செயற்கையாக ஆடுவார். நடிப்பு நாடகப்பாணி. அவர் ராகம் போட்டு இழுத்து உருக்கமாக பேசுவதை இப்போது பலரும் மிமிக்ரி செய்து காட்டுகிறார்கள். ஸ்டீரியோ டைப். கமல், ரஜினி எழுபதுகளில் சிவகுமாரை ரொம்ப சுலபமாக ஓவர் டேக் செய்து விட்டார்கள்.

புவனா ஒரு கேள்விகுறி படத்தில் நல்லவனாக நடிக்காமல் வில்லன் ரோல் செய்தார். ரஜனிக்கு அந்தப்படத்தில் நல்ல க்ளாப்ஸ்! உடனே இவர் வருத்தப்பட்டு 'வில்லன் ரோல் செய்தது தப்பு. இனிமேல் கவனமாய் இருப்பேன்' என பேட்டி கொடுத்தது நல்ல ஜோக். ரஜனி எந்த ரோல் செய்தாலும் சிவகுமார் அவர் பக்கத்தில் நிற்கவே முடியாது என்பதை அடுத்த சில வருடங்களில் புரிந்து கொண்டிருப்பார்.

சிவகுமார் மீது ஒரு விசயத்தில் எனக்கு மரியாதை. வாசிப்பவர். நல்ல வாசகர் போல தெரிகிறது. தி.ஜானகிராமன், கிரா என்று துவங்கி இன்றைய சாரு நிவேதிதா எழுத்து வரை வாசிக்கிறார். அதற்காக அவரைப் பாராட்டலாம். நடிப்புக்காக... சான்சே இல்லை!

ஒரு Irony! சிவாஜி கணேசன் மகன் பிரபு பெரிய சாதனை செய்ய முடியவில்லை. முத்துராமன் மகன் கார்த்திக் மிகச் சிறந்த நடிகர். ஆனால் தன் பழக்கவழக்கங்களால் வீணாக கெடுத்துக்கொண்டார். ஆனால் சாதாரண நடிகர் சிவகுமார் மகன்கள் சூரியா, கார்த்தி நட்சத்திர அந்தஸ்து பெற்று விட்டார்கள்.

**–R.P.ராஜநாயஹம்**

தமிழ்த் திரைப்பட ரசிகர்களின் ரசனையை நினைத்தால் பரிதாபமாக இருக்கிறது. ஜாக்கி சானுக்கு உறவோ என்று நினைக்க வைக்கிற குஷ்புவில் இருந்து இடுப்பு மாத்திரமே அழகாக இருக்கும் சிம்ரன், சின்னக்குழந்தைகள் பயந்து அலறியழுகிறாற் போல் மணிபர்ஸ் வாயால் சிரிக்கும் சினேகா, மண்டையோட்டிற்கு ஒப்பனை செய்த மாதிரியான அசின், சரத்குமாரை விட அகலமாகத் தோன்றும் நமீதா வரை திரைப் படங்களைப் போலவே நாயகிகளின் தேர்வு ரசனையும் மட்டமானதாகவே இருக்கிறது.

**– சுரேஷ் கண்ணன்**

அப்போது எனக்கு எட்டு வயதிருக்கும். அப்பாவுக்கும் அப்பாவின் மச்சான் முறையான ஜெயக்கொடிக்கும் சண்டை. அவர்கள் பொதுவாக வருடத்திற்கு ஒருதடவை ஆளுக்கு ஆள் வாளால் வெட்டிக்கொள்வார்கள். அன்றைய இரவு எங்களது வீட்டுக்கு முன்னால் தெருவில் வாளோடு ஜெயக்கொடி நிற்கிறார். அவரோடு இன்னும் சிலரும் நிற்கிறார்கள். அப்பா ஒரு வாளோடு எங்கள் வளவுக்குள் நின்றிருந்த பனைமரத்தில் 'கவர்' எடுத்து நிற்கிறார். ஜெயக்கொடி தெருவிலிருந்து 'அச்சம் என்பது மடமையடா' எனப் பாடினார். அப்பா பதிலுக்கு 'தம்பி நான் படிச்சேன் காஞ்சியிலே நேற்று அதை நானுனக்கு சொல்லட்டுமா இன்று' எனப் பாடினார். பதிலுக்கு ஜெயக்கொடி 'நேருக்கு நேராய் வரட்டும் நெஞ்சில் துணிவிருந்தால்' என்று பாட அப்பா பதிலுக்கு 'நான் செத்துப் பிழைச்சவன்டா எமனைப் பார்த்து சிரிச்சவன்டா' எனப் பாடினார். இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த பக்கத்து வீட்டு ஞானம் அண்ணர் 'கத்தியை தீட்டாதே உந்தன் புத்தியைத் தீட்டு கண்ணியம் தவறாதே உன் திறமையைக் காட்டு' எனப் பாட ஆரம்பித்துவிட்டார். அன்று கடைசி வரை சண்டையே நடக்கவில்லை. இவ்வாறாக எங்கள் வாழ்க்கையின் எல்லாத் தருணங்களிலும் TMS எங்களுடனிருந்தார்.

**– ஷோபா சக்தி**

பல கோடிகள் சம்பாதித்துக் கொண்டிருக்கும் சிறீசாந்தைச் சூது கவ்வியதைப் பற்றிய நியாயங்கள் ஏதும் புரிகிறதா? பல கோடிகள் சம்பளம் வாங்கும் ரன்பீர்கபீர் விமான நிலையத்தில் வரி கட்டாமல் திருட்டுத்தனமாய் செல்ல முயன்றபோது பிடிபட்டார். அவர் கட்ட வேண்டியிருந்த தொகை வெறும் அறுபதாயிரம். எப்படிப்பட்ட ஹீரோக்களோடு வாழ்கிறோம் நாம்?

**– இரா.பிரபாகர்**

# தேர்தல் நடைபெறும் மாகாணங்களில் 165 விசேட பொலிஸ் பிரிவுகள்

தேர்தல்கள் நடைபெறவுள்ள வடக்கு, மத்திய மற்றும் வடமேல ஆகிய மூன்று மாகாணங்களிலும் சுமார் 165 விசேட பொலிஸ் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேற்படி மூன்று மாகாணங்களிலும் தேர்தல் காலத்தில் இடம்பெறும் தேர்தல் வன்முறைச் சம்பவங்களை தவிர்க்கும் வகையிலேயே விசேட பொலிஸ் பிரிவுகள் நிறுவப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் புத்திக சிறிவர்தன தெரிவித்தார்.

இதற்கமைய மூன்று மாகாணங்களிலும் உள்ள சகல பொலிஸ் நிலையங்களிலும், பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் பிரதிப்பொலிஸ் மா அதிபர்கள் பிரிவுகளிலுமே இந்த பொலிஸ் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தேர்தலை முன்னிட்டு இடம பெறும் வன்முறைகளை தவிர்த்தல் மற்றும் அது தொடர்பில் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் தொடர்பில் உடனடியாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையிலேயே இந்த விசேட பொலிஸ் பிரிவுகளை நிறுவ தேர்தல்கள் செயலகம் தீர்மானித்துள்ளது.

இதன்படி வடகிழக்கிலுள்ள 40 பொலிஸ் நிலையங்களிலும் 07 பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுகளிலும் பிரதிப்பொலிஸ் மா அதிபர்கள் காரியாலயங்கள் மூன்றிலும் மத்திய மாகாணத்திலுள்ள 58 பொலிஸ் நிலையங்களிலும், 05 பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுகளிலும் பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் அலுவலகங்கள் இரண்டிலும், வட மேல் மாகாணத்திலுள்ள பொலிஸ் நிலையங்கள் 43 இலும், பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுகள் ஐந்திலும் பிரதிப்பொலிஸ் மா அதிபர் அலுவலகங்கள் இரண்டு என்ற அடிப்படையிலேயே 165 பொலிஸ் தேர்தல் கண்காணிப்பு பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. இதேவேளை தேர்தல் வன்முறைகள் தொடர்பாக கண்காணிக்கும் பொலிஸ் தேர்தல் பிரதான செயலகம் பொலிஸ தலைமையகத்தில் நிறுவப்பட்டுள்ளது.

தேர்தல்கள் நடைபெறும் மூன்று மாகாணங்களிலுள்ள சகல பொலிஸ் பிரிவுகள் மற்றும் தேர்தல் தொடர்புபட்ட அலுவலகங்களின் செயற்பாடுகள் மற்றும் இணைப்பு நடவடிக்கைகள் பொலிஸ் தலைமையகத்தில் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ தேர்தல் பிரதான செயலகத்திலிருந்து மேற்கொள்ளப்படும்.

பொலிஸ் தலைமையகத்திலுள்ள பிரதான செயலகம் பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்கக்கோனின் நேரடி கண்காணிப்பில் செயற்பட்டு வருவதாகப் பொலிஸ் தேர்தல் நடவடிக்கைகளுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப்பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ண தெரிவித்தார்.

இதற்கு மேலதிகமாக தேர்தல்கள் செயலகம், மாவட்ட செயலகங்களில் விசேட பொலிஸ பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளதுடன் தேவையான பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ராஜகிரியவிலுள்ள தேர்தல்கள் செயலகத்தில் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் தேர்தல் பிரிவுக்குப் பொறுப்பாக பொலிஸ் அததியட்சகர் ஒருவரும், மாவட்ட செயலகங்களில் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் பிரிவுகளுக்கு பிரதான பொலிஸ் பரிசோதகர் தரத்திலுள்ள அதிகாரிகளும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தேவையை கருத்திற் கொண்டு மேலதிக பொலிஸார் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்படுவர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சுட்டிக்காட்டினார்.

# ஜி.எஸ்.பி.வரிச்சலுகை எமக்கு அவசியமில்லை

## என்கிறார் ஜெயசுந்தர


(கொழும்பு)

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையினை மீண்டும் பெற்றுக் கொள்வதற்கு இலங்கை எதிர் பார்த்து இருக்கவில்லை என நிதி அமைச்சின் செயலாளர் பி.வி. ஜெயசுந்தர தெரிவித்துள்ளார்.

மானியங்கள் அல்லது உதவிகள் மூலம் சந்தைகளை வளர்த்துக்கொள்ள வேண்டிய தேவை இலங்கைத் தீவுக்கு இல்லை. இவ்வாறு உதவிகளைப்பெற்று வந்தால் அது தேசத்தின் இயலாமையினையே மேம்படுத்தும் என நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற ஏற்றுமதியாளர் குழுக்கூட்டத்தில் பி.வி.ஜெயசுந்தர தெரிவித்துள்ளார்.

இலங்கையின் ஏற்றுமதியாளர்கள் இலாபம் அளிக்கின்ற சந்தைகளில் எப்போதும் தங்கி இருக்காது, வேறு புதிய சந்தைகளை நோக்கியும் கவனம் செலுத்த வேண்டும். உதாரணமாக பல ஆபிரிக்க நாடுகளிற்கான உணவு ஏற்றுமதிக்கு வாய்ப்பு உள்ளது. இந்தியா மற்றும் பாகிஸ்தானுடனான பொருளாதார உறவுகளை இலங்கை மேலும் வலுப்படுத்தி வருகின்றது. இதன் மூலம் கரை கடந்த சந்தை வாய்ப்பினை பெற முடியும் என பி.வி.ஜெயசுந்தர இங்கு சுட்டிக்காட்டினார்

# வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு புதிதாக 6 ரயில் சேவைகள்



(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பகுதியில் அடுத்த வருடம் முதல் புதிதாக 6 ரயில் சேவைகள் நடத்தப்படவுள்ளன. இதற்காகப் புதிய ரயில்பெட்டிகள் இறக்குமதி செய்யப்படவுள்ளன. அவற்றை கொள்வனவு செய்வதற்காக 400 மில்லியன் ரூபா நிதி செலவிடப் படவுள்ளதாக புகையிரத திணைக்களம் தெரிவித்துள்ளது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடபகுதி ரயில்பாதைகளும் ரயில் நிலையங்களும், இந்தியாவின் உதவியுடன் மீளமைக்கப்படுகின்றன. தற்போது கொழும்பிலிருந்து ஓமந்தை வரை ரயில் சேவை இடம்பெறுகிறது. அதை காங்கேசன்துறை வரை நீடிக்க துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மதவாச்சியிலிருந்து மடு வரையான ரயில்பாதையும் மீள நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அது தலைமன்னார் வரை நீடிக்கப்படுமென புகையிரத திணைக்களம் தெரிவித்துள்ளது. புதிய ரயில்பாதை நிர்மாணப்பணிகள் பூர்த்தியடைந்ததும், வடக்கு கிழக்கு பகுதிகளில் புதிதாக 6 சேவைகள் ஆரம்பிக்கப்படும். அடுத்த வருடம் ஏப்ரல் அல்லது மே மாதமளவில் புதிய ரயில்சேவைகளை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக புகையிரத திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

# பொருத்தமற்ற பரீட்சை அமைப்பினால் தலைகள் சீவப்படும் ரிஸானாக்கள்



(கொழும்பு)

மத்திய கிழக்கில் கொலை செய்யப்பட்ட ரிஸானா பற்றி எல்லோரும் பேசினாலும், ஒரு வருடத்திற்கு இலங்கையில் பிறக்கின்ற இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான ரிஸானாக்கள் பொருத்தமற்ற பரீட்சை அமைப்பு முறையினால் தலை சீவப்படுகின்றனர். என்றாலும் அதுபற்றி யாரும் பேசுவதற்குத்தயாராக இல்லை. என கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன குறிப்பிட்டார்.

மொரட்டுவை ஜேர்மன் தொழில்நுட்பபயிற்சி நிறுவனத்தில், ஜேர்மன் டெக் பல்கலைக்கழக கல்விப்பீடத்திற்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்வரும் பத்து வருடங்களில் இருபது இலட்சத்திற்கும் மேற்பட்ட தொகை மாணவர்கள் நட்டாற்றில் விடப்படுவதுடன், இதற்கு மாற்றுப் பரிகாரமாகவே தொழில்நுட்ப பாடம் அறிமுகப்படுத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

அவுஸ்ரேலியாவினுள் உயர்வாக மதிக்கப்படுகின்ற ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தின் பாடநெறிகள் முழு உலக நாடுகளிலும் ஏற்றுக்கொள்ளப்படும் வகையில் செய்வதற்கே பல்கலைக்கழக கல்விப்பீடம் ஆரம்பிப்பதற்காகன திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் அந்நிகழ்வில் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# ஏற்றுமதி மேம்படுத்தல் திட்டம்


## வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

ஏற்றுமதி மேம்படுத்தல் வேலைத்திட்டங்களை மாகாண மட்டத்தில் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டளவில் நாட்டில ஏற்றுமதி வருமானத்தை அதிகரிப்பதே இதன் நோக்கமாகும்.

இதற்கமைய புதிய உபாய மார்க்கங்கள் செயற்படுத்தப்படுமென ஏற்றுமதி அபிவிருத்திச் சபை குறிப்பிட்டுள்ளது. புதிய சந்தை வாய்ப்புக்களை இனங்காணல், தற்போதையு சந்தையை பாதுகாத்தல், தரத்துடன் கூடிய பொருள் ஏற்றுமதி, இருதரப்பு மறறும் பல்தரப்பு ஒப்பந்தத்தினூடாக ஏற்றுமதி அதிகரிப்பு போன்ற விடயங்க்ள் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. தும்பு சார்ந்த உற்பத்திப் பொருட்கள், மாணிக்கம் மற்றும் ஆபரணங்கள், போன்ற ஏற்றுமதி துறைகளில் இலங்கை முன்னணியில் உள்ளது. கடந்த வருடத்தில் மாத்திரம் 5 பில்லியன் அமெரிக்கடொலர் ஏற்றுமதி வருமானமாக பெறப்பட்டுள்ளது. இவ்வருடம் ஏற்றுமதி வருமானம் கடந்த வருடத்தை விட இருமடங்காக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இதேவேளை 2015 ஆம் ஆண்டளவில் ஏற்றுமதி வருமானத்தை 15 மில்லியன் அமெரிக்கடொலர்களாக அதிகரிப்பதே தமது நோக்கமென ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.

# இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகள் இன்று முதல் வைத்தியசாலைகளுக்கு



(கொழும்பு)

நாட்டிலுள்ள வைத்தியசாலைகள் மற்றும் மருந்தகங்களில் தட்டுப்பாடு நிலவிய, சத்திரசிகிச்சைகளுக்குப் பயன்படுத்தப்படும் ஹெச் புபிவேகெய்ன் மருந்து வகையை இறக்குமதி செய்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அவசர தேவைக்கான ஒரு தொகை மருந்து இந்தியாவிலிருந்து விமானம் மூலம் நேற்று முன்திம் கொண்டுவரப்பட்டதாக அமைச்சின் மருந்து விநியோகப் பிரி வின் பணிப்பாளர் டொக்டர் கமல் ஜயசிங்க கூறினார்.

அதன் பிரகாரம், இறக்குமதி செய்யப்பட்டுள்ள இந்த மருந்து இன்று முதல் வைத்தியசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளது. இந்த மருந்து வகையின் மற்றுமொரு தொகை அடுத்த வாரமளவில் நாட்டிற்கு கொண்டு வரப்படவுள்ளதாக மருந்து விநியோகப்பிரிவு தெரிவித்துள்ளது.


# நிறைவேற்று அதிகாரம் நீடிப்பது மக்களின் தேவைகளுக்காக அல்ல

## என்கிறார் கருஜெயசூரிய

(கொழும்பு)

தனிப்பட்ட காரணங்களுக்காகவே நிறைவேற்று அதிகாரம் பயன்படுத்தப்படுவதாக ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கருஜயசூரிய தெரிவித்துள்ளார். மக்களின் தேவைகளுக்காக நிறைவேற்று அதிகாரம் நீடிக்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உலகின் ஏனைய நாடுகள் அதிகாரத்தை பகிர்ந்தளிக்க முயற்சிக்கும் தருணத்தில் அரசாங்கம் அதிகாரத்தை வலுப்படுத்திக் கொள்ள தீவிரம் காட்டி வருவதாகக்குற்றம் சுமத்தியுள்ளார். 13 ஆம் திருத்தச்சட்டம் தொடர்பிலான விடயங்களை கருத்திற் கொள்ளாதே இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிவித்துள்ளார். அரசாங்கம் நேர்மையாக நடந்து கொள்கின்றது எனக் கருத முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



❖ 29 தொடக்கம் 31 வரையிலான வினாக்களுக்கு முதலில் தரப்பட்ட சொல்லுடன் பொருத்தமற்ற சொல்லை தெரிந்து கோடிடுக.

29. வயல்  1. விவசாயி  2. காற்று  3. கலப்பை

30. புத்தகம்  1. உரையாடல்  2. அறிவு  3. வாசித்தல்

31. மான்  1. கலை  2. பிணை  3. பிடி

32. 

பிராணிகள் - பறவை - கிளி என்பவற்றுக்கிடையிலான தொடர்பினை உருகாட்டுகிறது. இதில் C இனால் காட்டப்படுவது.
1. கிளி  2. பிராணிகள்  3. பறவை


33. வடக்கு திசைக்கும் கிழக்குத்திசைக்கும் இடைப்பட்ட திசை எது?
1. ஈசானமூலை  2. வாயுமூலை  3. அக்கினிமூலை

34. வானில் ஏழு நிறங்கள்
வடிவாய் தெரியுது பாரம்மா
இயற்கை ஓவியன் வானத்தில்
எழுதிய சித்திரம் இதுதானே

இப்பாடல் எதைப்பற்றி கூறுகிறது.
1. ஓவியம் பற்றி
2. வானவில் பற்றி
3. வானவெளி பற்றி


35. தொலைபேசி வசதி ஒன்றை பெற்றுக்கொள்ள நாம் செல்ல வேண்டிய சேவை நிலையம் எது?
1. ஸ்ரீலங்கா ரெலிக்கொம்  2. ஸ்ரீலங்கா எயார்லைன்ஸ்  3. இலங்கை மின்சாரசபை

❖ 36 தொடக்கம் 40 வரையிலான வினாக்களுக்குரிய விடையை புள்ளிக்கோட்டில் எழுதுக.

36. 

இங்கு அதிக தடவை எழுதப்பட்டுள்ள ஆங்கில எழுத்து எது? ..............................

37. 29 என்பதை உரோமன் எண்குறியில் எழுதுக? ..............................




38. -?- இக்குறியீடு இடப்பட்ட இடத்துக்கு வரவேண்டிய இலக்கம் யாது? ..............................

39. இவர் இந்தியாவில் உள்ள எட்டயபுரத்தில் பிறந்தார். சிறந்த கவிஞர். குழந்தைகளுக்கான பாப்பா பாடல்களை பாடினார். இலகுவான மொழியில் பல பாடல்களை பாடினார். இவர் யார்?
..............................

40. SHIP என்னும் சொல்லின் எழுத்துக்களை ஆங்கில நெடுங்கணக்கு எழுத்துக்கள் அமையும் ஒழுங்கில் எழுதுக?




# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013


# கல்வி முரசு

1.30 மணி



❖ முதலில் தரப்பட்டுள்ள உருவிற்கு ஒத்த உருவை தெரிந்து கோடிடுக.

01. 
(1) (2) (3)

02. 
(1) (2) (3)


❖ பின்வரும் வினாக்களில் உள்ள வெற்றிடங்களுக்கு பொருத்தமான சொல்லை தரப்பட்ட விடைகளில் இருந்து தெரிவு செய்து எழுதுக.

03. பறவை - பறத்தல் எனின் மீன் - ..............................
1. ஓடுதல்  2. மிதத்தல்  3. நீந்துதல்





04. வைக்கோல் - கடதாசி எனின் கரும்பு - ..............................
1. சீனி  2. தேன்  3. வினாக்கிரி

❖ முதலில் தரப்பட்ட உருவுடன் தொடர்புடைய சொல்லை தெரிந்து கோடிடுக.

05. 
1. சுவை  2. நிறம்  3. உயரம்

06. 
1. வாசித்தல்  2. ஊதுதல்  3. அடித்தல்


❖ கீழ்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ் கோடிடுக.

07. 
அருகில் தரப்பட்ட உருவிற்கு சம பின்னமாக நிழற்றப்பட்ட உருவை தெரிவு செய்க.
1. 
2. 
3. 

08. ரூபா 100 காசுத்தாளில் உள்ள பறவை எது?
1. மயில்  2. மீன்கொத்தி  3. கிளி

09. மீனவனுக்கு கடல் போன்று விளையாடுபவனுக்கு ..........................
1. பந்து 2. மைதானம் 3. துடுப்பு

10. குதிரை கனைக்கும் போன்று யானை ..........................
1. பிளிறும் 2. உறுமும் 3. கர்ச்சிக்கும்

11. 
இவ்வுபகரணம் எத்தொழிலுடன் தொடர்புடையது.
1. தச்சுவேலை 2. மேசன்வேலை 3. கொல்லன்வேலை

A×A=1 | B×B=4 | C×C= ...... | D×D=16

12. மேலேயுள்ள எண்கோலத்தில் இடைவெளிக்கு வரவேண்டிய இலக்கம் யாது?
1. 7 2. 12 3. 9

❖ **கீழேயுள்ள கணித செய்கைகளில் புள்ளிக்கோடிட்ட இடங்களில் வரவேண்டிய விடையை தெரிந்து கோடிடுக.**

13.
```
  6 3 2
+ 2 _ 5
  8 9 7
```
1. 6 2. 2 3. 4

14.
```
  3 2 8
+ 2 _ 4
  5 7 2
```
1. 3 2. 5 3. 4

❖ **கீழேயுள்ள சொற்களின் நிரலை அவதானித்து வினாக்களுக்குரிய விடையை தெரிந்து கோடிடுக.**


15. அகம், சுகம், முகம்
இந்த சொற்களின் நிரையில் சேர்க்கக்கூடிய சொல்
1. நிறம் 2. நகம் 3. விசம்

16. பருப்பு, விருப்பு, செருப்பு
இந்த சொற்களின் நிரையில் சேர்க்கமுடியாத சொல் எது?
1. நெருப்பு 2. இருப்பு 3. குறிப்பு

❖ **முதலில் தரப்பட்ட உருவினை கண்ணாடிமுன் பார்க்கும் போது தோன்றும் வடிவினை தெரிவு செய்க.**

17. 

(1)

(2)

(3)

18. 

(1)


(2)

(3)



19. இலங்கையில் உள்ள மாவட்டங்களை குறிக்கும் விடையை தெரிவு செய்க.
1. மாத்தளை, அம்பாறை, பதுளை
2. நீர்கொழும்பு, காலி, சிலாபம்
3. கம்பளை, மன்னார், தம்புள்ளை

20. காலம் பற்றிய சரியான ஒழுங்கு வரிசையை காட்டும் விடையை தெரிவு செய்க.
1. பகல், இரவு, மாலை, காலை
2. இரவு, பகல், காலை, மாலை
3. காலை, பகல், மாலை, இரவு

21. 

கடிகாரம் காட்டும் நேரமானது.
1. செங்கோணத்திலும் சிறிது
2. செங்கோணம்
3. செங்கோணத்திலும் பெரிது

22. கடை ஒன்றில் 387 முட்டைகளும் இன்னொரு கடையில் 429 முட்டைகளும் விற்கப்பட்டன. இரு கடைகளிலும் விற்கப்பட்ட மொத்த முட்டைகள் எத்தனை?
1. 825 2. 816 3. 717


23. 
இவ்வுருவில் உள்ள முக்கோணங்களின் அதிகூடிய எண்ணிக்கை யாது?
1. 6 2. 8 3. 11




**24.** மூவாயிரத்து முப்பத்துமூன்று என்பதை இலக்கத்தில் எழுதினால்.
1. 3033 2. 3303 3. 3330

**□+□+□ = 15    □+○+○ = 07    ○+△+△ = 07**

25. △ இவ்வுருவின் பெறுமானம் யாது?
1. 5 2. 3 3. 1

26. **□+△+○ = ?** **?** இக்குறியீடு இடப்பட்ட இடத்துக்கு வரவேண்டிய இலக்கம் யாது?
1. 9 2. 10 3. 8

27. பறக்கும் முலையூட்டியை குறிக்கும் உருவை தெரிவு செய்க.
1. 
2. 
3. 

28. தரப்பட்ட இசைக்கருவிகளில் காற்றுக்கருவியை தெரிவு செய்க.
1. 
2. 
3. 

# மீள்குடியமர்ந்த மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளுக்கு புதிய திட்டம்

வடக்கு, கிழக்கில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்களுக்குத் தேவையான குடிநீர் மற்றும் கழிவறை வசதிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. இதற்காக ஒரு கோடியே 16 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். இதற்கான முதற்கட்ட நடவடிக்கைகள் மட்டக்களப்பு, கிரான் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையால் இடம்பெயர்ந்தவர்களுக்கு குடிநீர் மற்றும் கழிவறை வசதிகள் தொடர்பான பிரச்சினைகள் காணப்படுகின்றமை கண்டறியப்பட்டுள்ளதாக மீள்குடியேற்ற அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

அதன் பிரகாரம் மீள்குடியேற்றப்பட்ட மக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கான புதிய திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. வட மாகாணத்தில் வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலும் கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை, அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் இந்தத்திட்டம் நடைமுறைபபடுத்தப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் 1,395 குடும்பங்களுக்கு கழிவறை வசதிகளும் 1,640 குடும்பங்களுக்கு குடிநீர் வசதிகளும் வழங்கப்படவுள்ளன.

# கஞ்சா வைத்திருந்த இருவருக்கு விளக்கமறியல்

(மன்னார்)

கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்ட இருவரை எதிர்வரும் 30 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் உத்தரவிட்டுள்ளார்.

இவர்கள் இருவரையும் மன்னார் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் ஆஜர்ப்படுத்திய போதே அவர் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

தலைமன்னார் பகுதியில் கடந்த 13 ஆம் திகதி 2 கிலோவுக்கும் அதிகமான கஞ்சா வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் இவர்கள் இருவரையும் விசேட அதிரடிப் படையினர் கைதுசெய்து தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தனர்.

# நாவாந்துறை வாள்வெட்டு சம்பவம்; பிரதான சந்தேகநபர் கைது

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறைப் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் ஒருவரைக் கைதுசெய்துள்ளதாக யாழ். சிறு குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி ஏ.டபிள்யு.எல்.விக்ரமராச்சி தெரிவித்தார்.

யாழ். நாவாந்துறை பொம்மை வெளிப்பகுதியில் கடந்த ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதி புதன் கிழமை இடம்பெற்ற சம்பவம் தொடர்பிலேயே குறித்த நபர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார். முன்விரோதம் காரணமாகவே வயோதிபர் ஒருவர் மீது அசிட் வீசப்பட்டதுடன், வாளால் வெட்டிய சம்பவமும் இடம்பெற்றது.

அச்சம்பவத்தில், அதே இடத்தினைச் சேர்ந்த அப்துல் காதர் முகம்மது அலிம் நிஹார் (வயது 53) என்ற வயோதிபர் படுகாயமடைந்த நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இச்சம்பவம் தொடர்பாக புலன் விசாரணை மேற்கொண்ட வேளை, சம்பவத்துடன் 6 பேர் தொடர்புபட்டுள்ளதாகத் தெரிய வந்தது. அதில், ஏனைய நால்வர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் அம்பாறை பகுதியில் தலைமறைவாகியிருந்த நிலையில், அம்பாறை கெக்கராவ பகுதியில் வைத்தே அம்பாறை பொலிஸாரின் உதவியுடன், பிரதான சந்தேக நபரை கைதுசெய்துள்ளதுடன், அவர் பயன்படுத்திய முசக்கரவண்டியையும் கைப்பற்றியுள்ளதாக அவர் கூறினார்.

அத்துடன், வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரான இவர் நாவாந்துறைப் பகுதியைச் சேர்நதவர் என்றும் விசாரணையின் பின்னர் அவரை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (25)

# அருணோதயக் கல்லூரி மாணவிகள் தேசிய மட்டத்தில் முதலிடம்





(யாழ்ப்பாணம்)

தேசியமட்ட தமிழ்மொழித் தினப் போட்டிகளில் அருணோதயக் கல்லூரி மாணவிகள் தே. உமையாளினி மற்றும் ஸ்ரீ.வேதிகா ஆகியோர் முதலிடங்களைப்பெற்று தங்கப்பதக்கங்களைத்தமதாக்கிக் கொண்டனர். உமையாளினி பிரிவு நான்கில் கட்டுரையாக்கத்தில் முதலாமிடத்தையும் வேதிகா பிரிவு நான்கில் சிறுகதையாக்கத்தில் முதலாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர். இவர்களுள் உமையாளினி கடந்த 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளிலும் தேசிய மட்டத்தில் தமிழ்மொழித் தினப் போட்டியில் தங்கம் வென்று சாதனை படைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.


# பூந்தோட்டம் விபத்தில் சிறுமி உட்பட ஐவர் காயம்

(வவுனியா)

வவுனியா பூந்தோட்டம் வீதியில் இடம்பெற்ற விபத்தில் 5 பேர காயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

பூந்தோட்டத்தில் இருந்து வவுனியா நோக்கி வந்துகொண்டிருந்த முச்சக்கரவண்டி முன்னால் சென்ற துவிச்சக்கர வண்டியை முந்திச் செல்ல முற்பட்டபோது வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக முச்சக்கரவண்டியில் சென்ற நால்வரும் துவிச சக்கரவண்டியில் பயணித்துக்கொண்டிருந்த சிறுமியும் காயமடைந்துள்ளனர். இவ்விபத்து தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.



யாழ். மாதகல் பிரதேச கடற்பரப்பில் இரட்சத மீன் ஒன்று அப் பகுதி மீனவர்களின் வலையில் சிக்கிய நிலையில் கரைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. மீன்பிடித் தொழிலுக்காக நேற்று அதிகாலை மாதகல் பகுதியில் இருந்து சென்ற இருவரது வலையிலேயே இம்மீன் சிக்கியுள்ளது. சுமார், 8 அடி நீளமும் 1000 கிலோ எடையும் கொண்ட இந்த மீனை பெருமளவான மக்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டு வருகின்றனர்.

# அழகியல்பாட பயிற்சிக்காக ஆசிரியர்கள், மாணவர்கள் இந்தியாவுக்கு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் அழகியல் பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை அழகியற்பயிற்சிக்காக இந்தியாவிற்கு அனுப்ப தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.

தேசிய ரீதியில் நடைபெற்ற தமிழ்தினப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், தேசிய ரீதியில் நடைபெற்ற தமிழ்த் தினப் போட்டியில் வடமாகாண மாணவர்கள் 36 பதக்கங்களைப் பெற்றது மிக மகிழ்ச்சியளிக்கின்றது. கற்றல் செயற்பாட்டுடன் இணைந்த கலை மற்றும் விளையாட்டுத் துறைகளிலும் மாணவர்கள் சிறந்து விளங்கவேண்டும்.

வடமாகாணத்தில் 500 இற்கும் மேற்பட்ட அழகியல் பாட ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் மூலம் வடமாகாணத்தில் கலைப்பாடங்களை வளர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் இங்குள்ள அழகியற்பாட ஆசிரியர்களை இந்தியாவிற்கு அனுப்பி அங்கு அவர்களுக்கான பயிற்சிகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

அத்துடன், தேசிய ரீதியில் நடைபெற்ற தமிழ்த் தினப்போட்டியில் வெற்றிபெற்ற 15 மாணவர்களை இந்தியாவிற்கு அனுப்பி அங்கு அழகியற் கலை சம்பந்தமான பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அங்கு செல்லவுள்ள மாணவர்களை வலயக் கல்விப் பணிப்பாளர்கள் தெரிவு செய்வதுடன் அடுத்த மாதம் நிறைவுக்குள் இந்தியா செல்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்று ஆளுநர் தெரிவித்தார்.

# காப்புறுதி தொகையை மாதாந்தம் கட்டுவதற்கு வழிவகை செய்யவேண்டும்

## மன்னார் மீனவர்கள் கோரிக்கை

(மன்னார்)

சகல மீன்பிடிப்படகுகளும் காப்புறுதி செய்யப்பட வேண்டும் எனவும் இல்லாவிடின் கடற்றொழிலாளர்கள் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள் எனவும் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளதால் மன்னார் மீனவர்களிடையே பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக விசனம் தெரிவித்த கடற்றொழிலாளர்கள், காப்புறுதி செய்தலின் நன்மைகளை தாம் விளங்கியுள்ள போதிலும் ஒரே தடவையில் முழு காப்புறுதிக் கட்டுப்பணத்தையும் செலுத்தவேண்டுமென நிர்பந்திப்பது நியாயமற்றதெனக் கூறினர்.

காப்புறுதிக் கட்டுப்பண்த்தை தவணை முறையில் கட்ட ஏற்பாடு செய்ய வேண்டுமெனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அண்மையில் நாட்டின் பல பாகங்களிலும் உண்டான கடல் கொந்தளிப்பு காரணமாக பல உயிர்கள் பலியானதையும் வள்ளங்கள் சேதமடைந்ததையும் கருத்திலெடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டதாக மன்னார் உதவி மீன்பிடி பணிப்பாளர் கூறினார்.

கடல் கொந்தளிப்பு காரணமாக மன்னார் மீனவர்கள் பல துன்பங்களுக்கு ஆளாகினர். இதற்கு மேலாக இந்திய மற்றும் தென்பகுதி மீனவர்கள் பெருமளவில் வந்து மன்னார் கடற்றொழிலாளர்களின் பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகளில் மீன்கள் பிடிப்பதனால் மன்னார் மீனவர்களின் வாழவாதாரம் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கச்சதீவை மீட்க கருணாநிதி வழக்கு கண்துடைப்பு என்கிறார் ஜெயலலிதா



கச்சதீவை மீட்பதற்காக தி.மு.க தலைவர் கருணாநிதி உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்து இருப்பது கண்துடைப்பு நாடகம் என்று முதலமைச்சர் ஜெயலலிதா குற்றம்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், 1974ஆம் ஆண்டு தி.மு.க ஆட்சியின் போது .கச்சத்தீவு இலங்கைக்கு தாரை வார்க்கப்பட்டதை திமுக தலைவர் கருணாநிதி தடுக்க முயற்சிக்காதது ஏன் என்றும் கேள்வி எழுப்பியுள்ளார். கச்சதீவை மீட்பதற்காக அ.தி.மு.க ஆட்சியின் போது சட்டப் பேரவையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதாக தெரிவித்துள்ள அவர், கருணாநிதி முதலமைச்சராக இருந்த போது கச்சதீவை திரும்பப் பெறுவதற்காக ஒரு துரும்பை கூட கிள்ளிப்போடவில்லை என்று குற்றம் சாட்டியுள்ளார்.

தற்போது கச்சதீவை மீட்பதற்காக உச்சநீதிமன்றத்தில் வழக்குத்தொடர்ந்துள்ள கருணாநிதி தாரைவார்க்கப்படும் முன்பே இந்தவழக்கை தொடர்ந்து இருந்தால் மத்தியஅரசின் செயற்பாடு தடுத்து நிறுத்தப்பட்டு இருக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மத்தியிலும் மாநிலத்திலும் ஆட்சியில் இருந்தபோது கச்சதீவை மீட்பதற்காக நடவடிக்கை எடுக்காத கருணாநிதி ஆட்சி அதிகாரம் போன பிறகு உச்ச நீதிமன்றத்தில் வழக்குத்தொடுப்பது மக்களை ஏமாற்றும் செயல் என்றும் முதலமைச்சர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

உலகச் செய்திகள்

# 65 ஆயிரம் கோடி ரூபா செலவில் சீன எல்லையில் படைக்குவிப்பு

சீன எல்லையில் நிலவும் அசாதாரண சூழ்நிலையை கருத்தில் கொண்டு எல்லை முழுவதும் வீரர்களைக் குவிக்க மத்திய அரசு முடிவெடுத்துள்ளது. பிரதமர் தலைமையிலான பாதுகாப்புக்கான அமைச்சரவை குழுக்கூட்டத்தில் இதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. எல்லையில் புதிய படைப்பிரிவை ஏற்படுத்தவும், கூடுதலாக 50 ஆயிரம் வீரர்களை பாதுகாப்புப்பணியில் ஈடுபடுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. ரூ.65,000 கோடியில் இந்த திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது. இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக மேற்கு வங்க மாநிலம் பனாகரில் படைப்பிரிவுக்கு புதிய தலைமையகம் ஏற்படுத்தப்படவுள்ளது.

இங்கு விமானப்படை வீரர்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பர். பிகார் மற்றும் அசாமில் இரண்டு மண்டல அலுவலகங்களும் அமைக்கப்பட உள்ளன. சுமார் 1.3 இலட்சம் வீரர்களைக்கொண்டு இந்த அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கை இராணுவ பலத்தை மேலும் அதிகரிக்கும் என்று நம்பப்படுகிறது.

எல்லைப்பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் குறித்து இந்தியா - சீனா இடையே பேச்சுவார்த்தை தொடங்கவுள்ள நிலையில், மத்திய அரசு இந்த முடிவை எடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# நிறையைக் குறைத்தால் பரிசாக கிடைக்கும் தங்கம்

துபாய் அரசு அறிவிப்பு



உடல் எடையில் ஒரு கிலோ வைக்குறைத்தால், ஒரு கிராம் தங்கம் பரிசளிக்க இருப்பதாக கவர்ச்சிகரமான திட்டம் ஒன்றை அறிவித்துள்ளது துபாய் அரசு. இன்று மனிதனுக்கு பெரும் எதிரியாக இருப்பது உடல் பருமன் தான். அதன் காரணமாகவே பலருக்கு இளமையிலேயே பல நோய்கள் உண்டாகி மரணம் கூட நேரிடுகிறது. துபாயில் வாழ்பவர்களின் ஆரோக்கியத்தைப்பேணும் வகையில் துபாய் அரசு உடல் எடையைக் குறைத்தால் தங்கம் என அறிவித்து பரபரப்பை கிளப்பியுள்ளது. துபாயில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய சுகாதாரத்திட்டம் தான், இந்த ஒரு கிலோ எடையைக் குறைத்தால் ஒரு கிராம் தங்கக் காசு திட்டம். இது, உடல பருமன் நோயால் மக்களுக்கு ஏற்படும் பக்க விளைவுகளை கட்டுப்படுத்தும் நோக்கத்தில் உருவாக்கப்பட்ட திட்டமாம்.

இந்தத் திட்டத்தில் வெற்றி பெற விரும்புபவர்கள் முதலில் தற்போதைய தங்களது எடையை இன்றைய தினத்திற்கு முன்னர் பரிசோதித்து பதிவு செய்து கொள்ள வேண்டுமாம். அடுத்து வரும், ஒருமாத காலத்திற்குள் குறைந்தபட்சமாக 2 கிலோ அல்லது அதற்கு மேற்பட்ட உடல் எடையை குறைத்துக் காட்டுபவர்களுக்கு கிலோவுக்கு ஒரு கிராம் வீதம் தங்கம் பரிசாக வழங்கப்படும் எனவும், இதில் பங்கு பெற உச்சவரம்பு ஏதுமில்லை எனவும் அரசு அறிவித்துள்ளது. இதன் மூலம், மக்கள் துரித உணவகங்களில் அதிகம் சாப்பிடுவதை கைவிட்டு, உடற்பயிற்சியின் மீது ஆர்வம் காட்டுவர் என துபாய் அரசு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

# பழைய கார் வியாபாரிக்கு 92 இலட்சம் கோடி டொலர்





அமெரிக்காவைச்சேர்ந்த கிரிஸ் ரெனால்ட்ஸ் (56) என் பவர் பழங்கால கார் உதிரிப்பாகங்களை வாங்கி விற்கும் தொழிலை செய்து வருகிறார். இணையத்தளம் மூலமாக இந்தத் தொழிலை செய்ய வசதியாக "ஒன் லைன் பாங்கிங் எனப்படும் உடனடி பணப்பறிமாற்ற நிறுவனமான பேபால் நிறுவனத்தில் இவர் கணக்கு தொட்ங்கியுள்ளார்.

கடந்த மாதத்தின் கணக்கு இறுதி அறிக்கையை பே பால் நிறுவனம் கிரிஸ் ரெனால்டுக்கு அனுப்பி வைத்தது.இதைக் கண்ட அவருக்கு இன்ப அதிர்ச்சியில் மூச்சே நின்று விடுவது போல் ஆகிவிட்டது. அவரது கணக்கில் கையிருப்பாக 92 இலட்சம் கோடி அமெரிக்க டொலர் இருப்பதாக அந்த மாத அறிக்கை குறிப்பிட்டது.

பே பால் நிறுவனத்தில் 10 ஆண்டுகளுக்கு மேலாக கணக்கு வைத்திருக்கும் கிரிஸ் ரெனால்ட், இதுவரை இந்தக்கணக்கின் மூலம் மாதமொன்றுக்கு 100 டொலர்களுக்கு மேல் நான் வரவு - செலவு செய்தது கிடையாது. என் கணக்கில் இவ்வளவு பெரிய தொகை இருப்பதாக அறிக்கை வந்ததும், நான் வங்கிக்கு இவ்வளவு பணம் கட்ட வேண்டுமா? என்று பயந்து விட்டேன்.பிறகுதான் என் கணக்கில் இந்தத் தொகை பற்றாகி இருப்பது தெரியவந்தது. உடனடியாக ஒன் லைன் மூலம் என் கணக்கு விபரத்தை சரிபார்த்த போது எனது கையிருப்பு பூஜ்ஜியம் டொலராக இருந்தது என்கிறார்

கணனிக் குளறுபடியால் இந்தத் தவறு நேர்ந்து விட்டதாக பே பால் நிறுவனம் அறிவித்துள்ளது.உண்மையாகவே இவ்வளவு பெரிய தொகை உங்களுக்கு கிடைத்து விட்டால் என்ன செய்வீர்கள்? என்று அவரிடம் கேட்டபோது, நான் சமூகப் பொறுப்பு மிகுந்த குடிமகன். முதலில் அமெரிக்காவின் எல்லாக் கடனையும் அடைத்துவிட ஏற்பாடு செய்வேன் என்று சிரித்துக் கொண்டே தெரிவித்தார்.

# வாலியின் உடல் நிலை மோசம் கவலையில் திரையுலகம்




கவிஞர் வாலி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு கிட்டதட்ட நாற்பது நாட்களாகி விட்டது. இதில் சுமார் முப்பது நாட்களுக்கு மேலாக அவர் அவசர சிகிச்சைப்பிரிவில் இருந்து வருகிறார். கடந்த ஜூன் 7 ஆம் திகதி குமுதம் இதழில் வாலி எழுதி வெளிவந்த அழகிய சிங்கர் இலக்கிய புத்தகத்தின் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டார் சுமார் ஐந்து மணி நேரம் அந்த நிகழ்ச்சியில் தொடர்ந்து அமர்ந்திருந்தார். மறுநாள் டைரக்டர் வசந்த பாலனின் தெருக்கூத்து படத்திற்காக அவர் பணியாற்றும்படி ஆனது.

ஏ.ஆர்.ரஹ்மானின் இசைக் கூடத்திற்கு வரவழைக்கப்பட்ட அவர் சுமார் ஏழு மணி நேரம் அங்கு அமர்ந்து படம் குறித்தும், எடுக்கப்பட்ட விதம் குறித்தும் பேசியபடியே பாடல் ஒன்றை எழுதிக்கொடுத்தாராம். அன்றிரவே அவருக்கு உடல்நிலை மோசமாகிவிட்டது. உடனடியாக அப்பலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் நுரையிரல் தொற்றுதான் காரணம் என்பதை கண்டறிந்த மருத்துவர்கள் அவருக்கு தீவிர சிகிச்சை அளித்தார்கள். இரண்டொரு நாளில் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டு சிறப்பு விடுதிக்கு மாற்றப்பட்டார் வாலி.

பின்னர் மீண்டும் அவருக்கு உடல்நிலை மோசமானது. உடனடியாக தீவிரசிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டார். சுமார் முப்பது நாட்களுக்கும் மேலாக அவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்து வருகிறார். இந்த நிலையில் நேற்று முன்தினம் கவிஞர் வாலியின் உடல்நிலை மோசமானது. உடனடியாக அவருக்கு வென்டிலேட்டர் பொருத்தப்பட்டுள்ளது. மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகிறார்கள். வாலியின் உடல்நிலை பற்றி அறிந்த திரையுலகம் கடும் சோகத்தில் ஆழ்ந்துள்ளது.

# பிரேசில் இளைஞர் தினத்திற்கு திறந்த ஜீப்பில் செல்லும் "போப்"



பிரேசில் தலைநகர் ரியோடி ஜெனிரோவில் உலக இளைஞர் தினம் கொண்டாடப்பட உள்ளது.

ஒவ்வொரு ஆண்டின் குருத்தோலை ஞாயிறன்று உலக இளைஞர்களின் திருவிழா என்று வர்ணிக்கப்படும் இந்த விழா நடைபெறுவது வழக்கம். இந்த ஆண்டு பிரேசில் தலைநகர் ரியோடி ஜெனிரோவில் நடைபெறும் இந்த விழாவில் 170 நாடுகளைச்சேர்ந்த சுமார் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள் திரள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த விழாவில் இளைஞர்கள் பங்கேற்கும் பிரமாண்ட பேரணி நடைபெற உள்ளது. இந்தப் பேரணிக்கு கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் மதகுருவான பாப்பரசர் பிரான்சிஸ் தலைமை ஏற்கவுள்ளார்.

இதற்காக, எதிர்வரும் திங்கட்கிழமை பாப்பரசர் பிரான்சிஸ் ரியோ டி ஜெனிரோ நகருக்குச்செல்கிறார். 28ஆம் திகதி வரை அங்கு தங்கியிருக்கும் அவர் இந்தப் பேரணி தவிர பல்வேறு நிகழ்ச்சிகளிலும் பங்கேற்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் வரை பதவியில் இருந்த பாப்பரசர்கள் வெளிநாடுகளில் சுற்றுப்பயணம் செய்யும் போது வத்திக்கான் அரண்மனையில் இருக்கும் குண்டு துளைக்காத கார்களைப் பயன்படுத்தி வந்தனர்.

ஆனால், அந்த மரபுகளை தகர்த்து எறிந்து, திறந்த ஜீப்பில் சுற்றுப்பயணம் செய்ய பாப்பரசர் பிரான்சிஸ் முடிவு செய்துள்ளதாக வத்திக்கான் அரண்மனை அறிவித்துள்ளது.

திறந்த ஜீப்பில் செல்வதன் மூலம் மக்களை நெருக்கமாக சந்திப்பதை பாப்பரசர் விரும்புகிறார் என அரண்மனை வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.



பீகார் மாநிலம் சாப்ரா அருகே தர்மாசதி கண்டமான் கிராமத்தில் பள்ளிக்கூடத்தில் மதியஉணவு உட்கொண்ட 22 மாணவர்கள் பலியானார்கள். அவர்களுக்கு பாட்னா பள்ளி மாணவர்கள் மெழுகுதிரி ஏற்றி அஞ்சலி செலுத்துவதனைக் காணலாம்.

# நாம் தோற்றுப்போன சமூகம் அல்ல

# தவறான கோட்பாடுகளே தோல்வி கண்டுள்ளன

## - முல்லை மக்கள் சந்திப்பில் அமைச்சர் டக்ளஸ்

(முல்லைத்தீவு)

நாம் தோற்றுப்போன சமூகம் அல்ல தவறான கோட்பாடுகளும், வழிநடத்தல்களுமே தோற்றுப்போயின என்று முல்லையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அத்துடன் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வளங்கள் எதிர்காலங்களில் சரியான முறையில் பயன்படுத்தப்பட வேண்டுமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட மக்கள் பிரதிநிதிகளுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சந்தர்ப்பங்களையும் வாய்ப்புக்களையும் எமது மக்கள் சரியாக பயன்படுத்தும் பட்சத்தில் அபிவிருத்திகள் மேலும் முன்னேற்றம் காணும் என்பதுடன் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்த முடியும். எமது சமூகம் ஒருபோதும் தோற்றுப் போன சமூகம் அல்ல தவறான கருத்துக்களும் வழிநடத்தல்களும் தான் தோற்றுப் போயின. அது மட்டுமல்லாது எமது மக்கள் கடந்த காலங்களில் அனுபவித்த இழப்புக்களும் பேரழிவுகளுக்கும் சுயலாப அரசியல்வாதிகளின் குறுகிய நோக்கங்களே முக்கிய காரணமாக அமைந்துள்ளன.

அந்த வகையில் இழப்புக்களுக்கும் பேரழிவுகளுக்கும் மத்தியில் இங்கு கிடைக்கப்பெற்றுள்ள இச் சமாதான சூழலை பாதுகாத்து பயன்படுத்தி முன்னேற வேண்டும். இம்மாவட்டத்தில் கடல் மற்றும் தரைவளங்கள் அதிகமாக இருக்கின்ற போதிலும் அவற்றை எதிர்காலங்களில் எமது மக்களின் மேம்பாட்டிற்காக உரிய முறையில் பயன்படுத்தப்பட வேண்டுமென்பதில் எமக்கு அக்கறையும் கவனமும் இருக்கின்றது.

எனவே எமது மக்கள் எதிர்காலங்களில் சரியான வழி நின்று சேவை செய்பவர்களை ஆதரிக்கும் பட்சத்தில் நிச்சயம் மக்களது பொருளாதாரம் மட்டுமல்லாது வாழ்வாதாரத்தையும் மேம்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென்றும் சுட்டிக்காட்டினார்.

இதன்போது ஈ.பி.டி.பி.யின் மாவட்ட அமைப்பாளர் ஜெயராஜ் (கிருபன்) உடனிருந்தார்.

அதேவேளை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் வாழ்வின் எழுச்சி திட்டத்தின் செயற்திட்டங்கள் தொடர்பிலான மீளாய்வுக் கலந்துரையாடல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் மேற்படி விடயம் தொடர்பிலான இக்கலந்துரையாடல் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழான கைத்தொழில் அபிவிருத்தி சபை, பனை அபிவிருத்தி சபை ஆகிய நிறுவனங்களினால் முன்னெடுக்கப்பட்டு வரும் செயற்திட்டங்கள் தொடர்பில் அமைச்சர் துறைசார்ந்தோரிடம் கேட்டறிந்து கொண்டார்.

குறிப்பாக குறித்த நிறுவனங்களின் கீழ் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் குடிசைக் கைத்தொழில் துறைகளின் விரிவாக்கம் தொடர்பாகவும் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டது.

இதில் பனந்தொழில் துறைசார்ந்த பயிற்சி நெறிகளை நிறைவு செய்தவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன. இதில் மாவட்ட அரசாங்க அதிபர் வேதநாயகன், மேலதிக அரசாங்க அதிபர் மோகன்றாஸ், பனை அபிவிருத்தி சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம், ஈ.பி.டி.பி.யின் முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளர் ஜெயராஜ் (கிருபன்) ஆகியோரும் உடனிருந்தனர்.

## ஓட்டுசுட்டானில்...

மேம்படுத்துவதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் அதேவேளை, இங்கு சுதந்திர மான இயல்புச் சூழலை ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

குறிப்பாக இம்மாவட்டத்தின் அபிவிருத்தி மேம்பாட்டு திட்டங்களுக்கு மக்களது ஒத்துழைப்பும், ஒத்தாசையும் முக்கியமானது என்றும் சுட்டிக்காட்டினார்.

கூழாம்முறிப்பிலுள்ள ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலையானது 1990 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக செயலிழந்துள்ள நிலையில் அதனை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ் மீள இயக்குவதற்கு விரைவான நடவடிக்கைகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது பனை அபிவிருத்தி சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம், ஈ.பி.டி.பி.யின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா, ஈ.பி.டி.பி. யின் முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளர் ஜெயராஜ் (கிருபன்) ஆகியோர் உடனிருந்தனர்.

## கூட்டமைப்பின்...

கூட்டமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் 5 கட்சிகளில் இருந்தும் வேட்பாளர் தெரிவு செய்வதில் குழப்பநிலை ஏற்பட்டதால் மீண்டும் நாளை கூடி தீர்மானம் எடுக்கவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் மேலும் கூறினர்.

இந்தத் தேர்தலில் போட்டி யிடுவதற்கு யாழ் மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் வேட்பாளர் தெரிவு மற்றும் கட்சிப்பங்கீடு போன்றவற்றில் அனைத்துக்கட்சிகளும் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளதுடன் யாழ். மாவட்டத்தில் அங்கத்துவக் கட்சிகளின் பங்கீடு தொடர்பில் இழுபறி நிலை காணப்படுவதால் இறுதித் தீர்மானம் எடுப்பதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாக கூட்டமைப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக இந்தத் தேர்தலில் தொடர்பில் போட்டியிடுவதற்கு கட்சிகளுக்கு நேற்றைய கலந்து ரையாடலில் தமிழரசுக்கட்சிக்கு 9 பேரும், சுரேஷ் பிறேமச்சந்திரனின் ஈ.பி.ஆர்.எல்.எப். சார்பில் 4 பேரும் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் 3, ரெலோ அமைப்பின் சார்பில் 3 பேரும் புளொட் அமைப்பின் சார்பில் 2பேரும் என்று கட்சிப் பங்கீடு வழங்க தீர்மானிக்கப்பட்டது.

இதனை சில கட்சிகள் ஏற்றுக்கொள்ளாத நிலையில் இறுதித் தீர்மானம் எட்டமுடியாததை அடுத்து அனைவரும் கலைந்து சென்றனர்.

அதேவேளை கூட்டமைப்பின் சார்பில் வடமாகாணசபை தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்கள் யார் என்பது இன்றைய தினமே முடிவு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கின்ற போதிலும் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் ஒவ்வொரு கட்சிகளுக்குமான பங்கீடு மற்றும் பொதுவான வேட்பாளர்கள் எத்தனை பேர் என்பது பற்றி முடிவு செய்யப்பட்டிருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

யாழ். மாவட்டத்தில் தமிழரசுக்கட்சியின் சார்பில் யாழ். பல்கலைக்கழக மாணவர் பேரவையின் முன்னாள் செயலாளர் தர்சானந் பரமலிங்கம், ஊடகவியலாளர் வித்தியாதரன், பேராசிரியர் சிவச்சந்திரன், முன்னாள் யாழ். மாநகரசபை ஆணையாளர் சிவஞானம், ஆகியோரும், ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் சுரேஷ் பிரேமச்சந்திரனின் சகோதரரும் கொ[illegible]பு பல்கலைக்கழக விரிவுரையாளருமான சர்வேந்திரா, ஐங்க[illegible]நேசன், ஆகியோரும் ரெலோ சார்பில் சிவாஜிலிங்கமும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் சங்கையாவும் போட்டியிட உள்ளதாக தெரியவருகிறது.

## காணிகளின்...

பீ.எப்.பி.உதயகாந்த் தெரிவித்துள்ளார். இதன் முதற்கட்டம் கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

www.survey.gov.lk என்ற இணையத்தள முகவரி ஊடாக காணிகளின் வரைபடங்களை பரிசீலிக்க முடியும் என்றும் நில அளவையியலாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## ஒன்பது கிலோ...

தமது கணவன்மார்களுக்குத் தெரியாமல் நகைகளை கொடுத்து ஏமாற்றமடைந்தவர்கள் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.

இந்த முறைப்பாட்டின் பிரகாரம், யாழ். சிறுகுற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் குறித்த இரு பெண்களையும் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து விசாரணை மேற்கொண்டுள்ளனர். அந்த விசாரணையின் பிரகாரம் குறித்த பெண்கள் மோசடி செய்த தங்க நகைகளை தவணை முறையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மீள செலுத்துவதாக பொலிஸாருக்கு வாக்குறுதி அளித்திருந்தனர்.

எனினும் குறித்த இரு பெண்களும் பாதிக்கப்பட்ட வர்களிக்கு நகைகளை மீள கொடுப்பதற்கு தயக்கம் காட்டுவதுடன் மோசடி செய்த இரு பெண்களும் பல்வேறு தரப்பட்ட பொலிஸாருடன் தொடர்பு கொண்டு, நகைகளை மீளக் கையளிப்பதற்கான காலத்தினை பின்தள்ளி வருகின்றனர்.

இதனால், கணவன்மார்களுக்குத் தெரியாமல் நகைகளை கொடுத்து ஏமாற்றமடைந்த பெண்கள் தமது குடும்பங்களுக்குள் பல்வேறுபட்ட நெருக்கடிகளை தாம் சந்திப்பதாக பாதிக்கப்பட்ட பெண்கள் கூறினார்கள்.

இவ்வாறு தாம் இழந்த நகைகளை காலம் தாழ்த்தாது பெற்றுத் தருமாறும் பாதிக்கப்பட்ட பெண்கள் பொலிஸாரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (25)

## வெதுப்பகங்களில்....

இவற்றில் இரண்டு வெதுப்பகங்களும், ஒரு உணவகமும் மூடப்பட்டு சுகாதாரத்துக்கு ஏற்றவாறு திருத்தவேலைகள் முடிவடைந்த பின்னர் சுகாதாரப் பரிசோதகர் மூலம் நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப் பட்டது.

நீர்வேலிப் பகுதியில் ஒரு வெதுப்பகத்தைச் சேர்ந்த இரண்டு பேருக்கு 15 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அத்துடன் இவ் வெதுப்பகம் மூடப்பட்டு சுகாதார நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் சுகாதார பரிசோதகர் மூலம் நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் உத்தரவிடப்பட்டது.

இருபாலையில் உள்ள வெதுப்பகத்தைச் சேர்ந்த இரண்டு பேருக்கு 12 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றவில்லை என அடையாளம் காணப்பட்ட வெதுப்பகங்கள், உணவகங்கள் மீது கடந்த மாதம் 10 ஆம் திகதி கோப்பாய் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையைச் சேர்ந்த சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் மேற்பார்வை சுகாதார பரிசோதகர்கள் ஆகியோரால் இவர்கள் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (137)

## முதல்வர்...

தெரிவித்துள்ளனர். கூட்டமைப்பின் தலைமை தனது தீர்மானத்தை உடன் மீள்பரிசீலனை செய்யவேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

கொழும்பிலிருந்து கடந்த செவ்வாய் காலை வவுனியா சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் மாவையை அம்மாவட்டத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் நேரில் சந்தித்து தமது ஆதங்கத்தைத் தெரிவித்திருந்தனர்.

அதன் பின்னர் மாலை யாழ். பயணமான அவரை, கட்சியின் யாழ். கிளை அலுவலகத்தில் யாழ்.பல்கலைக்கழக பிரமுகர்கள், தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் பலர் நேரில் சந்தித்தனர்.

கூட்டமைப்பின் தலைமை தனது தீர்மானத்தை உடன் மீள் பரிசீலனை செய்யவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா பதிலளிக்கும்போது, நான் என்றும் மக்கள் பக்கம்தான். எனினும், இந்த விடயத்தில் கட்சியின் ஒற்றுமைக்காக விட்டுக்கொடுத்துள்ளேன் என்று தெரிவித்தார்.

## கவிஞர் வாலி...

நல்லவன் வாழ்வான் படத்தில் முதல் முதலாக பாடல் எழுதினார் வாலி.

பின்னர் எம்.ஜி.ஆரின் தர்பாரில் ஆஸ்தான கவிஞராக கடைசி வரை இருந்தார். திரையுலகில் அதிக பாடல்களை எழுதிய சாதனையாளர் வாலி இதுவரை 10000 பாடல்களுக்கும் மேல் அவர் எழுதியுள்ளார்.

ஏற்கனவே இதய அறுவை சிகிச்சை செய்து கொண்ட வாலிக்கு, நுரையீரல் தொற்று மற்றும் அதிகமான சளியின் காரணமாக உடல்நிலை பாதிக்கப்பட்டது. சென்னை தேனாம்பேட்டையில் உள்ள அப்பலோ மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்தார்.

40 நாட்களாக அவருக்கு அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. கடந்த சில தினங்களுக்கு முன்பு மூச்சுத் திணறல் ஏற்பட்டதால் 2 நாட்களாக செயற்கை சுவாசம் அளிக்கப் பட்டு வந்தது. இந்நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்று மாலை 5.00 மணிக்கு அவரது உயிர் பிரிந்தது. 1958 ஆம் ஆண்டு படங்களுக்கு பாடல்கள் எழுதத் துவங்கிய கவிஞர் வாலி இதுவரை ஆயிரம் படங்களுக்கு மேல் பாடல்கள் எழுதியுள்ளார்.

பத்மஸ்ரீ மற்றும் தேசிய விருதுகளையும் பெற்றுள்ளார். சில படங்களுக்கு கதை வசனமும் எழுதியுள்ள வாலி, தமிழ் இலக்கியத்துக்கு தன் பங்களிப்பாக அவதார புருஷன் உள்ளிட்ட பல அரிய நூல்களை எழுதியுள்ளார்.

பொய்க்கால் குதிரை, சத்யா, ஹேராம், பார்த்தாலே பரவசம் உள்ளிட்ட படங்களில் நடிகராகவும் பாராட்டுப் பெற் றுள்ளார். வாலியின் மனைவி சில ஆண்டுகளுக்கு முன் மறைந்துவிட்டார்.

வயது வித்தியாசம், ஈகோ மோதல் எதுவுமின்றி அனைவருடனும் இனிமையாகவும் உரிமையாகவும் பழகிய கவிஞரின் மறைவு தமிழ் திரையுலகை அதிர்ச்சியிலும் வேதனையிலும் ஆழ்த்தியுள்ளது. (மற்றுமொரு செய்தி உள்ளே)

# வடக்கு மாகாண தேர்தல் கொழும்பில் விழிப்புணர்வு



வடமாகாணசபைத் தேர்தலுக்கு ஆதரவு தெரிவித்து கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நேற்று வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு சோசலிஸ மக்கள் கூட்டணியின் ஏற்பாட்டில் பாரிய ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் சோசலிஸ மக்கள் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் உட்படப் பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

இதன்போது சமசமாஜக் கட்சியின் தலைவர் அமைச்சர் திஸ்ஸ வித்தாரண, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் அமைச்சர் டியூ குணசேகர, ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார ஆகியோர் கலந்துகொண்டு இவ்விடயம் சம்பந்தமாக மக்களுக்குத் துண்டுப்பிரசுரங்களையும் விநியோகித்தனர்.

வடமாகாணசபைத் தேர்தலை நடத்தி, மாகாணசபை முறைமையுடன் ஐக்கிய இலங்கையைப் பாதுகாப்போம் என்ற தொனிப் பொருளில் நடைபெறும மேற்படி ஆர்ப்பாட்டத்தில் தேச விமுக்தி ஜனதா பெரமுன, ஸ்ரீலங்கா மக்கள் கட்சி ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர் எனத் தெரியவருகின்றது.

அதேவேளை, பொலிஸ், காணி அதிகாரங்களுடன் வடமாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், இந்தியாவின் அழுத்தங்களுக்கு எதிராகவும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் இன்று கொழும்பில் கருத்தரங்கொன்றை ஏற்பாடு செய்துள்ளது

# திருமண பந்தத்தில் கிரிக்கெட் அணித் தலைவர்



இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவர் அஞ்சலோ மெத்திவ்ஸ் மற்றும் சோனி சில்வா ஆகிய இருவரும் நேற்று திருமண பந்தத்தில் இணைந்து கொண்டனர்.

கொழும்பு, கொள்ளுபிட்டியில் அமைந்துள்ள சென்.மேரிஸ் தேவாலயத்தில் இவர்களது திருமணம் சிறப்பாக நடைபெற்றது. இவர்களது திருமணத்தின் சாட்சியாளர்களான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவும் கைச்சாத்திட்டனர்.

# கண்காணிப்பு ஆரம்பம்

PAFFREL

வடமாகாணத்தில், அடுத்த மாதம் முதல் தங்களின் உத்தியோகபூர்வ தேர்தல் கண்காணிப்பு பணிகளை ஆரம்பிக்க விருப்பதாக தேர்தல்கள் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் தெரிவித்துள்ளது.

அதன் வடமாகாண திட்டப் பணிப்பாளர் எஸ்.சிறிதரன் இதனைத் தெரிவித்துள்ளார்.

# மட்டுவில் வடக்கில் திருடர் தொல்லை அதிகம்

சாவகச்சேரி மட்டுவில் வடக்கு தோட்டவெளிகளில் அண்மைக்காலமாக நீர்க் குளாய்கள் திருடும் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

சந்திரபுரம் அம்பலாந்துறை சிலுவில் தோட்ட வெளிகளில் நீர் குழாய்கள், புட்வால்வுகள் அறுக்கபடுகின்றன. கடந்த 2 வாரகாலத்துக்குள் பத்துக்கும் மேற்பட்ட புட்வால்வுகள் அறுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான விசமத்தனமான வேலையால் விவசாயிகள் விசனம் அடைந்துள்ளனர். உழைத்து உண்ணாமல் கட்டாக்காலியாக சுற்றித்திரியும் மதுப்பிரியர்களே இவ்வாறான நாசகார வேலைகள் செய்வதாகவும் இவர்கள் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும். எனவும் அப்பகுதி விவசாயிகள் காரசாரமாக தமது கருத்துக்களை தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து பலமுறை பொலிஸில் முறையிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதிகளில் பகல் வேளைகளில் புது முகங்களின் நடமாட்டம் அதிகமாக காணப்படுவதாகவும் இரவு வேளைகளில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை புட்வால்வுகளை வெட்டுவதற்குப் பயன்படுத்திய உபகரணம் ஒன்று தோட்டக் கிணற்றுக்குள் தவறி விழுந்த நிலையில் திருடர்கள் கைவிட்டுச் சென்றதையடுத்து அந்த உபகரணங்கள் கண்டெடுத்த சம்பவம் ஒன்று கடந்த வாரம் சிறுவில் பகுதியில் நிகழ்ந்துள்ளது. (இ)

# ஆட்சேர்ப்புக்கு தடைவிதிப்பு

வடக்கு, மத்திய மற்றும் வடமேல் மாகாண சபைகளுக்கான தேர்தல் நடைபெறும் காலப் பகுதியில் அரச சேவையின் ஆட்சேர்ப்புக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மூன்று மாகாணங்களிலும் அரச சேவையுடன் தொடர்புடைய பதவி உயர்வுகளையும் இடைநிறுத்தியுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

அத்தோடு. தேர்தல் நடவடிக்கைகளுக்கு அரச சேவை சொத்துக்களை தவறான முறையில் பயன்படுத்துவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான விசேட சுற்றுநிருபமொன்றை வெளியிடவுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார். குறித்த சட்டங்களை மீறுவது குற்றமாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# மகனைக் கடித்து குதறினார் தந்தை

## போதை மயக்கத்தில் விபரீதம்

(அச்சுவேலி)

போதை தலைக்கு ஏறியதால் மகனை கடித்த சம்பவம் ஒன்று நேற்று இரவு அச்செழு மேற்கு சட்டக்கார பகுதியில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது.

அளவுக்கு அதிகமாக மதுபானம் அருந்தி விட்டு மனைவியை தாக்கியதனை அவதானித்த மகன் இடையில் சென்று தந்தையை தடுக்க முற்பட்டுள்ளார்.

இதனையடுத்து தந்தை அதிக போதையில் இருந்ததால் யார் என்று தெரியாத அளவிற்கு மகனை கடித்துக் குதறியுள்ளார். இச்சம்பவத்தால் பலத்த கடிகாயங்களுக்குள்ளான கஜன்சன் (வயது 13) யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸாருக்கு வழங்கிய தகவலைஅடுத்து கடித்துக்குதறிய தந்தையான அப்புத்துரை-செல்வராசா (வயது 44) என்பவரை குற்றத்தடுப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தன்னை மனைவியும், மகனும் கடுமையாகத் தாக்கியதாகவும் அதற்கு பதிலாகவே தான் மகனை கடித்து குதறியதாக தனது வாக்குமூலத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (15)

# வேடர்களின் தலைவருக்கு வி.ஐ.பி. அந்தஸ்து

வேடர்களின் தலைவர் ஊருவரிகே வன்னிலத்தோவுக்கு முக்கிய பிரமுகர் (வி.ஐ.பி.) அந்தஸ்தை அளித்துள்ள அரசாங்கம், அவருக்கான உத்தியோகபூர்வ வாகனம் ஒன்றையும் அளித்துள்ளது.

குறித்த வாகனம் தற்போது மஹியங்கனை பிரதேச செயலக அலுவலகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன், வேடர்களின் தலைவர் பயணங்களை மேற்கொள்ளும் போது இதனைப் பயன்படுத்திக கொள்ள முடியும். இதற்காக அவருக்கு நாளொன்றுக்கு 200 லீட்டர் வரையான பெட்ரோல் ஒதுக்கப்படுகிறது.

மேலும் வாகனத்தை செலுத்துவதற்கு ஒரு சாரதியும் எந்த நேரமும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதன்மூலம் வேடர்களின் தலைவர் வன்னிலத்தோ, இனி வரும் காலங்களில் நாட்டின் முக்கிய பிரமுகர்களில் ஒருவராக மாற்றம் பெற்றுள்ளார்.அரச அலுவலகங்களிலும் அவருக்கான மரியாதை கிடைக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பரிசளிப்பு விழா

பிளவத்தை அமெரிக்க மிஷன தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று பி.ப 2 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி கு.லோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவிற்கு சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செல்வி சாந்திரமரியாம் பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக பழைய மாணவனும், வட்டு இந்துக் கல்லூரி ஆசிரியருமான வீ.சிவகரனும், கௌரவ விருந்தினராக உடுவில் மகளிர் கல்லூரி ஆசிரியர் ர. அருள் ரமேஷம் கலந்து சிறப்பிக்க வுள்ளனர்.

விழாவிற்கு அயல்பாடசாலை அதிபர்கள், மாணவர்கள் பெற்றோர், பழைய மாணவர்கள் நலன் விரும்பிகள் அழைக்கப்பட்டுள்ளனர்.

# நவீன ஊடகத்துறை பயிற்சிக் கலந்துரையாடல்



நவீன ஊடகத்துறையும் அதற்கான பயிற்சிகளும் தொடர்பான கலந்துரையாடல் நாளை மறுதினம் ஞாயிற்றுக கிழமை காலை 10 மணிக்கு இணுவில் திரையரங்கம் முன்னால் உள்ள சீ.ஐ.எஸ் நிறுவன விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சூரியன் எப்.எம். செய்திப் பிரிவின் முகாமையாளர் எம்.இந்திரஜித் தலைமையில் நடைபெறும்.

இந்தக் கலந்துரையாடல் ஊடகத்துறையில் ஈடுபாடு உடைய ஆண், பெண் இருபாலாரும் பங்குபற்ற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஆஸஸ் தொடர்

இரண்டாவது தொடர்

முதலாம் நாள் ஆட்டம்

இங்கிலாந்து எதிர் அவுஸ்ரேலியா

இங்கிலாந்து- 289/7

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 யூலை 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.